# மல்லிகை

'MALLIKAI' PROGRESSIVE MONTHLY MAGAZINE

ஆசிரியர்: டொமினிக் ஜீவா



டிசம்பர் — 1991 விலை 10 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RANI GRINDING MILLS

219, MAIN STREET,

**MATALE**

SRi LANKA

PHONE: 066-2425

★

★

★

# VIJAYA GENERAL STORES

**(AGRO SERVICE CENTRE)**

DEALERS: AGRO CHEMICALS, SPRAYERS
FERTILIZER & VEGETABLE SEEDS

**No. 85, Sri Ratnajothy Sarawanamuthu Mawatha.**
**( Wolfendhal Street, ) COLOMBO-13.**

PHONE: 27011



மல்லிகை

ஆடுதல் பாடுதல் சித்திரம் கவியாதியினைய, கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவார்'

*'Mallikai' 'Progressive Monthly Magazine*

232 டிசம்பர் — 1991


# 26-வது ஆண்டு

## சில கருத்துகளை பகிர்ந்து கொள்ளுகின்றேன்.

சென்ற இதழில் நான் குறிப்பிட்டிருந்த மகிழ்ச்சியான செய்தி பற்றி மேலும் சுவைஞர்களுக்குத் தகவல் தர வேண்டியது முக்கியமாகும்.

மல்லிகை நிறுவன வடிவம் பெற்றுப் பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது. சொந்த மெஷின் ஸ்தாபித்ததுடன் வலு உற்சாகமாக எதிர்காலத் திட்டத்தைத் தீட்டினேன். பல்வேறு வகைப்பட்ட எழுத்தாளர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களினுடைய கையெழுத்துப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டேன். 'மல்லிகைப் பந்தல்' பதிப்பகத்தை மேலும் விஸ்தரித்து புதிய செயல் திட்டத்துடன் என்னை நானே தயாரித்துக் கொண்டேன்.

மின் சக்தியால் இயங்கும் அச்சு இயந்திரம், மின்சாரம் இல்லாத காரணத்தால் இயங்க முடியாத நிலை அறிந்து 'வாட்டர் பம்ப்' ஒன்றை பெற்று அத்துடன் இணைத்துக் கொண்டேன். அதை வாங்கி இணைத்த காலத்தில் மண்ணெண்ணெய் ரூபா 50 விற்றது. சில நாட்களுக்குள் கிடு கிடுவென விலை ஏறி வாங்க முடியாத வரைக்கும் சென்றது. அந்த விலை கொடுத்து எண்ணெய் வாங்கி அச்சடிப்பதென்பது கட்டுபடியாகாதொன்று. ஒரு திட்டம் போட, சூழ் நிலை மறுத்தான் திட்டம் போட்டு என்னைத் திக்குமுக்காட வைத்துவிட்டது.

இருந்தாலும் நான் சளைக்கவில்லை!

நீண்ட காலக் கற்பனைப் பொருளான சொந்த மெஷின் வாங்கி மல்லிகையில் பொருத்திய பின்னரும் கூட, எனது ஆவல் நிறைவேறவில்லையே என்ற மனத் தாங்கல் என்னை உலுப்பிவிட்டது

இதற்குள் ஆகஸ்ட் 91 இதழை வெளியிட்டு வைத்தேன்.

அந்த இதழ்களைச் சுமந்து கொண்டு ஒரு தடவை கொழும்பு சென்றிருந்தேன். மலையக எழுத்தாளர் சாரல் நாடனின் உருவத்தை அட்டைப் படமாகப் பிரசுரிக்கப்பட்ட அந்த இதழைப் பார்த்த கொழும்பு நண்பர்கள் பலர் அப்படியே பிரமித்துப்போய் விட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசமைப்புச் தகவல் ஒலிபரப்புச் சாதனங்கள் மூலம் நமது மண்ணைப் பற்றி அவர்கள் கற்பனை பண்ணியிருந்தனர். மேலும் வடக்கு ஒரு சுடுகாடு என அவர்கள் எண்ணியிருந்தனர். இந்தக் கற்பனைச் சித்தி த்தை ஓங்கி நிராகரித்து புதிய வீச்சுடன், புதிய நம்பிக்கையுடன் சொல்லப் போனால் அதுவும் ஒரு 'மினி' மலையக இதழைப் போல, இம்முறை மல்லிகை மலர்ந்திருப்பதைக் கண்டு சிலர் உணர்ச்சி வசப்பட்டு என்னுடன் உரையாடிக் களித்தனர்.

வழக்கமாகப் பழகும் ஜீவா என்று என்னைப் பார்ப்பதைவிட, வேறு கோணத்துடன், வேறு பார்வையுடன் என்னைப் பார்த்தனர். இவன ஆரடா — எப்பேர்ப்பட்ட மனுஷன் இவன்!' — என்பதாக இவர்களது பார்வை என்டனுன் பேசியது.

சூழ்நிலை கொஞ்சம் சாதகமாக அமைந்து, நான் நீண்ட நாட் களாக எதிர்பார்த்திருந்த அச்சு இயந்திரம் இயங்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்குமானால் இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் பல இலக்கிய அறுவடைகளைத் தமிழுக்குத் தந்திருப்பேன். பல புதிய புதிய நூல்களை தமிழுலகத்திற்கு அறமுகப்படுத்தியுமிருப்பேன்!

சர்வ நிச்சயமாக இப்பொழுதும் சொல்லுகின்றேன்: என்னு டைய திட்டங்களை நான ஒவ்வொன்றாக — வெற்றகரமாக — அறி முகப்படுத்தத்தான் போகின்றேன். இந்தத் தற்காலிகத் தடைகள எனக்கு ஒரு பொருட்டேயல்ல!

சமீப காலமாக நான் பல எழுத்தாளர்களைச் சந்தித்து வரு இன்றேன். நாடு பூராகவும் உள்ள, மேலை நாடுகளில் வசிக்கின்ற, தமிழீழத்தில் வாழுகின்ற ஏராளமான எழுத்தாளர்களுடன் நேர் முகச் சம்பாஷணையும், கடித மூலம் தொடர்பும வைத்துள்ளேன். அவர்கள் எங்களிடமிருந்து — இந்த மண்ணில் இருந்து — பல இலக் இயச் சாதனைகளை எதிர்பார்க்கின்றனர். நம்மால அதைச் சாதிக்க முடியும் என மனசார நம்புகின்றனர். 'இந்த நெருப்பு மழைப் பொழிவுக்கூடாக மல்லிகை போன்று இன்னும பல்வேறு இலக்கிய சஞ்சிகைகளை வெற்றிகரமாக வெளியிட்டு வரும் உங்களைப் போன் றவர்களால் பெரிக்ாகச் சாதிக்க முடியும் என கொழும்பில் சமீபத் தில் சந்தித்த ஓர் இலக்கிய நேர்ப் பேச்சு உரையாடலின் போது ஒரு நண்பர் குறிப்பிட்டார்.

இந்த மண்ணில் மலரும் கலை, இலக்கியங்களைப் பாதுகாத் திட வேண்டும் என்ற மனப் பக்குவம் நமது மக்களிடம் இன்று மேலோங்கி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. விற்பனைச் சந்தையில் எமது சகோதர எழுத்தாளர்களின் நூல்கள் அதிகளவு விற்பனையாவதையும், குறிப்பாக இளந் தலைமுறையினர் விரும்பி வாங்குவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

வருங்காலத்தில் நல்லதொரு சூழ்நிலை தோன்றி வளரத்தான் போகின்றது என்பதற்கான அறிகுறிதான் இவை.

எனவே படைப்பாளிகள், கலைஞர்கள் கட்டுக்கோப்பாகச் செயல் பட்டால்தான் இதன் பலனை அறுவடை செய்யலாம்.

கிரமங்களைப் பசளையாக்குவோம். புதிய கலைகளை உருவாக் குவோம். மக்களிடமிருந்து கற்றுத் தேர்வோம்!

— டொமினிக் ஜீவா



## பொதுமக்களும் பொழுது போக்குகளும்

பெரும் தொகையான பொதுமக்கள் இன்று பொழுது போக்கு களற்றுத் தவிக்கின்றனர்.

முன்னர் சினிமாத் தியேட்டர்கள் இயங்கி வந்தன. மினி சினி மாக்களும் இடையிடையே காட்சி தந்தன. தொலைக் காட்சி தினசரி நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது. வானொலி முழு நாளும் தொடராக ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. மற்றும் பொதுக் கலாசார நிகழ்ச்சி களும், நாடகங்களும். மெல்லிசை நிகழ்ச்சிகளும் இடையிடையே இடம் பெற்றன.

மற்றும் சஞ்சிகைகள், புத்தகங்கள் எனத் தமிழகத்திலிருந்து கிடைக்கக் கூடியதாக இருந்தது.

ஆனால் இன்று பெரும்பாலான பொழுது போக்கு நிகழ்ச்சி கள் நடைபெறுவதே இல்லை எனச் சொல்லிவிடலாம்.

தேவாலயங்களிலும், கோயில்களிலும் ஆயிரக் கணக்கான மக்கள் இன்று ஒருங்கு கூடிப் பிரிகின்றனர் என்றால் பக்தி மாத் திரமல்ல, அவர்களது பொழுது போக்குத் தேவைக்கும் இவை உதவுகின்றன என்பதையும் நாம் அவதானிக்கத் தவறக்கூடாது.

சொல்லொணாக் கஷ்டப்படும் மக்கள் அதிலிருந்து சொற்ப நேரத்திற்கு விடுபட்டு விலகி இருக்க விரும்புவது இயற்கையே.

அதிலும் பாரம்பரிய கலாசாரப் பண்பாடு நிரம்பிய 'இனம் கலை, இலக்கியங்களைப் பேணி ரசித்துக் காத்து வந்த இனம் தமது பாரிய துன்ப துயரங்களை மறந்து சிரித்து மகிழ்வதற்கு அதனிடம் ஈர்க்கப்படுவது சகஜம்.

இன்று அவைகள் அத்தனையும் தங்களது தினசரி வாழ்விலி ருந்து விலகி இருப்பதைக் காணகையில் பல மனசுகள் விரக்திக் குட்பட்டு வாட்டமடைவதையும் நாம் அலட்சியம் பண்ணிவிட முடி யாது. சீரமத்திற்கு வடிகால்கள் அவசியம்.

பெரும்பாலான மக்கள் மனசளவில் அப்படியே 'அம்மி'ப் போய் விட்டார்கள்.

நெருக்கடியான — துன்பமயமான — வேதனைகளால் சூழப்பட்ட சூழ்நிலையில் மக்கள் ஆவலாதி அடைவது இயல்பானதே. அவர் களைத் தன்னம்பிக்கை மிக்கவர்களாகவும் எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்களாகவும் பதப்படுத்தக் கூடிய பாரிய சக்தி, கலை, இலக்கியங்களுக்குண்டு.

ஆரோக்கியமான திசை வழியில் பொழுது போக்குச் சாதனங் களை மக்களுக்குக் கிடைக்கச் செய்வோம். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்படம்

## இசை உலகின் இன்றைய நாயகன்; நாதத்தால் மக்களைக் கவர்ந்தவர்.

— இ. ஜெயராஜ்

நல்லூர் திருவிழாவுக்குப் போகும் போதெல்லாம் ஒரு காட்சி என்னை ஆச்சரியப்படுத்தும். தன் அழகாலும், அருளாலும் பக்தர்களை வீதியுலாவின் போது முருகன் ஈர்த்துச் செல்ல. அவன் அருளாட்சியிலிருந்து ஒரு ,சிறு குழுவை முன்னே ஒருவர் தன்னாட்சியில் இழுத்துச் சென்று கொண்டிருப்பார்.

முருகனையே முறியடிக்கும் அவர் யார்? என்ற கேள்வி ஆர்வத்துடன் என்னுள் எழும்.

அருகிற் சென்று பார்த்தால் அங்கே ஓர் கரிய மேகம் நின்று இசைமாரி பெய்து கொண்டிருக்கும்.

அவ் இசை வெள்ளத்தில் தம்மையும். முருகனையும் மறந்து விட்ட நிலையில் மூழ்கி திற்கும் கூட்டத்தைப் பார்க்க ஆச்சரியம் மேலும் அதிகரிக்கும்.

கர்நாட இசைப் பக்கம் தலைவைத்துப் படுத்தறியா வயோதிபர் சிலர்.

மெல்லிசையில் மூழ்கித் திளைக்கும் இன்றைய இளைஞர் சிலர். மேலைத்தேய இசை தவிர வேறு இசை கேட்பதில்லை எனப் பெருமைப்பட்டுக் கொள்ளும் நாகரிகர் சிலர்.

கச்சானும், ஐஸ்கிறீமும் வாங்குவதற்காகவே பெற்றோருடன் கோயிலுக்கு வரும் குழந்தைகள் சிலர்.

இப்படிப் பல்வகைப்ப பட்டோரும் மந்திரத்தால் கட்டுண்டவர் போல் ஈர்க்கப்பட்டு அவர் பின் செல்வது கண்கொள்ளாக் காட்சி.

இத்தனைக்கும் இளந் தலைமுறையைக் கவர்வதற்காக ஒரு மெல்லிசையோ, ஒரு சினிமாப் பாடலோ அவ் இசையில் மருந்துக்கும் கலந்திருக்காது.

இப்படி இசையின் ஓர் உயர்ந்த நிலையில் நின்று கொண்டு மற்றவர்களை அவ் இடத்திற்கு அழைத்து ரசிக்கச் செய்யும் அந்த மனிதர் யார்?

அவர் இசையோ கடுமை. எனினும் இனிமை; குளிர்மை! அவரேர் 'கறுவல்' எனினும் அழகர்.



அவர்தான் அட்டைப் படத்தை அலங்கரிக்கும் ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வர மேதை திரு. என். கே. பத்மநாதன் அவர்கள். இம்முறை அவர் படத்தைத்தான் போடுகிறேன், நீங்கள் எழுதுங்கள் என்று நண்பர் ஜீவா கேட்டபோது ஆச்சரியப்பட்டேன். காரணம் இசைக்கும் எனக்கும் அவ்வளவு நெருக்கமில்லை. பின் ஏன் என்னை எழுதச் சொன்னார்?

இது எனக்குள் எழுந்த கேள்வி.

ஒரு கலைஞனினூடே கலையையும், அக் கலையினூடே மானுடத்தையும் நேசிக்கின்ற ஜீவா, என். கே. பத்மநாதன் அவர்களுடன் நெருங்கிப் பழகுகிறவர்களில் நானும் ஒருவன் என்பதால் அக்கலைஞனின் ஆத்மநாதம் எனக்குத் தெரிந்திருக்கும்; அது வெளிவரட்டும் என்ற எண்ணத்தில் கேட்டிருந்தார்.

கந்தசாமி — பரிமளம் தாய் தந்தையர், 1931 இல் பிறப்பு. 1957 இல் நாகேஸ்வரியுடன் திருமணம். குழந்தைகள் எழுவர், நாதஸ்வர கான கலாநிதி, ஏழிசைவாரிதீ, ஏகச்சக்ராதிபதி இவை வழங்கப்பட்ட பட்டங்கள். இலங்கை அரசினால் கலாசூரி விருதும் வழங்கப்பட்டது.

தமிழின் எத்துறையாயினும் அதன் தலைமை தமிழகத்தின் கையிலேயே இருக்க வேண்டும் என்று எழுதப்படாத சட்டத்தை மாற்றிய பெருமை ஈழத்தின் இசை வேளாளர் மரபுக்குண்டு. இதில் ஆச்சரியத்திற்குரியது என்னவென்றால், பத்மநாதன் உட்பட இவர்களிற் பலர் ஏட்டுக் கல்வியைப் பெரிதாகக் கற்காவிடினும் மரபு வழியில் குருகுல முறையாக இசையைப் பயின்று, அதன் பல எல்லைகளைத் தொட்டு நிற்கின்றனர்!

எமது பாரம்பரியக் கலை, இலக்கியத் துறைகளை மரபுவழி நின்று கற்பது அறிவீனம் எனக் குரல் கொடுத்து, நவீன முறை முற்பட்டோரின் களைப் புகுத்தி அத்துறைகளை வளர்த்தெடுக்க பரிதாபத்திற்குரிய விளைச்சலைக் காணும்போதும், பிழையானது என்று சொல்லப்பட்ட மரபுவழியில் கற்ற பத்மநாதன் போன்ற பலரின் வியத்தகு கலை விளைச்சலைக் காணும்போதும் மீண்டும் மரபுவழிக் கல்வி ஆராயப்பட வேண்டிய தொன்றாகிறது.

''இறங்கியவுடன் தங்கள் எழுச்சி வெளிப்பட வேண்டும்'' கலை இலக்கியத் துறைகளில் ஈடுபட எண்ணும் இன்றைய இளந் தலைமுறையின் விருப்பம் இது.

அத்திவாரம் எதற்கு? கட்டிடத்தை நேரே கட்டத் தொடங்கினால் என்ன? என்பது போன்ற ஆழம் தெரியாத அசட்டுத்தனம். இருக்கும் ஆற்றலை நெறிப்படுத்தி, வளர்த்து, வெளிப்படுத்துகிற அளவுக்குப் பொறுமையற்றுப் போனதால் இன்றைய இளத் தலைமுறையினரும் ஏன்? சில கல்விமான்களும் கூட, பொறுமையோடு அத்திவாரத்தை ஆழ இடும் மரபுக் கல்வியை வெறுக்கின்றனர்.

ஆழமான அத்திவாரமிடப் பொறுமையில்லாததால் இன்றைய அறிவுக் கட்டடங்கள் உயரமுடியாமற் குன்றிநிற்கின்றன. பொறுமையோடு மரபுவழியே, ஆழமாக அத்திவாரமிட்டுக் கொண்டதால்தான் திரு. என். கே. பத்மநாதன் போன்றவர்களால் இசைத் துறையில் கோபுரமாய் வளர்ந்து கொண்டே போக முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒருநாள் தன் குருவின் இசைக் கச்சேரியில் தாளம் போட்டுக் கொண்டிருக்கும் போது தாளம் பிழைக்க. கோபம் கொண்ட குருவின் கைவீச்சு தன் மூக்கில் பட்டுக் கொட்டிய இரத்தத்தைத் துடைத்தால் மீண்டும் தாளம் பிழைத்துவிடுமோ என்ற பயத்தில் கச்சேரி முடியும்வரை வழியும் இரத்தத்துடன் தாளம் போட்ட தன் இளமை வரலாற்றை பத்பநாதன் விவரிக்கும் போது என்னுள் வியப்பு மேலிடும். தன்னைத் தாக்கிய குரு பற்றிய விரோதம், அவ் விபரிப்பில் மருந்தளவேனும் கலந்திருக்காது. மாறாக. இன்றைய தன்னுடைய வெற்றிக்குக் காரணமான அந் நிகழ்ச்சி பற்றிய புனித உணர்வே வெளிப்படும்,*

*தமிழகத்தில் நடைபெற்ற பிரபல நாதஸ்வர வித்துவானின் விழாவில் மாலை 9 மணிக்குத் தொடங்கிய கச்சேரி விடியும்வரை நடந்ததையும், அதைத் தமிழகத்திலிருந்த அத்தனை நாதஸ்வர. தவில் வித்துவான்களும் கேட்டு மூக்கில் விரல் வைத்து இலங்கையில் இப்படியும் நாதஸ்வரம் இருக்கிறதா? என்று வியந்ததையும் கூற அந்தப் பெருமையெல்லாம் இளமையில் அவ்வளவு இறுக்கமாகக் கற்றுத் தந்த தம் குருவினால் வந்தது தானே என்று அவர் உணர்ச்சி வசப்படும் போது நான் சிலிர்த்துப் போவதுண்டு.*

*அண்மையில் நடந்த நாதஸ்வர மேதை பத்மநாதனின் மணி விழாவில் அவர் தன் குருமாரை விழுந்து வணங்கியதும். அவர்கள் அவரைத் தம் பிள்ளைபோல் கட்டியணைத்து முத்தமிட்டுக் கலங்கிக் கண்ணீர் விட்டதும் உருக வைத்த காட்சிகள்.*

*பத்மநாதனிடம் நான் தெரிந்து கொண்ட ஒன்றிருக்கிறது. அது இன்றைய தலைமுறையினரும் தெரிந்து கொள்ள வேண்டியது. அண்மையில் என்னுடன் உரையாடிய பொழுது அவர் சொன்ன வார்த்தை: 'தம்பி! இப்ப இப்பத்தான் நாதஸ்வரத்தைத் தொடவே பயமாயிருக்கிறது!'*

*'இவ்வளவு திறமாய் வாசிக்கிறீர்கள் உங்களுக்குப் பயமா? இது நான்.*

*மீண்டும் அவர்: 'முன்பு பயப்படவில்லை. விஷயம் தெரியத் தெரியத்தான் இன்னும் எவ்வளவு கற்கவேண்டி இருக்கிறதே என்று தெரிந்து அதைத் தொடவே பயமாயிருக்கிறது!'*

*உண்மையான ஒரு, கலைஞன், அக் கலையில் மெல்ல மெல்ல வளர்ந்து, அதன் விசுவரூபம் கண்டு அஞ்சுகின்ற போதுதான் முழுமையடைகிறான்.*

*இன்று கலைஞர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பலரிடம் இந்தப் பயம் இல்லை. இன்று கற்று, நாளை வெளிப்படுத்துவேன் என்ற அசட்டுத்தனமே மேலோங்கி நிற்கிறது. பத்மநாதனை இவர்கள் படிக்கட்டும்; பல விஷயங்கள் விளங்கும்.*

*ஒழுக்கம், பண்பு, கட்டுப்பாடு, காலம் தவறாமை எனப் பல இயல்புகளிலும் தம் இனத்திற்கே முன்னோடியாகப் புரட்சி செய்து காட்டியவர். அதனால்தான் அண்மையில் நல்லூரில் நடைபெற்ற வரலாறு காணாத அவரின் மணிவிழாவில் அவரை 'நாதஸ்வரச் சக்கரவர்த்தி' எனப் பட்டமிட்டு அழைத்தேன்.*

*நாதஸ்வரச் சக்கரவர்த்தி என். கே. பத்மநாதன் பற்றி என்னால் சொல்ல முடிந்தவை இவை.* ●



நெல்லை க. பேரனின்

# எழுத்துப் பணிக்கும் அப்பால்....

— சுதாராஜ்

1981ம் ஆண்டு தொழில் நிமித்தம் குவைத் சென்றிருந்த போது, அதே நிறுவனத்தில் பணிபுரிய அவரும் வந்திருந்தார். தானாக வந்து அறிமுகமானார். 'நான்தான் நெல்லை க. பேரன்' இதழில் தவழும் புன்னகை முகத்தில மலர்ச்சி. நட்புரிமையோடு பற்றிக் கொண்ட கைகள். தன் இரு கைகளாலும் எனது கையைப் பற்றிப் கொண்டார். எனக்கு இன்ப அதிர்ச்சி. சொந்த பந்தங்களை, நண்பர்களைப் பிரிந்து கண் காணாத தேசம் வந்ததனால் தோன்றியிருந்த தனிமையுணர்வு அவரது கைகளின் பற்றுதலில் பறந்தது போலிருந்தது. அந்தக் கணத்திலேயே எனக்கொரு நல்ல நண்பன கிடைத்துவிட்டதை உணர்ந்தேன். அவர் நண்பர் மட்டுமல்ல; இலக்கிய நண்பன் — ஏற்கனவே அவரது எழுத்துப் பணிகள் மூலம் நெல்லை க. பேரனைச் சந்தித்திருந்தேன். அதனால் அவரது நேரடி அறிமுகம் மகிழ்ச்சிப் பரவசத்தை அளித்தது. தானாக வந்து அறிமுகமானார் எனக் குறிப்பிட்டதற்குக் காரணம, உண்டு. அவர் தற்பெருமை இல்லாதவர், எளிமையானவர். நட்பை விரும்பும் இயல்புடையவர். கூச்ச சுபாவமற்றவர். இனிமையானவர். வலிந்து நண்பர்களைச் சேர்த்துக் கொள்ளும் பக்குவமும் அவர்களோடு இன்முகத்துடன் பழகும் பண்பும் அவருக்கு உண்டு. அவர் யாவரையும் நேசிக்கத் தெரிந்தவர். இதை அவரோடு சேர்ந்து பணிபுரிந்த காலங்களில் நன்கு அறிய முடிந்தது.

அப்போது, அந்நிறுவனத்தில் இலங்கையைச் சேர்ந்த சுமார் 150 பேர் வேலை செய்தனர். பேரன் 'கிளாக்' ஆகக் கடமையாற்றினார். தமிழ் ஊழியர்களால் சூட்டப்பட்ட 'கிளாக்கர் பேரம்பலம்' எனும் செல்லப் பெயர் சகல இன ஊழியர்களாலும் அன்பாக அழைக்கப்படும் அளவுக்கு பிரபல்யமடைந்தது. அதற்கு அவரது கருணை உள்ளமே காரணம். எல்லா ஊழியர்களுக்கும் அவரது உதவிகள் பலவகைகளிலும் கிடைத்தது. அடிநிலை ஊழியர்கள் நிர்வாகத்துடன் தங்கள் பிரச்சினைகளைக் கதைத்துத் தீர்ப்பதற்கு — அவரது ஆங்கிலமொழிப் பரிச்சயம், நீண்ட கால தொழில் அனுபவம் ஆகியவை காரணமாக — மிகவும் உதவியாக இருந்தது.

ஊழியர்கள் இலங்கையின் பல பாகங்களில் இருந்து வந்தவர்கள் இருந்தனர். வேறு நாட்டவரும் இருந்தனர். வெவ்வேறு சூழல்களில் வாழ்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து வாழ நேரிடும்போது வெவ்வேறு பிரச்சினைகளின் மோதல்களில் குழப்பங்கள் தோன்றுவது தவிர்க்க முடியாமலிருக்கும். 'கிளாக்கர் பேரம்பலம்' தனது ஆதரவான, கருணையான பேச்சுத் திறனால் சச்சரவுகளை சுமுகமாகத் தீர்த்து வைப்பார். அவரது அறிவுரையை மகுடிக்குள் கட்டுண்ட நாகங்கள் போலக் கேட்டுக் கொண்டிருப்பவர்களைக் கண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்களைப் பிரிந்து வந்து தனிமை வாழ்க்கை நடத்தும் இந்த ஊழியர்களுக்கு பல்வேறு மனச் சுமைகள் இருந்தன. கடி தங்கள் கவலைகளைச் சுமந்துவரும். வாடிப்போன முகங்களை அடையாளம் க டு அவர்களுடன மிகவும் அன்யோன்னியமாகக் கதைத்து பிரச்சனைகளைத் தெரிந்து கொண்டு ஆறுதல் கூறு வார். கடமை நேரம் தவிர்ந்த மற்றய நேரங்களில் அவர் எப் பொழுதும் யாருடனாவது பேசிக் கொண்டிருப்பதைக் காணலாம். இவ்வாறாக அவர் செய்த பொதுப்பணி சம்பளமில்லாத உத்தி யோகம். அலுப்புச் சலிப்பில்லாமல் இப்படி அவர் இயங்குவதைக் காணப் பிரமிப்பாயிருக்கும். அவர் எழுத்து ஒன்று வாழ்க்கை ஒன்று என்றில்லாமல் எழுதுவது போலவே கொள்கைவாதியாக வாழ்ந்து வந்தார்.

மற்றவர்களுக்காக தனது நேரங்களைச் செலவிடும் பேரன், மாலை நேரங்களில் எனக்காகவும் ஒரு நேரத்தை ஒதுக்கி எனது வதிவறைக்கு வருவார். ஈழத்து இலக்கிய நிகழ்வுகள் பற்றியோ, அன்றாடம் அவர் சந்தித்த குணசித்திரங்கள் பற்றியோ விபரங் களும் வருணனைகளும் தருவார்

இப்படி மற்றவர் நலனுக்காக இயங்கும் இந்த மனிதனுக்கு சொந்தக் கவலைகள் இல்லையா என நான் அப்போது நினைத்த துண்டு. அவருக்கும் இருந்தன. எப்போதாவது கேட்டால் மட்டும் சொல்லி மனங் கலங்குவார், மனைவியை, பிள்ளைகளை பிரிந்தி ருக்கும் வேதனையை. மற்றப்படி அந்தக் கவலை அவரது மனதுக் குள்ளேயே ஊமைக்காயமாக அமிழ்ந்திருப்பதை உணர்ந்திருக்கின் றேன் 'புத்தகம் போடுவதற்காக' சொந்தப் பணம் சம்பாதித்துக் கொண்டு போகவேண்டுமென்ற நோக்கத்துடனேயே வெளிநாடு வந்ததாகச் சொல்வார். இலக்கியப் பணியை மனதில் கொண்டே அவர் தன் அன்பான குடும்பத்தைப் பிரிந்திருக்கும் தியாகத்தையும் செய்திருக்கிறார் என அறிய வந்தபோது அவர் இன்னும் என் மனதில் உயர்ந்தார்.

பிறகு, தனது ஒப்பந்தக் காலம் முடிந்ததும் மேற்கொண்டு நீடிக்காமல் ஊரோடு வந்து சேர்ந்தார்.

அதன் பின்னர் இந்தப் பத்து வருட காலங்களில் அவ்வப் போது அவரக் கண்டேன். ஊருக்கு நான் வந்தது அறிந்ததுமே சந்திக்க வருவார். யாழ்ப்பாணத்தில் இலக்கியக் கூட்டங்கள் முடிந் ததும், எனது அழைப்பை ஏற்று அன்போடு வீட்டுக்கு வந்து தங் கிச் செல்வார்.

இம்முறை நான் வந்தபோது அவர் இல்லை — அவரது அருமை யான குடும்பமும்தான். நாங்கலெல்லாம் துரதிர்ஷ்டக்காரர்கள்! ஓர் இனிய நண்பனை, அவனது குடும்பத்தோடு பறிகொடுத்து விட்டதனால் — இலக்கியகாரனைப் பற்றியெல்லாம், இலக்கிய நிகழ்வுகளைப் பற்றியெல்லாம் எழுதிக் கொண்டிருந்த ஓர் இலக் கிய நண்பனை அவனது மரணத்தின பின் எழுத நேர்ந்ததால்— அல்லது வாழவேண்டிய வயதில் அழிக்கப்பட்டதால் அவர்தான் துரதிர்ஷ்டக்காரனா? இந்த மனிதனுக்கு இது ஏன் நடந்தது? இப்படிக் கூண்டோடு பறிகொடுக்கும் கொடுமை எந்த நீதியின் அடிப்படையில் நிகழ்ந்தது? எது சரி? எது பிழை? ●



# எரியும்!

கோகிலா மகேந்திரன்

மென் காற்றின் இதம் உடலின் மயிர்க்கால்கள் வழி உட்புகுவது உணர்கிறாள். அந்த நினைவு வரும்போதே, 'கம்' மென்று ஒரு குளிர்ச்சி!

முற்றத்தில் நிற்கும் ரோஜாக் களுக்குச் சேகர நீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறான்.

ம்மா...... என்ன மாதிரி ஒரு சுழிப்புடன் தண்ணீர் விரை கிறது! இந்த நீர் அவளைப் போலவே, அவசரமாக வேலைக் குப் போகிறமாதிரி, பகிடி விடு வது மாதிரி, சிரிப்பது மாதிரி... என்ன அழகு!

இந்த ரோஜா மரங்கள், இலைகளும், முட்களும், தண்டு களும். கிளைகளும். வேர்களும் நிரம்பி எத்தனை வருடங்கள் வாழ்ந்தாலும் யார் அதைக் கவனிக்கிறார்கள்?

ஆனால். அதன் மேல் ஒரு மொட்டுப் பிடித்து, மொட்டு வளர்ந்து, ஒரு பூ விரிந்தால்... அன்றைக்கு முழுதும் அதைப் பார்த்துக் கொண்டே இருக்க லாம்!

எட்டு வருடங்களாக இவ ளும் தன் மேல் அப்படி ஒரு பூப் பூக்கும் என்று ஏங்கி........

எட்டு வருடங்கள் கீழிறங்கி நின்று பார்க்கும்போது தெரியும் கவிதை!

'என்னைப் பாரேன்' என்று சுண்டியிழுக்கிற சேகரின் ஆண்மை, வாள் வீச்சு மாதிரித் 'தண தண' என்று பிசிறின்றி வந்து விழுகிற அவனுடைய பேச்சு, மனதெல்லாம் ாரல டித்த மாதிரி ஒரு நாள் அவர் களது கலியாணம், அவள் நன் றாகவே வியர்த்திருந்த முதலி ரவு எல்லாம் ஒவ்வொரு கவிதை போல.........!

ஆனால் அதன் பின் எட்டு வருடமாய்.

ஒவ்வொரு மாதமும் அவள் பூப்பதற்கு எதிர்பார்ப்பாள். மாத முடிவில் அவளது கருப்பை குருதி வடிந்து அழுது ஓயும்.

அவளுக்கும் அவளது கருப் பைக்கும் நடக்கும் நிழல் யுத்தத் தில் அவள் எப்போது வெற்றி பெறப் போகிறாள்?

காத்திருத்தல் என்பது அது எதற்காக இருந்தாலும்... மிக வும் அவஸ்தை தருவது!

திடீரென் ஒரு தோட்டம் போல் கொத்துக் கொத்தாய் புஷ்பிக்க முடிந்தால், கொத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தாய் வேண்டாம். ஒரு பூப்பூக்க முடிந்தால், எவ்வளவு நன்றாய் இருக்கும்?

மாலை நேரங்களில் சேகர் வெளியே நண்பர்களுடன் பேசிப் பொழுது போக்கப் போய்விடுகின்ற பொழுதுகளில், இப்படியே கிணற்றடிக் கல்லில் அமர்ந்து கனகாம்பரப் பூக்களுடன் பேசுவது எத்தனை நாளைக்கு அமைதி தரும்?

ஒந்த நேரத்தில் அவள் அருகில் பிஞ்சுப் பாதங்கள் மெல்ல நிலத்தில பதிய விழுந்து எழுந்து ஓடி வரும் மழலை ஒன்று இருந்தால்?

'ஓ......' என்றொரு கும்மாளக் கூத்துடன் நெஞ்சு பொங்கி வழியாதா!

அம்மாவும் இப்படி பதினேழு நீண்ட வருடங்கள் 'காத்திருத்தல்' செய்தாளாம். இறுதியில் இவளைப் பெற்று வெற்றி பெற்றாள்.

அம்மா திருமணம் செய்யும் போது அவளுக்குப் பதினேழு வயது. பதினேழு வருடம். 'இறை வணக்கமும் நம்பிக்கையுமே துணை' எனக் காத்திருந்த பின் முப்பத்து நாலு வயதில் பூத்தாள். அப்போது கூட உயிர் பிழைத்தது அதிசயம் எனும் வகையில் 'சிசேரியன்' தந்த வெற்றி!

இவள் படித்து, உத்தியோகமாகி, காதலித்து, கஷ்டப்பட்டுக் கல்யாணம் ஆகும் போதே இருபத்தெட்டு. அம்மாவைப் போல் பதினெட்டு வருடம்காத்திருக்க நாற்பத்தைந்து, பிறகென்ன? 'மெனபோஸ்' காலம் வந்து விடும். மயிர் நரைத்த பின் வாழ்வு பச்சையாகுமா?

இம்முறை இவள் தெரிவு செய்த கலண்டரில் கூட ஒரு மழலைப் பையன் சுட்டு விரல் நீட்டிச் சிரிக்கிறான். சிவப்பு, வெள்ளைக் கோடுகள் கொண்ட அந்த 'ரி' சேட் அவனது சுருண்ட தலை படத்தின் பின்னணியில் தெரியும் நீலவானம். தென்னங்கீற்றுகள், சிட்டுக் குருவி எல்லாமே இவளுக்குப் போதை ஊட்டினால்......

இடையிடையே ஒருவரும் பார்க்காத சந்தர்ப்பங்களில் இவள் அந்தக் கலண்டரைத் தூக்கி நெஞ்சோடு அணைத்துக் கொள்வதுண்டு. யாரும் கண்டால் பைத்தியம் என்று மந்திகைக்குத்தான் அனுப்புவார்கள்.

முற்றத்தில் இறங்கி நடந்தாலும் வெறும பாதத்தில் குறுணி மண் வேதனையைக் கிளறும்.

அலை காற்றும் கூட ஜீவனைச் சுடுவதாய் உணர்ந்த பிறகு, ஒரு நாள் இவளும் சேகரும் 'கைனகோலோஜிஸ்ற்' றிடம் சென்றனர்,

'ஃபமிலி பிளானிங்' ஆலோசனை கேட்க வாறவையைவிடப் பிள்ளை இல்லை எண்டு வாறவன்ரை நம்பர் கூடிட்டுது இப்ப.........'

வைத்திய நிபுணர் சிரித்தார்.

'ரென்சன்' தான் காரணம். வாழ்வை அநுபவிக்கத் தெரியேல்லை எங்களுக்கு. அல்லது முடியேல்லை எங்களாலை...... வாழ்க்கைக்குத் தேவையான வசதியள் எல்லாத்தையும் விஞ்ஞானம் எங்களுக்குச் செய்து தந்திருக்கு. ஆனால், 'வீ டோன்ந் கால் ரைம்' எங்களுக்கு நேரமில்லை. 'வீ ஆர் ஒல்லேய்ஸ் ரயர்ட்' தனக்குத் தானே சொல்லிக் கொண்டு வந்ததை நிறுத்தி;



வழமையான சில கேள்விகளைக் கேட்டார்.

பெயர், வயது, தொழில், திருமணமாகி எவ்வளவு காலம். பீரியட்ஸ் ஒழுங்காக வருமா என்று.........

பிறகு சில சோதனைகள்...

சில வாரங்கள் கழித்து, எல்லாச் சோதனைகளும் முற்றாக முடிந்தபின் அவர் சொன்னார்,

'நான் மூதலே ஊகிச்சன், உங்கள் இரண்டு பேரிலையும் உடல் ரீதியாக ஒரு குறையும் இல்லை. யூ ஆர் பெர்ஃபெக்ட்லி ஒல் றைற். பிள்ளை இல்லை என்ற கவலை ரென்சன் இதுகள் மனதிலை இருக்கப்பிடாது. ரிலாக்ஸ்... கடவுளைக் கும்பிடுங்கோ...... நம்பிக்கையோடை இருங்கோ...... இதுதான் நான் சொல்லலாம். 'ரெஸ்ற் ரியூப் பேபி' உருவாக்கிந தாற காலம் இங்கை இன்னும் வரேல்லை. நான் வேறை என்ன செய்யலாம். 'வீ கோப் பேஃபார் த பெஸ்ட்'

இவள் விரதம் பிடித்தாள்' ஆசனங்கள் செய்து பழகினாள்' றிலாக்சேஷன் எக்ஸசைர்சஸ் செய்தாள், சேகருடன் சண்டை போட்டு அவனைக் கொண்டும் சிலவற்றைச் செய்வித்தாள்.

நிலவு பொழியும் ஒளியில் ஒவ்வொரு இரவும் அமிழும் அந்திப் பொழுதில் வீட்டில் நின்ற கறுப்பு மறி ஆட்டுக்குட்டி இவள் மடியில் ஏறிப் படுத்து உறங்கும்.

'குட்டீ.........'

'மே.........'

'உனக்கு முருக்கங் குழை வேணுமோடீ.........?'

'மே.........'

'முருக்கங் குழை வேண்டாமே? அப்ப என்ன வேணும்? முசுட்டை வேணுமே?'

'மே.........'

இப்ப யாழ்ப்பாணத்திலை சாப்பாடே கிடையாத நேரத்திலை. உனக்கு முசுட்டை வேணுமோ? அது கிடந்தால் நாங்கள் சொதி வைக்கலாம், வறை வறுக்கலாம் போடி...... உனக்கு முசுட்டை இல்லை.

'மே.........'

புதினம் பார்க்கும் மேகத் தலைகள் தம்முட் குழம்பித் தவித்துத் திரியும்......

குளிர்ந்து இருண்ட பகற் பொழுதுகள் அடுக்கடுக்காய் நின்ற பல மாரிகளுக்குப் பிறகு மாலையில் மேற்கு வானில் ஒரு நட்சத்திரம் மினுங்கியது.

பக்கத்து வீட்டுப் பாப்பா மான்விழியைத் தூக்கிக் காற்றில் எறிந்து ஏந்தினாள் இவள்.

'அன்ரீ......... என்னை விடுங்கோ.........!'

சென்ற மாதம் இருபத்தாறாம் திகதி சனிக்கிழமை.........

சனியோடு சனி எட்டு மூன்று சனி இருபத்திரண்டு, நாலு சனி இருபத்தொன்பது. ஞாயிறு முப்பது, இன்றைக்குத் திங்கள் சோமவாரம்... முப்பத்தொரு நாள்.........

இருபத்தாறு நாள் எங்கே என்று பார்த்துத் தவறாமல் வருவது...... இம்முறை......

'ஓ...' மலர் ஒன்று விரிந்தது ரோஜாவில்! 'இங்காருங்கோ... இண்டைக்குச் சோமவாரம்...... ஒருக்காச் சிவன் கோயிலுக்குப் போட்டு வருவமோ?'

'என்ன? என்ன விசேஷம் இண்டைக்கு...... வேலையாலை வந்தால் களைப்பாய் இருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெண்டு படுக்கிறனீர்...... இண்டைக்குக் கோயிலுக்கு வெளிக்கிடுறீர்.........'

இவள் சேகரை நெருங்கி வந்தாள்,

'இந்த முறை நாலைஞ்சு நாள் தள்ளிப் போட்டுது. ஒருக்கால் போய்க் கடவுளைக் கும்பிடுவம்.

சேகர் சிறிதாய்ச் சிரித்தான், மலர்ந்த சிரிப்பு!

கோயிலுக்கு நடந்து போனார்கள்.

'என்னாலை உங்கடை சைக்கிள்லை இருக்கேலாது...... நீங்கள் குலுக்கி எடுத்துப் போடுவியள்'

காலுக்கு மேல் கால் வைத்து மெல்ல நடந்து போனாள்.

'கவனம் பிள்ளை, தேகம் நோகத்தக்கதாய் ஒரு வேலையும் செய்யாதை. இடிக்கிறது, அரைக்கிறது ஒண்டும் செய்ய வேண்டாம்'

அம்மாவின் அறிவுறுத்தல் மனதில் அடிக்கடி ஒலித்தது.

'நாப்பது நாள் முடிய டாக்டரிட்டைக் காட்டுவம்... என்ன?

சேகர் நம்பிக்கையோடிருந்தான்.

மாமி இவளைக் கண்டபோதெல்லாம் வெட்ட வெளியை வழித்து நெட்டி முறித்தாள்.

அடி வயிற்றில் ஏதோ 'பிறாண்டுவது' மாதிரி ஓர் உணர்வு. மெதுவாக வயிற்றைப் புரட்டுவது போல!

'மோர்னிங் சிக்னெஸ்' அறிகுறிகள் இவ்வளவு விரைவாகவே தோன்றி விடுமா? அப்படியானால், காலை நேரத்தில் அல்லவா அவை தோன்ற வேண்டும்?

அடுத்த வாரமும் கோயிலுக்குப் போய் வந்து சிறிது சாப்பிட்டாள். வயிறு 'உம்' மென்று ஊதி, உப்பினாற்போல் இருந்தது. ஏன் அவளால் வழமை போல நிறையச் சாப்பிட முடியவில்லை?

கருப்பையும், இரைப்பையும் வேறு வேறு அல்லவா? கண்ணாடியில் ஒரு முறை தன்னைப் பார்த்துக் கொண்டாள்.

வயிறு மிகச் சிறிதளவு பெருத்திருக்குமாய்ப் போல் உணர்ந்தாள். முகத்தில் ஒரு மினுமினுப்பு! வெள்ளரிப் பழத்தைப் பிளந்து வைத்த மாதிரி ஒரு நிறமும் குழுமையும்!

'பிளவுஸ்' எல்லாம் இனி அவிழ்த்துத் தைக்க வேண்டி வரும். அண்டர்ஸ்கேட்டும் புதிதாக வாங்க வேண்டி வரும். 'பிரா' அட்ஜஸ்ட் பண்ணலாம்.

அன்றும் வழமைபோல் விடிந்தது!

ஒவ்வொரு நாளும் நகரும் போது ஒரு புதுவித மகிழ்வு.

இது நூற்றெண்பது நாளில், நாற்பத்தைந்து நாள் போனால் இன்னும் இருநூற்று முப்பத்தைந்து நாள் இருக்கு, அம்மாடி!

'என்னப்பா இண்டைக்கு 'ரீ' இல்லையே?'

'இண்டைக்கு என்னாலை எழும்பேலாது.... நீங்கள்தான் ஹொறற் பிளேற்றிலை சுடுதண்ணியை வையுங்கோ. தலையைச் சுத்துது'

சேகர் வழமையான சிரிப்புடன் 'பிளக்' கைப்போட்டான். அவன கொடுத்த தேநீரைக் குடித்துவிட்டு, ஒரு நாளும் இல்லாமல் மூகத்துக்கு மஞ்சள் பூசிக் குளித்தாள் இவள்.

'மெய்யேங்கோ...... எங்கையும் குங்குமப்பூ வாங்கலாமே?'

'பிள்ளை, குங்குமப்பூ பத்தாம் மாதத்திலைதான் சாப்பிடுறது. இப்ப தொடக்கம் வாங்கக் கட்டுமே பிள்ளை......'



கிணற்றடியில் முகம் கழுவி வந்த அம்மா, விபூதி பூசிய அரைவாசியிலேயே மகளுக்குப் பதில் சொன்னாள்.

மனதில் ஒரு சந்தோஷம்... அனல் காற்று அடித்த மாதிரி வேகமாய் வந்து மோதிவிட்டுப் போனது.

கலண்டர் தம்பியைப் பார்த்துச் சிரித்தாள் இவள்.

'நான் உண்மையாகவே நீ போட்டிருக்கிற மாதிரி ஒரு 'ரீ' செட் வாங்கப் போறன்... ஓ... பார்.....'

ஓடி வந்து துள்ளி ஆட்டுக்குட்டியிடம் சொன்னாள். 'உன்ரை சின்னச் சின்னக் கறுப்பு மயிர், என்ரை மடியிலை இனி விழப்பிடாது. மே...... தள்ளி நில்........'

திடீரென்று ஒரு.........

'என்னப்பா?'

காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

'பொம்பர் வாறான்......... பொறும் பாப்பம் எங்கை போறான் எண்டு'

பக்கென்று வயிற்றில் ஒரு பயம் பந்தாய்ச் சுழன்றது.

'ஐயோ டைல் பன்றான். நீர் ஓடும்...... கோயில் பக்கம் ஓடும்.........

சொல்லிக் கொண்டே சேகர் மேற்கு நோக்கி ஓடினான். இவளும் ஓடினாள். ஓடும்போது ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். ஏதோ ஒன்று கறுப்பாய், சிறு புள்ளியாய், இவர்களின் வீட்டுக்கு மேலே இறங்கி வந்து கொண்டிருந்தது.

'ஐயையோ...... போட்டிட்டான்' வயிறு நிரம்பி வந்த விமானம் கறுப்பு முட்டை ஒன்றைப் பிரசவித்து விட்டது.

இன்னும் வேகமாய் முடிந்தளவு வேகமாய் ஓடினாள். எழுபத்தைந்து மீற்றர் ஓடியிருப்பாள்.

கண்ணைப் பறிக்கும் மின்னல் வெளிச்சம், காது உடையும் சத்தம், இதயம் நின்று விட்டது போன்ற உணர்வு! சுற்றிவர இருந்த நாற்பது ஐம்பது வீடுகளின் யன்னல் கண்ணாடிகள் சலங்கை என அதிர்ந்து வெடித்தன.

பொம்பர் பொழிந்த பின் போய்விட்டது.

வீட்டின் முன்புறம் சேதமடைந்து கிடந்தது. முன் விறாந்தைச் 'சீலிங்கில்' வேட்டைவாளி கட்டியிருந்த கூட்டை முற்றாய்க் காணவில்லை பக்கத்து வீடு மலர்விழியின் வீடு... முற்றாகச் சேதம்.

நெஞ்சு அடைக்க, துயரம் அதை உடைத்துக் கண்களில் நீராய் நிறைய, இவளுக்கு 'பாத்ரூம்' போக வேண்டும் போல் இருந்தது.

போனாள் திரும்பி வந்தாள்.

'அம்மா' எனக்குச் சுகமில்லாமல் வந்திட்டுது.........'

'என்ன?' சேகரிடம் ஒரு அதிர்வு தெரிந்தது. ஏமாற்றம் அல்லது சோகம், விரக்தி ஏதோ ஒன்று எல்லாம் கலந்த ஒன்று!

ஒரு நினைவு முகம் வெளியில் சிரித்தது போன்ற.........!

கொளுத்திக் கொண்டிருக்கும் வெயில் தகித்துக் கொண்டிருக்கும் மனம்!

தகித்துக் கொண்டிருக்கும் வெயில், கொழுத்திக் கொண்டிருக்கும் மனம்!

கொளுத்தி... தகித்து......

தகித்து... கொளுத்தி......

கொளுத்தி... கொளுத்தி...
எரிக்க வேண்டும் அவர்களை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் அரசியலும்

கொ. றொ. கொண்ஸ்ரன்ரைன்

தரமான கலை இலக்கிய வெளிப்பாடுகள் ஒரு வாழும் சமுதாயத்தின் இதயத் துடிப்புகள். சமூக அரசியல் மாற்றங்கள் கலை இலக்கிய ஆக்க முயற்சிகளிலும், கலை இலக்கிய முயற்சிகள் சமூகத்திலும் ஏற்படுத்தும் தாக்கங்கள் காலவோட்டத்தின் தவிர்க்கப்பட முடியாத நிகழ்வுகள்.

கலைஞனானவன் தன் வாழ்நிலை யதார்த்தங்களினூடாகப் பெறும் அனுபவங்களை தங்கற்பனையால் மெருகூட்டி, தமது கலையாளுமையினால் வடிவமைத்து, தம்கைவந்த சாதனத்திற்கூடாக வெளிப்படுத்துகையில் தரமான படைப்புகள் அவதரிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்டமும் கலைஞனை நிரம்பவே பாதித்துள்ளது கலை இலக்கியத்துறைகளில் இது புதிய பரிமானங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒரு புதிய தளத்தில், ஒரு புதிய சந்ததியே உருவாகியுள்ளது. இந்தக் கனகாத்திரமான விளைவுகள் பெருமளவில் உணரப்படாமலேயே இருந்து வருகிறது,

1983க்குப் பின்னர் நவீன கலை இலக்கிய வடிவங்கள் எமது சமூகத்தில் முனைப்பாக வளர்ச்சியடையவும், செல்வாக்குச் செலுத்தவும் தொடங்கியுள்ளன. இலக்கியத்தில் கவிதையும், கலையில் நாடகமும் இங்கு குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் போக்குகளைக் காட்டி நிற்கின்றன. இவற்றைவிட கட்புலக் கலை வடிவங்களான ஓவியம், சிற்பம், புகைப்படக் கலை என்பனவும் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களைக் கண்டுள்ளன.

இந்த வளர்ச்சி பொதுவாக இரண்டு தளங்களில் நடைபெற்றுள்ளது. ஒன்று பிரசாரக் கலை வடிவங்களாக, மற்றையது சுய வெளிப்பாட்டுக் கலை வடிவங்களாக.

ஸ்தாபனமயப் படுத்தப்பட்ட இலட்சியங்கள் கொள்கைகளின் வளர்ச்சிக்குப் பிரசாரக் கலை வடிவங்கள் முக்கியமானவை. பிரசாரக் கலை வடிவங்கள் பிரசார நோக்கை முதன்மையாகக் கொண்டவை. பொதுவாக இவற்றில் கலைத்துவம் இரண்டாம் பட்சமானதாகவே உணரப்படுகிறது. அதே வேளை உயர்கலைப் பெறுமானத்துடன் கூடிய பிரசாரக்கலை வடிவங்கள், அது சார்ந்து நிற்கும் நிகழ்வை காலத்தால் அழியாத கலைச் சிருஷ்டியாக ஞாபகப் படுத்தி நிற்பதனையும் நாம் கலைவரலாற்றில் காண்கிறோம்.



இருப்பினும் மிக அருமையாகவே பிரசாரக் கலைப் படைப்புகள் இப்படியான கலைத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. பெரும்பாலானவை அந்த நோக்கம், இலட்சியம் அடையப்பட்டதுடன், மறக்கப் பட்டுவிடுகின்றன. இல்லாவிடின் சரித்திர ரீதியான குறிப்பில் மட்டும் இடம் பெறுகின்றன.

பிரசார நோக்கும், உயர் கலைத்துவமும் இணைந்து செல்லும் போக்கினை எமது நாடகக் கலை வளர்ச்சியில் நாம் காணலாம். நாடகக் கலையில் எம்மவர்க்கிருக்கும் நீண்ட மரபும், திறமையும் இத்தகைய ஓர் இணைவிற்கு அடிப்படையாய் அமைந்து நிற்கின்றன. இந்த வளர்ச்சிப் போக்கின் ஒரு சிறந்த வெளிப்பாடே குழந்தை சண்முகலிங்கத்தின் 'மண்சுமந்த மேனியர்'.

மண்சுமந்த மேனியர் காலத்தில் பல பிரசார நாடகங்களும் ஆங்காங்கு மேடையேற்றப்பட்டன. இருப்பினும் அவற்றில் ஒன்றுகூட பெயர் நிலைத்து நிற்கக் கூடியளவிற்கு கூட தமது தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டன. இதிலிருந்து ஒரு படைப்பில் கலைத்துவத்தின் முக்கியத்துவத்தை நாம அறிந்து கொள்ளலாம். நாடகக் கலையில் பல மாற்றங்களும் நடந்துள்ளன. அவற்றைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கிற்கு அப்பாற்பட்டது.

இந்தப் போராட்டம் ஓவியக் கலையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நவீன ஓவியத்தின் மீதான நாட்டம் நம்மவரிடையே இப் போராட்ட முனைப்பின் பின்னரே ஏற்படத் தொடங்கியுள்ளது.

மேலைத்தேய ஓவிய முறைமை 1930 களிலேயே நம்மிடையே பரவத் தொடங்கிவிட்டது. எஸ். ஆர். கனசசபையின் முயற்சியினால் அறிமுகப் படுத்தப்பட்டு அன்னாரின் ஆற்றுப்படுத்தலின் கீழ் மேலைத்தேய ஓவிய முறைமை நல்ல வளர்ச்சி கண்டது. இருப்பினும் இவரது முயற்சிகள் பாடசாலை ஓவியத்துடனும், ஓவிய ஆசிரியர்களுக்கான பயிற்றுவித்தலையுமே முதன்மையாகக் கொண்டிருந்தது. அக்காலச் சூழலின் இது நிச்சயமாக ஒரு அசுரப் பாச்சல் தான்.

மேலைத்தேய ஓவிய முறைமையின் அறிமுகத்தின் பின் இதன் வழித்தோன்றல்களாக வந்த பல சிறந்த ஓவியர்கள் இன்னும் எம்மிடையே இருக்கிறார்கள். அன்று ஓவியக்கலையில் காலடி எடுத்து வைத்த இந்த ஓவியர் பரம்பரை ஓவியத்தின் காட்சி நிலைப் பரிமாணத்தை முக்கியமானதாக கருதுவார்கள். இருப்பினும் இவர்களில் பலரும் அவ்வப்போது நவீன ஓவியத்தில் பரீட்சார்த்த ரீதியில் (Experimental) ஈடுபட்டு வந்துள்ளதை நாம் அறிகிறோம்.

50 களின் கடைக்கூற்றிலும் 60 களின் ஆரம்பங்களிலும் சில ஓவியர்கள் நவீன ஓவிய முயற்சியில் இறங்கத் தலைப்பட்டார்கள். இவர்களில் முக்கியமானவர் மாற்கு ஆவார். இருப்பினும் 50 களின் ஆரம்பம் வரையிலும் இவர்களது ஓவியங்கள் பெருமளவில் இவர்களது வட்டத்தைத் தாண்டி வரவில்லை. இவர்களது வட்டத்துள்ளேயே அவை முடங்க வேண்டியதாயிற்று.

1983 க்குப் பின்னர் எம்மத்தியில் நவீன ஓவியம் மாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாகக் களைகட்டத்தொடங்கியது. இக்காலத்தில் அலை, சிரித்திரன், மல்லிகை ஆகிய சிறுசஞ்சிகைகள் நவீன ஓவியக்கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கின.

இக்காலகட்டத்தில் முனைப்படையத் தொடங்கிய சமூக, அரசியல் போராட்டம் இத்தகையதோர் மாற்றத்திற்கான தாக்க களத்தினை அமைத்துக் கொடுத்தன எனலாம். சமூக, அரசியல் ரீதியில் ஏற்படத் தொடங்கிய சிந்தனா செயல் முறை மாற்றங்கள் ஓவியத்தினை நிரம்பவே பாதித்தது. நவீன ஓவியம் ஒரு புதிய கோணத்தில் அணுகப்படத் தொடங்கியது. ஓவியத்தின்பால் இளைஞர்கள் தம் நாட்டத்தினைக் காட்டத் தொடங்கினர் இக்கால கட்டத்தின் பின்னர் ஓவியக் கண்காட்சிகளை ஒழுங்கு செய்வதில் இளைஞர்கள் முன் நின்று வருவதனை நாம் காணலாம்.

ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மேலைத்தேய ஓவிய முறையில் காட்சி நிலைப் பரிமாணமே முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. காட்சிகளின் புறவய நுணுக்கங்களுக்கு (Opjectlve Acquracy) கவனம் செலுத்தப்பட்டது. ஆனால் நவீன ஓவியத்தில் இக்காட்சி நிலையினைவிட கருத்து நிலைப் பரிமாணமே முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. அண்மைக் காலங்களிலேயே இம் மாற்றத்தினையும், அதன் முக்கியத்துவத்தினையும் தம்மவர் உணர்ந்து வருகின்றனர். இதனை நவீன ஓவியம் மீதான பிரக்ஞைபூர்வ நுகர்வின் முதற் கட்டமாகக் கருதலாம். இதன் பின்னரே ஒரு காட்சியில் ஓவியன் காணும் கருத்தும், அதை அவன் வெளிப்படுத்தும் முறையும், இந்த வெளிப்பாட்டில் ஓவியனைத் தரிசிக்கும் நுகர்வோன் பக்குவமும் விரிவடையலாம்.

ஓவியக் கலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் இரண்டு தளங்களில் ஏற்பட்டுள்ளது. ஒன்று வெளிப்பாட்டு வடிவில் ஏற்பட்டுள்ள மாற்றம். அதாவது கலையில், உருவத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் இதுவரை காலமும் மேலைத்தேய தத்ரூபப் பாணியை வரித்து வந்த எமது ஓவியர்கள். தற்காலத்தில் பிரக்ஞை பூர்வமாக நவீன ஓவியத்தை வரித்துக் கொள்ளத் தலைப்பட்டுள்ளார்கள்.

இரண்டாவதாக உள்ளடக்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம். முன்பெல்லாம் ஓவியத்தின் பிரதிமைகளும் நிலக் காட்சிகளுமே (Portroits and Landscapes) முதலிடம் பெற்றன. அப்படி மீறிப் போனால் கிராமக் காட்சிகளை வரைந்தார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் சமூக மனிதனின் நோக்காடுகளும், அவனது பிரச்சினைகளும் மனித உறவு நிலைப்பட்ட கண்ணோட்டத்தினூடாக முன்வைக்கப் படுகின்றன.

இந்த இரண்டு இணைகையில் இன்றைய ஓவியம் காலத்தின் கண்ணாடியாக மட்டுமன்றி காலத்தினை கலைஞனின் சார்பு நிலைகளுக்கூடாக வெளிப்படுத்தும் ஒரு ஊடகமாக வியாபித்திருப்பதனை நாம் காண்கின்றோம்.

ஆரம்ப காலங்களில் எஸ். ஆர். கே. போன்ற மூத்த ஓவியர்கள், 43 குழுவினருடன் மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள். இதனால் எமது ஓவிய வளர்ச்சி சிங்கள மக்களின் ஓவிய வளர்ச்சியின் ஒரு விஸ்தரிப்பாகவே விளங்கியது. இப்பொழுது நிலைமை முற்றிலும் மாறியுள்ளது.



போராட்ட முனைப்புடன் சிங்களக் கலைஞர்களுடனான தொடர்பும் அவர்களது பாதிப்பும் எமது ஓவியக் கலையில் அருகத் தொடங்கியுள்ளது.

இலக்கிய வாதிகளுக்கும் ஓவியர்களுக்குமிடையில் பரஸ்பர பரிமாற்றங்கள் இருந்து வருவதனை நாம் ஓவிய வரலாற்றில் காணலாம். இதற்கு நாம் ஒரு விதிவிலக்கல்ல எமது இலக்கிய வாதிகளுக்கு குறிப்பாக சிறு சஞ்சிகைத் துறையில் ஈடுபட்டிருப்பார்களுக்கு தமிழக இலக்கியவாதிகளுடனும் அவர்களது படைப்புகளுடனும் நல்ல பரிச்சயமுண்டு. இந்தத் தொடர்பு வாயிலாக இந்திய ஓவியர்களின் பாதிப்பு குறிப்பாக தமிழக ஓவியர்களின் பாதிப்பு எமது ஓவியர் மத்தியில் வேரூன்றத் தொடங்கியுள்ளது. அண்மைக் காலங்களில் உருவச் சிதைவுகளையும் ரேகைகளையும் முதன்மைப்படுத்தும் கோட்டுச் சித்திரங்கள் பிரபலமடைந்து வருவது இதனையே காட்டுகிறது.

இந்தத் தாக்கத்தின் இன்னொரு பரிமாணமாக 'தேடலும் படைப்புலகமும்' என்ற நூலைக் குறிப்பிடலாம். எழுத்தாளர்களால் தொகுக்கப்பட்டுள்ள இந்த நூல் தமிழக ஓவியர்களுக்கு மிக முக்கிய இடம் கொடுத்துள்ளதை நாம் காணலாம்.

இந்த மாற்றம் கூட இந்தப் போராட்டத்தினால் வலுப்பெற்றது எனலாம். இப் போராட்டத்தில் தென்னிந்தியாவின் பங்கு இத்தகைய மாற்றத்தின் தேவையையும் அதன் அர்த்தத்தையும் பன்மடங்காக்கியதுடன் துரிதப்படுத்தியுமுள்ளது.

போராட்ட வளர்ச்சியுடன் பெண்ணிலைவாதக்கருத்துகளும் எமது சமூகத்தில் வேரூன்றத் தொடங்கின. ஆரம்ப காலங்களிலிருந்து பெண்கள் ஓவியத் துறையில் ஈடுபட்டு வந்திருந்தாலும், 'ஓவியர்' என்ற சமூக அந்தஸ்தை இக் காலகட்டத்திலேயே பெண் ஓவியர்கள் பெறத் தொடங்கினார்கள் என்பதுவும் கவனிக்கத்தக்கது.

ஓவியக் கலையில் இத்துணை காவிய மாற்றம் நிகழ்ந்திருப்பினும் அந்த வளர்ச்சி பிரசார கலை வடிவிலில்லாது சுய வெளிப்பாட்டுக் கலை வடிவிலேயே நடைபெற்றிருப்பது கவனிக்கத் தக்கது.

இந்த வளர்ச்சி பத்திரிகைத் துறையினையும் பாதிக்கவே செய்தது. 80 களின் கடைக் கூறில் பத்திரிகைகளில் கருத்தோவியங்கள் முக்கிய இடம் பெறத் தொடங்கின. கருத்தோவியங்களை வெகு காலமாகவே சிரித்திரன் வெளியிட்டு வந்திருந்தாலும் அவை அடிப்படையில் வேறுபட்டு நிற்பதனை நாம் காணலாம். சிரித்திரனின் கருத்தோவியங்கள் சமூகக் கேலிகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் இன்றைய கருத்தோவியங்களோ அரசியல் கருத்துக்களை ஒரு கலைஞனின் விமர்சனக் கண்ணோட்டத்துடன் முன்வைக்கின்றன.

இவற்றைவிட ஓவியம் பற்றிய கருத்துப் பரிமாற்றங்களும், விமர்சனங்களும் பல்வேறு நிலைகளிலும் அண்மைக் காலங்களில் வளர்ச்சி கண்டுள்ளதனையும் நாம் குறிப்பிடலாம்.

ஓவியத்தைப் போலவே சிற்பமும் கணிசமான வளர்ச்சி கண்டுள்ளது. இந்த வளர்ச்சி முக்கியமாக நினைவுச் சின்ன சிற்ப வடிவங்களிலேயே ஏற்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. எழுபதுகளில் நகர பிதாவாக இருந்த அல்பிரட் துரையப்பாவினால் பலரது சிலைகளும் நிறுவப்பட்டன. இருப்பினும் இவை உருவ ஒப்புமைகளையே பிரதானமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலை அண்மைக்காலங்களில் மாற்றங்கண்டுள்ளது.

அண்மைக்கால நினைவுச் சின்னங்கள் கருத்தை மையப்படுத்தி அமைக்கப்படுகின்றன. இவற்றின் அமைப்பு, உருவத்தொகுப்பு என்பவை பொருமளவில் எமது பாரம்பரியங்களுக்கு அப்பாற்பட்டு நின்றாலும், நினைவுச் சின்னங்களில் கருத்தூறின பின் முக்கியத்துவம் உயர்ந்துள்ளமை ஒரு நல்ல மாற்றமாகக் கருதப்படலாம்.

நினைவுச் சின்னங்கள் தவிர்ந்த ஏனைய நவீன முறைச் சிற்பங்கள் மீதான நாட்டமும் அதிகரித்துள்ளது. 1989ம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விசுவலிங்கத்தின் சிற்பக் கண்காட்சி பல கலை ஆர்வலர்களையும் சிற்பக் கலையின் பால் ஈர்த்துள்ளது. இருப்பினும் நவீன சிற்பக் கலைக்கான பயிற்றுவித்தலின்மையும், மூலப்பொருள் வசதியின்மையும் போதிய நூல்கள் இல்லாமையும் நவீன சிற்பக்கலை மீதான நாட்டத்தினை தக்க வழிப்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளியுள்ளன.

போராட்ட காலத்தில் வளர்ச்சி கண்ட மற்றுமொரு கலை, புகைப்படக் கலையாகும். புகைப்படக் கலையினை ஒரு கலை வடிவாகக் காணும் பண்பு எமது சமுதாயத்தில் இருக்கவில்லை. எம்மிடையே அமிர்தநாதர் போன்ற சில மூத்த கலைஞர்கள் இருந்தாலும் கலை ஆர்வமும், திறமையும் இலைமறை காயாகவே இருந்து வருகிறது.

இப் போராட்ட காலங்களில் புகைப்படக் கலையும் ஏனைய கலை வடிவங்களைப் போலவே ஒரு கலை வடிவமாக அணுகப்படத் தொடங்கியுள்ளது. எண்பதுகளில் நடுப்பகுதிகளில் நாம் இந்த வளர்ச்சியினை அவதானிக்கக் கூடியதாயிருந்தது.

1986ல் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தமயந்தியின் புகைப்படக் கண்காட்சியும் சில தரமான புகைப்படங்களைக் கொண்டிருந்தது. ஆயினும் இந்த முனைப்பு இப்போதெல்லாம் முடங்கிப்போய் விட்டது. இதற்கான முக்கிய காரணம் இக்கலை ஏற்படுத்தி நிற்கும் பொருட் செலவாக இருக்கலாம்.

இந்தப் போராட்டம் கட்புலக் கலை வடிவங்களில் ஏற்படுத்தியிருக்கும் முக்கியமான தாக்கம் இதுவரை காட்சி நிலைப் பரிமாணத்தை முதன்மைப்படுத்திய இக்கலை வடிவங்களைக் கருத்து நிலைப் பரிமாணத்தை முதன்மைப்படுத்தும் வகையில் இட்டுச் சென்றமையே. இந்தத் தளப் பெயர்ச்சியுடன் இக்கலை வடிவங்களில் புறவய நுணுக்கங்களின் அழுத்தம் குறைந்து அகவய வெளிப்பாடு முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது.

காலத்திற்குக் காலம் கலையில் ஏற்படும் மாற்றம் தவிர்க்கப்பட முடியாதது. அது காலத்தின் தேவை. ஒருவகையில் காலத்தின் நியதியும்கூட. இந்த மாற்றங்கள் தக்க விதத்தில் ஆற்றுப்படுத்தப்படும் பொழுதே கலை வளர்ச்சி சமூக மேம்பாட்டிற்கான சாதனமாகத் திகழ முடிகிறது. ●



# நானும் எனது நாவல்களும்

—செங்கை ஆழியான்

இலக்கியத்தின் மிகப் பிரதானமான பணி சுழன்று மாறி வரும் சமூகவுறவுச் சிக்கல்களிடையேயும்அகப்புறச் சவால்களுக்கிடையேயும் அவற்றிற்கூடாகவும் மனிதாயத்தைச் சித்திரிப்பதாகும். மனித வரலாற்றின் மானுட நிலைப்பாடுகளின் பிரகடனங்கள் தாம் படைப்பிலக்கியங்கள். அத்தகைய இலக்கியங்கள் காலத்தின் உற்பத்திகள் மாத்திரமல்ல, அவையே காலத்தை உற்பவிப்பனவாகவும் உள்ளன. கம்பராமாணம் நோன்றுவதற்குச் சோழர் காலம் எத்துணை அவசியமோ அதே போன்று சோழர்காலத்தின் பொழிவைக் காட்ட ஒரு கம்பராமாயனமும் அவசியம். ஒரு சமூகம் சிக்கலான காலகட்டத்தில் வாழும் பொழுது, அது அச்சிக்கல்களின் தெளிவிற்கும் தீர்விற்கும் இலக்கியத்தை எதிர்நோக்கி நிற்பது வழக்கம். இலக்கியங்களும் பதில்களை வழங்குவதுணடு. அவற்றுள் எவை அச்சமூகத்தின் நிகழ்காலப் பிரச்சினைகளில் எதிர்காலத் தேவைகளைக் கண்டனவோ அவையே நிலைபேறுடைய இலக்கியங்களாகப் போற்றப்படுகின்றன' (இந்த நாடு உருப்படாது—முன்னுரையில் கா. சிவத்தம்பி 1989).

அரசியல் பின்னணியில் என்னால் இரண்டு நாவல்கள் சிறப்பாக எழுதப்பட்டனவென நம்புகின்றேன். அவற்றில் ஒன்றான 'இந்த நாடு உருப்படாது' என்ற நாவலிற்குப் பேராசிரியர் கா. சிவத்தப்பி அவர்கள் முன்னுரை எழுதியுள்ளார். இந்த நாவல் 1977 காலப் பின்னணியில் ஆக்கப்பட்டது. 1956 காலகட்டத்தின் அரசியல் பின்னணியில் 'தீம்தரிகிடத்தோம்' என்ற நாவலை ஆக்கினேன். இவ்விரு நாவல்களும் அக்கால அரசியல் நிலைமைகள், இன்றைய இக்கட்டுகளை எவ்வாறு உருவாக்கின என்பதனைச் சித்திரிக்கின்றன.

எனது இருபத்தைந்தாவது ஆக்கவிலக்கியமான 'இந்த நாடு உருப்படாது' அமைந்தது. இந்த நாவலிற்கு ஒரு வரலாறுண்டு. 1977 ஆம் ஆண்டுப் பகைப்புலத்தைக் கொண்ட இந்த நாவல் 1983 இல் எழுதப்பட்டதாகும். இந்தியப் பதிப்பகம் ஒன்றின் மூலம் வெளிவரவிருந்தது. இந்த நாடு உருப்படாது என இதற்கு இடப்பட்ட தலைப்பு, கலைஞனின் சாபமொழி போன்றிருப்பதால் அத்தலைப்பினை மாற்றி 'ஒரு கிராமத்தின் கதை' என்ற பெயரில் இந்த நாவல் அச்சிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக அறிவிக்கப்பட்டது. ஆனால் வெளிவந்ததாகத் தெரியவில்லை. வீரகேசரியின் ஆசிரியர் நண்பர் சிவநேசச் செல்வன் வாரமலரில் வெளியிடுவதற்கு ஒரு தொடர் நவீனம் வேண்டுமென கேட்டபோது, இந் நாவல் வீரகேசரிக்கு வழங்கப்பட்டது. அவர் நாவலின் பெயரை 'தீராச் சுமைகள்' எனப் பெயர் மாற்றி வீரகேசரி வாரமலரில் வெளியிட்டார். பின்னர் மீரா வெளியீட்டினர் தங்கள் வெளியீடாகப் பிரசுரிக்க ஒரு நாவல் தேவையெனக் கேட்டபோது, 'இந்த நாடு உருப்படாது' என்ற தலைப்போடு இந்த நாவல் வழங்கப்பட்டது. அவ்வெளியீட்டினர் 'மண்ணின் தாகம்' என்ற தலைப்புடன் நூலுருவில் வெளியிட்டனர்.

நம் வயல்களில் உழைக்கவும் வருவாய் பெறவும், மனித உரிமைகளுடன் வாழவும் முடியாது. அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு கிராம மக்களிற் சிலர் தமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இடையறாது முயற்சிப்பதும், அந்த முயற்சியில் வெற்றியடையாது விடினும் மாற்றுத் திட்டமொன்றின் மூலம் தம் வாழ்வைச சீர் செய்வதும் இந்த நாடு உருப்படாது என்ற நாவலில் பிரதான பொருளாகவுண்டு. அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் போர்க்குணம் வாய்ந்தவர்களாக ஒன்றுதிரண்டு ஐக்கியப்பட்டு உரிமைக் குரல் எழுப்பிப் போராட முனைகின்ற நிலைக்குத் தள்ளப்படாமல், அவர்களின் உரிமைகள் மாற்று வழியொன்றின் மூலம் திருப்திப்படுத்தப்பட்டு, மழுங்கடிக்கப்படும். சோஷலிச ஜனநாயக அரசியலின் யதார்த்த நிலையை இந்த நாவலில் சித்தரித்திருக்கின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகராயன் ஆற்றின் அந்தத்தில் அமைந்திருக்கும் கண்டாவளைக் கிராமம். இந்த ஆற்றின் நீர்வளத்தால் சிறப்புற்றிருந்த காலம் ஒன்றுள்ளது. கண்டாவளைப் புராதன வயல்கள் இந்த ஆற்றின் நீரை மொண்டு விளைந்தன. கனகராயன் ஆற்றினை இடை வழியில் மறித்து அணைகட்டி இரணைமடுக்குளம் உருவாக்கப்பட்டதும், கண்டாவளை வயல்கள் நீரின்றி வரண்டன: மானாவாரித் தரைகளாகின. காலம் காலமாக கனகராயன் ஆற்றின் நீரை ஆண்டு அனுபவித்து வந்த அக்கிராமமக்களின் இன்றைய அவலத்தை இந்த நாவலில் எடுத்துக் காட்டியுள்ளேன்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறுகிறார்: 'வாசக ரஞ்சகமாக எழுதுபவன் என மதிப்பீடப் பெற்றுள்ள ஒரு நாவலாசிரியன், தனது நாவலில் வரும் சமூக அல்லது மனித உறவுகளை, பிரச்சினைகளை நாவலின் தலைப்பாகக் கொள்ளாது, தான் சித்திரித்துள்ளவற்றின் அடிப்படையில் தர்க்க ரீதியாகக் கிளம்பும் பிரச்சினைகளின் பூதாகரத் தன்மையைக் கண்டு, தானே ஒரு சாதாரண வாசகன் போல நின்று, நிலைமைகள் இப்படி இருக்கும்போது இந்த நாடு உருப்படுமா என்று ஆதங்கப்பட்டு அந்த ஆதங்கத்தையே நாவலின் தலைப்பாகக் கொடுக்க முன்வந்துள்ளான் எனில், இலக்கிய விமர்சகன், இலக்கியப் படைப்பாளியோடு தான் வைத்துக்கொள்ள வேண்டிய உறவை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய கட்டம் வந்துவிட்டது என்பது தெளிவாகத் தெரிகின்றது'



அவர் தொடர்ந்து, 'இலங்கைத் தமிழ் மக்களைத் தாக்கும் பிரச்சினைகளின் திரள் நிலையைச் செங்கை ஆழியான் இந்த நாவலிற் காட்ட முனைந்துள்ளார். தமிழ் மக்களின் அகப்புற முரண்பாடுகளையே எடுத்துக் காட்டுகின்றார். இலக்கிய வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்கும் பொழுது, ஈழத்துத் தமிழிலக்கியத்தின் சிரத்தை மாற்றம் நன்கு தெரிகின்றது' என்கிறார். 'செங்கை ஆழியானின் சமூகக் கட்டுப்பாட்டுணர்வு சந்தேகமற நன்கு புலனாகின்றது. உதவி அரசாங்க அதிபராக இருக்கும் குணராசா, செங்கை ஆழியானுக்குப் பெரிதும் உதவுகிறார். அரசு என்பது ஆளும் வர்க்கத்தின் கருவி. அதன் நிறுவனங்கள், அதன் எடுகோள்களான பெறுமானங்கள். கருத்துநிலைகள் மேலாண்மையுள்ள வர்க்கத்தின் நலனுக்கே பயன்படும் என்பதையும் செங்கை ஆழியான் சித்திரிப்பிலே காணக்கூடியதாகவுள்ளது. படைப்பாற்றலுள்ள அரசாங்க நிர்வாகிகள் இலங்கையில் பொதுமக்கள் வாழ்க்கை பற்றிய மறக்கமுடியாத இலக்கியங்களை தோற்றுவித்துள்ளனர். லியனாட் வுல்ஃவ் முதல் லீல் குணசேகர வரை இதனைக் காணலாம். தமிழ எழுத்தாளர்களைப் பொறுத்தளவில் செங்கை ஆழியான், செ. யோகநாதன், செ. கதிர்காமநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் தான் கடமையாற்றிய பகுதியின் சமூக உறவுகளையே தனது படைப்பிலக்கியங்களின் பிரதான குவி மையமாகக் கொண்டு காட்டுவதில் செங்கை ஆழியான் முன்னுக்கு நிற்கின்றார்'

(கா. சிவத்தம்பி — 1983)

'இந்த நாவலில் மிக முக்கியமானதாக எனக்குப் படுவது அதன் தலைப்புத்தான். இந்தத் தலைப்புத்தான் செங்கை ஆழியானை அவரது நான்காவது கட்டத்திற்கு இட்டுச் செல்லவுள்ளது என நினைக்கிறேன். மற்றவர்கள் எல்லாரும் நிர்வாணமாக நிற்க ஒருவன் மட்டும் அந்த மற்றவர்களுடன் இணைந்து போகாது மறுத்து நிற்பதும். அப்படி நிற்பதுக்காக ஒரு மசுக்குட்டியும் ஒரு பண்டாராவும் தங்கள் உயிரைப் பயணம் வைப்பதும் வர்க்க ஒருமைப்பாட்டில் மட்டும் வரக்கூடிய உண்மையான மனிதாயத்தைக் காட்டுகின்றது. இந்த மனித நேயம் வரும்போதுதான் சமூக அதிகாரத்துக்காக அரசியல் நடத்தும் உலுத்தத்தனம் நன்கு புலப்படுகின்றது'

(கா. சிவத்தம்பி — 1983)

அரசியல் உலுத்தத்தனத்தை இனம் காட்டுவதற்காக நான் எழுதிய இன்னொரு நாவல் 'தீம்தரிகிடத்தோம்' ஆகும். செம்பியன் செல்வனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'அமிர்த கங்கை'யில் இது தொடராக வெளிவந்தது. 1988 இல் யாழ். இலக்கிய வட்டத்தின் 40 வது வெளியீடாக நூலுருப் பெற்றது.

'1956 ம் ஆண்டு தமிழ் மக்களின் அரசியல் நிலைமைகள் இன்றைய இக்கட்டுகளை எவ்வாறு உருவாக்கின என்பதே இந்த நாவல் சமூகத்திற்குச் சொல்லும் செய்தியாகும். 1956 மே முதலாம் திகதி தொடங்கி யூன் 27 இல் இக்கதை முற்றுப் பெறுகிறது. இன்றைய இனப் பிரச்சினைக்கும் போராட்ட முனைப்புக்களுக்கும் வித்தான சம்பவங்களை இன்றைய தலைமுறையினருக்குப் புரிய வைப்பதற்கும் வரலாது ஒன்றை இளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர் ஏற்றுக் கொள்வதற்கும் இந்த நாவல் துணைபுரிகின்றது. தமிழ் இளைஞனான சுரேந்திரன் தன் அலுவலகத்தில் வேலை செய்யும் சிங்களப்பெண் சோமாவைக் காதலிக்கிறான். யூன் மாதம் நடைபெற்ற காலிமுகத்திடல் சத்தியாக்கிரகத்தால் கொழும்பில் இனக்கலவரம் வெடிக்கிறது. அதன் காரணமாக அவர்களின் காதலும் வெடித்துச் சிதறுகிறது' (குறமகள் — கலை இலக்கியக் களம்— 1989)

அரசியல் வாதிகள் தமது பாராளுமன்றக் கதிரைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இனவாதம் பேசி, ஆட்சியில் அமர்கின்றனர். இரு இனத் தலைவர்களும் சிநேக பாவத்துடன் விருந்துகளில் கலந்து பேசி மகிழ, சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஒருவரையொருவர் பகைத்து வெட்டிக் கொள்கின்றனர். அரசியல் அயோக்கியர்களின் பகடைக் காய்களாக மக்கள் சிதைவதைத் 'தீம்தரிகிடத்தோம்' நாவல் சித்திரிக்கின்றது.

'பெரும்பான்மை இனத்தின் பிரதிநிதிகளாக சோமா, அவள் அண்ணன், ராஜபக்ஸ மூவரும் அந்த இனத்திற்கேயுரிய இயல்பான மூர்க்கமும், ஆவேசமும் அவசரமும் உடையவர்களாக இருப்பதோடு இனத் துவேசிகளாகிறார்கள். சோமாவின் காதல் கூட இனவெறியில் தகர்ந்து போவதால் ரோமியோ யூலியட்கள் தோன்றவில்லை. செங்கை ஆழியானுக்குரிய தெளிவான கைவந்த உத்தி முறைகளும் நாவல் எங்கும் பரிமளிக்கிறது. நடப்பியல் நிகழ்வு சம்கால நடவடிக்கைகளைப் பொறுத்துக் கதை சொல்லும் பாணி, தற்காலப் பேச்சு நடையும். செந்தமிழ் நடையும் கலந்ததாக அமைய வரலாற்றையும் கற்பனையையும் இணைத்தும், பிணைத்தும் குறியீட்டு உத்தியைக் கையாண்டு அக்கால கட்ட அரசியல், சமூகத்தில் எவ்வாறு தாக்கம் பெறுகிறது என்பதைத் தீம்தரிகிடத்தோம் காட்டுகின்றது' (குறமகள் — 1989)

தீம்தரிகிடத்தோம் நாவலில் நான் சொல்ல வந்த சங்கதி 1956 ஆம் அரசியல் வரலாற்று நிகழ்வுகளின் விளைவுகளும் அவ்வேளைகளில் தலைவர்கள் நடந்து கொண்ட முறைகளுந்தாம். இதில் ஹன்சாட் பேச்சுக்கள் உரிய இடங்களில் இடம் பெறுவதால் இந்த நாவல் ஓர் ஆவணமாக அமைவதாக நா. சுப்பிரமணியம் கருதுவர். (நா. சுப்பிரமணியம், மல்லிகை 19[illegible]) சுரேந்திரன்—சோமா இருவரது காதல் முறிவடைவதற்கு காரணமாக அமைந்த இனப்பகைச் சூழலைச் சித்திரிக்கும் ஆசிரியர், பாராளுமன்றத்தில் ஒருவரோடு ஒருவர் மோதும் சிங்கள, தமிழ்த் தலைவர்கள் மக்கள் மத்தியில் கொந்தளிப்பையும் இனவெறியையும் மூட்டி விட்டுத் தம்மளவில் கூடிக்களித்து மகிழ்கின்றனர், என்ற குறிப்பையும் தருகிறார். பிரதமரின் மாளிகையில் அவரது மகளின் பிறந்தநாள் விழாவில் தமிழ்த் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

'பாராளுமன்றத்தில் எப்படி ஒருவரையொருவர் திட்டித் தீர்த்துக் கொள்கிறார்கள். சண்டை பிடிக்கிறார்கள். இங்கு பார்த்தால் எவ்வளவு அந்நியோன்னியமாக இருக்கிறார்கள் பார்த்தீரா?' என ஒரு எம். பி. இன்னொருவரிடம் கூறினார்.

'அதுதான் அரசியல்......' என்கிறார் மற்றவர்.

'இன்னமும் கொழும்பில் இனக்கலவரம் பூரணமாக அடங்கவில்லை. அதைச் சிறிது கவனிக்க வேண்டும்' என்றார் ஒரு தமிழ்த் தலைவர்.

'அதைப் பாராளுமன்றத்தில் பேசுவோம். இந்த மாலைப் பொழுதை அரசியல் கலக்காது கழிப்போம்.' இவ்வாறு அங்கு உரையாடல் நிகழ்கிறது. இதன் மூலம் அன்றைய அரசியல்வாதிகள் தொடர்பான ஆசிரியரின் விமர்சனம் வெளிப்படுகின்றது. (நா. சுப்பிரமணியம் — 1988)

அரசியல்வாதிகள் அன்று விட்ட தவறுகளின் அறுவடைகளை இன்று நாம் செய்து கொண்டிருக்கிறோம் என் நாவலாக்கத்தினைப் பொறுத்தளவில் தீம்தரிகிடத்திதோம் வேறுபட்ட உள்ளடக்கம் கொண்டதொரு நாவல். நிகழ் காலப் பிரச்சினைகளில் எதிர்காலத் தேவையைக் கண்ட ஆக்கம் புதிய தலைமுறைக்குத் தெரியாமல் எவ்வவு விடயங்கள் உள்ளன.

'தீம்தரிகிடதித்தோம் என்ற இந்த நூல் ஒரு புதிய முயற்சி. 800 பக்கங்களில் காவியமாக எழுதப்பட வேண்டிய கருப்பொருளும் உருவப் பொருளும் அப்படியாக எழுதக்கூடிய ஆற்றல் உள்ள ஒருவரால் 80 பக்கங்களில் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன. ஆகப் பரந்து நிற்க வேண்டிய ஒரு விருட்சம், ஒற்றைக் கொப்பு வைத்த தென்னையாகி புதுமை என்றதினால். பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவுள்ளது' (நந்தி — 1988)

இந்த நாடு உருப்படாது, தீந்தரிகிடதித்தோம் ஆகிய இரு நாவல்களும் எழுதப்பட வேண்டிய சூழ்நிலையும் அதற்கான அநுபவமும் தெளிவானவை. அவை இரண்டும் எடுத்துக் கொண்ட கருப்பொருள்கள், பகைப்புலங்கள் எனக்குப் பரிச்சயமானவை. இந்த நாடு உருப்படாது எடுத்துக் கொண்ட பொருள் புராதன கிராமம் ஒன்றிற்கும் புதிய குடியேற்றக் கிராமம் ஒன்றிற்கும் இடையிலான சமூகச் சிக்கலை விபரிப்பதாகும். அக்காலகட்டத்தில் அரசியல் அதிகாரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்கப்பட்ட போது, அவர்களின் வால்பிடிகளாக இயங்கியவர்கள் எப்படி நடந்து கொண்டனர் என்பதை இந்த நாவல் பேசுகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் போர்க்குணம் கொண்டவர்களாக மாறுகின்ற சூழலை இந்த நாவல் விபரிக்கின்றது. அதிகாரிகளின் முறையற்ற செயற்பாடுகளை இந்த நாவலில் விளக்கியுள்ளேன். எனக்கு அந்நியமான எதையும் இந்த நாவலில் எடுத்து நான் கூறவில்லை.

தீம்தரிகிடத்திதோம் எனது மாணவ நிலைச் சம்பவங்களை அடிநாதமாகக் கொண்டது. தமிழரசுக் கட்சியில் பற்றுக் கொண்ட எனது சகோதரர் புதுமைலோலன், காலிமுகத்திடலில் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டு, கை கழன்ற நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட நிகழ்வும், காலிமுகச் சத்தியாக்கிரகத்தினைத் தொடர்ந்து நாட்டில் வெடித்த இனக்கலவரமும் நான் அறியாதவனல்ல. சாத்வீகப் போராட்டத்தின் மூலம் தமிழரின் பிரச்சினைகளுக்கு விடிவு கிடைக்கும் என நம்பிய மாணவர்களில் ஒருவனாக நான் பல்கலைக்கழகத்தில் இருந்தேன். யாழ்ப்பாணக் கச்சேரி முன் சத்தியாக்கிரகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தலைவர்களால் நடாத்தப்பட்டபோது, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் ஊர்வலமாக வந்து நாட்கணக்கில் தொடர்ந்து நிகழ்ந்த சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர். பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில், என்னாலும் அண்மையில் அமரரான க. நவசோதியாலும் ஒழுங்கு செய்யப்பட்ட பேராதனைத் தமிழ் மாணவர்களின் மாபெரும் ஊர்வலம் யாழ்ப்பாணம் கச்சேரியின் முன். இறுதி நாளன்று சத்தியாக் கிரகத்தில் பங்குகொண்டது. மாலை நாங்கள் கலைந்து சென்றோம். அன்றிரவு சத்தியாக்கிரகிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் தாக்கப்பட்டு கலைக்கப்பட்டனர். மீண்டும் என் அண்ணர் புதுமைலோலன் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவங்கள் தீம்தரிகிடத்தித்தோம் நாவலின் பகைப்புலச் செய்திகளாயின. அவை நான் மக்கள் முன் நாவல் வடிவில் முன்வைத்த சமூகச் செய்திகளுக்கு வலுவூட்டின. அக்காலகட்டத்தில் என்னால் எழுதப்பட்ட 'நாட்டிற்கு இருவர்' என்ற சிறுகதை மிகவும் இனவாதம் பேசும் கதையென தேசியம் பேசியவர்களால் விமர்சிக்கப்பட்டது. ஆனால் எனது சமூகப்பார்வை தெளிவாக இருந்தது என்பது இச்சிறுகதை மூலம் எனக்குப் புரிந்திருந்தது. அது இந்த நாடு உருப்படாது. தீம்தரிகிடத்தித்தோம் நாவல்கள் மூலம் மீண்டும் இரு தடவைகள் நிரூபிக்கப்பட்டுள்ளது எனக் கருதுகின்றேன்.

இதனையே செம்பியன் செல்வன், தீம்தரிகிடத்தித்தோம் நாவலிற்கான பதிப்புரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: 'சமூகப் பிரச்சினைகளை எழுத்தால், எண்ணத்தால், அணுகுமுறையால், தத்துவார்த்தத் தேர்வால் வேறுபட்டு எழுதி வந்தவர்களிடையே கூட, அடிப்படையில் ஒரு பொதுமை வேரோடி நின்றமை குறிப்பிடப்பட வேண்டிய ஓர் அம்சமாகும். அது— சமூகப் பிரக்ஞை; பொருளாதாரப் பிரக்ஞை; அரசியல் பிரக்ஞை. இந்தப் பிரக்ஞைகள் அனைத்தையும் உள் வாங்கிய இனப்பிரக்ஞை. இந்த இனப் பிரக்ஞையின் பாதிப்பிலிருந்து எந்தவொரு எழுத்தாளரும் விடுபடவில்லை என்பதை அவர் தம் எழுத்துக்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சுட்டிக் காட்ட என்றும் தவறவில்லை. இது விபத்தோ தற்செயலோ அல்ல. தவிர்க்க முடியாத நியதி......... இவ்வகைப் புதிய நாவல்கள் கற்பனை கலவாத உண்மைக்கும் அதன் உருவுக்கும் ஏற்பத் தத்தம் எல்லைகளையும் உள்ளடக்கங்களையும் தாமே தோற்றுவித்துக் கொண்டன. எனவே, இந்த நாவல் சத்தியமானது; நித்தியமானது. தீம்தரிகிடத்தித்தோம் ஊழி நடனம் எட்டுத் திக்குகளிலும் பொடிபட நடக்கின்றது.

(தொடரும்)

**எம்மிடம் கிடைக்கும் நூல்கள்**

**டொமினிக் ஜீவா**
— கருத்துக் கோவை 15 – 00

**மல்லிகை ஜீவா**
— மணி விழா மலர் 30 – 00



# காற்று

**—தெணியான்**

மாமா சயிக்கிள் ஒன்றை மல்லாக்காகக் கிடத்தி அதனை உதிரிப் பாகங்களாகக் கழற்றிப் போட்டுக் கொண்டிருக்கின்றார். மாமாவின் கூரிய பார்வை சுழற்றிச் சுழற்றிப் பிடிக்கும் தேடுதல் வெளிச்சம்போல வீதியில் இடைக்கிடை மேய்ந்து கொண்டு வருகிறது. இது மாமாவின் வழமையான தொழில் ஷோட்ட மேய்ச்சல்.

அப்பொழுது காற்றுப்போன ஒரு சயிக்கிளை உருட்டிக் கொண்டு அங்குவந்து சேருகின்றார் மாஸ்ரர். மாஸ்ரருக்கு முகம் வியர்த்துப் போய்க் கிடக்கின்றது. காலை வெயில் முகத்தில் அடித்ததில் மாஸ்ரர் களைத்துப் போனார். பாவம் மாஸ்ரர்! நல்லாச் சலித்துப் போனவராகத்தான் வந்து நிற்கின்றார்.

மாஸ்ரரைக் கண்டவுடன் மாமா மனதில் உற்சாகம் பிறந்து விடுகின்றது. மாஸ்ரருக்கு மாமா கொடுக்கின்ற வரவேற்பில் அந்த உற்சாகம் வெளிப்படுகின்றது. மாமா வாயைத் திறந்து 'வாருங்.......' என்று ஆரம்பிக்கிற பொழுது வார்த்தைக்கு வலிந்தொரு அழுத்தம் வந்து விடுகின்றது. பிறகு நொடிக்கும் பொழுது இடைவெளியில் நீட்டி பலாக்காப் பாலில் விரல் தொட்டிழுப்பது போல் கார்வை சேருகின்றது. அதன் பிறகு 'கோ'வை உச்சஸ்தாயியில் ஆலாபரணம் பண்ணி சங்கீதமாக அது வந்து முடிகின்றது.

தெய்வன் கையில் வேலையுடன் கவனமாக இருந்தவன், 'பேஸன்'டியில் உள்ள சொற்ப மண்ணெண்ணெய்க்குள் உதிரிப் பாகங்களைப் போட்டுக் கழுவிச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த அவன்... மாமாவின் 'நளினம்' கேட்டுத் தலை நிமிருகிறான்.

மாஸ்ரர் ஒரு சுள்ளி. பனையாக வளர்ந்த 'ஆடுகால்' அவருக்கு. அந்தக் கால் இருந்தும் பயனில்லாத அளவில் உயர்ந்து கிடக்கிறது. கடை விறாந்தை. விறாந்தைக்கென்று அமைந்திருக்கும் தனிவழி ஒரேயொரு ஒற்றையடி. அந்தப் படியிற் கால் வைத்து மாஸ்ரர் மேலே ஏறிவருகின்றார்.

மாமா மாஸ்ரரை இப்போது கவனிப்பதாக இல்லை.

அவர் தலை குனிந்து முன் போலக் கழற்றிக் கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஸ்ரருக்கும் வரும்போதிருந்த சலிப்பும் களைப்பும் மாமாவின் உபசரணையில் பறந்து போய்விட்டது

மாஸ்ரர் இரு கைகளையும் எடுத்து இடுப்பில் முண்டு கொடுத்து. கட்டபொம்மன் வசனம் பேசுவதற்குத் தயாராகக் கொண்டு நிற்கும் சிவாஜி கணேசன் போலப் பாவனையில் நிலை கொண்டு நிற்கிறார். மூக்குக் கண்ணாடி வியர்வை கசகசப்பில் நழுவிக் கொண்டு வந்து 'விழுகிறேன் பாரென்று' மூக்கு நுனியில் தொங்கிக் கொண்டு நிற்கிறது. கண்ணாடிக்கு மேல் உயர்ந்து செல்லும் அவர்பார்வை இப்பொழுது மாமாவின் மீது சென்று பதிந்து கிடக்கின்றது.

மாஸ்ரர் எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறார். மாமாவின் தலை தன்பக்கம் திரும்ப வேண்டுமென.

மாமாவுக்கும் அது தெரியும். ஆனால் மாமா திரும்புவதாக இல்லை. மாஸ்ரரை வரவேற்கும் பாங்கில் அவரைக் 'கழட்டிப் போட்டன்' என்ற விதமான ஒரு புளுகம் மாமா மனதில். போலியான விஷச் சிரிப்பைச் சொண்டுக்குள் வைத்து மறைறத்துக் கொண்டு, ஒன்றுமறியாதவர்போல் சாவியினாற் கழற்றிக் கொண்டிருக்கிறார்.

தெய்வனுக்குச் சிரிக்க வேண்டும் போல வருகிறது.

மாமாவும், மாஸ்ரரும் சின்னக் குழந்தைகள் ஆகிவிட்டார்கள். மாஸ்ரருக்கு நடிக்க வருகிறது. மாஸ்ரர் சின்னக் குழந்தைகளுக்குத்தான் படிப்பிக்கின்றவர். அவர்களுக்கு ஆடிப் பாடி நடித்து அவருக்குப் பழக்கம். மாமா தான் செய்கிற தொழிலைச் செய்து கொண்டு இருக்கிறார். மாஸ்ரரும் சயிக்கிள் கடையை வகுப்பறை என்று நினைத்துக் கொண்டு நிற்கிறார். இருவரும ஒத்த வயதுக்காரர், சிநேகிதர்கள். அவர்கள் சந்தித்து விட்டால் எப்பொழுதும் இப்படித்தான். உள்ளே இருக்கும் உண்மையான மனிதர்களை இந்தச் சமயங்களில்தான் காணலாம். அவர்களைப் பார்த்து தெய்வன் நகைக்கலாமா? கூடாது. ஆனால் சிரிப்பு வருகிறது. அவர்களின் கௌரவிப்புக்காக அவன் மெல்லத் தலை குனிந்து கொள்ளுகின்றான். உள்ளத்துள் மலரும் சிரிப்பு உதட்டிலும் மலரத் துடிக்கிறது. இதழ்களினால் அந்த நமுட்டுச் சிரிப்பை மெல்லக் கசக்கி உள்ளே விழுங்கிவிடுகின்றான். சரி இந்த அளவில் முடிந்துவிடப் போவதில்லை, 'கொளுவல்' இனித்தான் ஆரம்பமாகப் போகிறது. தெய்வன் மனதில் எண்ணிக் கொள்ளுகின்றான்.

மாமா வேலையில் முழுக் கவனத்துடன் இருப்பதான பாசாங்கு இன்னும் கலையவில்லை.

மாஸ்ரர் எவ்வளவு நேரம் இப்படி நடிக நிலையில் நின்று கொண்டிருப்பது! அவர் இப்பொழுது கட்டபொம்மன் சிவாஜி கணேசனாக இல்லை.

மாமாவின் நடிப்பையும் மாஸ்ரர் கலைத்தாக வேண்டும்,

'மூதலாளி எப்படிச் சுகம்?' மாஸ்ரர் ஆரம்பிக்கின்றார்.

'முதலாளி வெளியிலை போய்விட்டார்' தான் முதலாளி அல்லவென்று மாமா தட்டிக் கழிக்கிறார்.

'இப்ப எல்லாருந்தான் பிளேன் ஏறி வெளியிலை பறந்து போகினம், முதலாளியும் வெளிக்கா போய்விட்டார்?'



'ஓமோம், வெளிக்குத்தான்'

'வெளிக்குப் போனால் ஒரு மணம் இருக்குமே!'

'என்ன மணம்?'

'வித்தியாசமாக ஒண்டுமில்லை... கொலோன் மணம்'

சிரிப்பொலியில் கடை நிறைந்து வழிகின்றது.

மாமாவினால் இப்பொழுது கழற்றுவதற்கு இயலவில்லை... மாஸ்ரரையுந்தான். மாமா சாவியைக் கையிற் தூக்கிப் பிடித்த வண்ணம் மாஸ்ரர் பக்கம் திரும்புகிறார். மாமாவின் கண்களில் கண்ணீர் துளிர்க்கின்றது, அவை வித்தியாசமான கண்கள். மனம் மகிழ்ந்து மாமா சிரித்தால் துளிர்த்துப் போகின்றவை.

தெய்வனுக்கும் அடக்க முடியவில்லை. அடக்கமாக மெல்லச் சிரித்துக் கொள்ளுகின்றான்.

'ஆ... அதிலை இருங்கோ!' அங்குள்ள ஆசனத்தைத் திரும்பிப் பாத்துக் கொண்டு மாமா சொல்லுகின்றார்.

அது ஒரு முழு நீளமான வாங்கு. அதில் உட்கார்ந்திருந்தவனை மாமாவின் குரல் மெல்ல எழுப்பிவிடுகின்றது. 'இல்லை... நீங்க இருங்கோ...... நீங்க இருங்கோ...' என்று சொல்லிக் கொண்டு மாஸ்ரர் அதில் அமர்ந்து கொள்கிறார்.

'இம்...... இனிச் சொல்லுங்கோ'

'என்னத்தைச் சொல்லுறது மாஸ்ரர்?' மாமா சலித்துக் கொள்ளுகிறார்.

'எப்ப பார்த்தாலும் உமக்குப் பஞ்சப் பாட்டுத்தான். நீர் தானே இந்தப்பகுதி பெரிய சேர்ஜன். வெட்டுக் கொத்திலை பெரிய வீரனாச்சே!'

'அதுசரி... வேலைவேணுமே'

'இதென்ன கதை! சயிக்கிளிலை தானே இப்ப கிழவியலும் ஓடித்திரியினம். சயிக்கிள் எங்கடை தேசிய வாகனம்'

'இப்ப எத்தினை சயிக்கிள் கடைகள் புதிசாக வந்திட்டுது. பழைய ரயர் ஒண்டைத் தூக்கிப்போட்டு எத்தினை பேர் காத்துக் கொண்டிருக்கிறான்கள். லாம்பெண்ணை நூறு, நூற்றைம்பதெண்டு விக்கிது. சும்மா அங்கினை சின்னச் சின்ன வேலையள்தான்!'

மாஸ்ரருக்கு இருக்க இடம் கொடுத்து எழுந்து விறாந்தையில் நின்று கொண்டிருப்பவன் மீது மாமாவின் கவனம் திரும்புகிறது. 'பத்துநிமிஷம் பொறும். முடிச்சுத் தந்துவிடுறன்'

மாமா சமாதானம் சொல்லிக் கொண்டிருக்கையில், ஒரு இளவட்டம் சாரத்தை ஒரு கையிற் தூக்கிப் பிடித்துக் கொண்டு படியேறி உள்ளே வருகிறது

'பம்......' இளவட்டத்தின் நிமிர்ந்த கேள்வி.

மாமா 'அங்கை கிடக்கு' என்று அலட்சியமாக மூலையைக் காட்டிவிடுகிறார்.

அது வெளிப் பம். இலகுவில் காற்று ஏறாது.

தெய்வனுக்கு அவனைப் பார்க்க மனதில் எரிச்சல் மூளுகிறது.

'காற்றடிக்கிறதுக்கு காசு?' மாஸ்ரர் கேட்கிறார்.

'ச்சே... அதைவிடப் பிச்சை எடுக்கலாம்'

'நீர் என்னப்பா! சயிக்கிள் கடை ஒன்றிலை எழுதிப் போட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கிறார்கள்; காற்று அடிக்க 50 சதம்; காற்று அடித்துக் கொடுக்க ஒரு ரூபா!'

'என்னையும் எழுதிப் போடச் சொல்லுறியளாக்கும்!'

'ச்ச... ச்ச... அதுக்கெல்லாம் காசு தரச் சரிவராது. காற்றுக்கென்ன காசு?'

'அப்பிடிச் சொல்லாதையுங்கோ...... இப்ப எல்லாத்துக்கும் காசுதான்!

'ஓமோம், நாங்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கிறதுக் காகத்தான் இப்ப நாங்களே... விலைகொடுத்துக் கொண்டிருக்கிறம்'

மாமா பட்டென்று உன்னிப் பாகத் தெய்வனை அவதானிக்கிறார். அவருக்கு முகம் மாறிப் போகின்றது. தெய்வன் முன் இந்தப் பேச்சு மாமாவுக்குப் பிடிக்கவில்லை என்பது மாஸ்ரரும் விளங்கிக் கொண்டு விடுகிறார். மாஸ்ரரின் பேச்சைத் திசை திருப்பிவிடும் நோக்கத்துடன் மாமா சொல்லுகிறார்.

'உங்களுக்கென்ன... மாதம் முடியச் சம்பளம்! எல்லாத்துக்கும் விலை குடுப்பியள்'

'மாதம் முடிய அல்ல... இருபதாந் திகதி'

'பார்த்தியளே...... வேலை செய்யாமலே பத்து நாள் முந்தி காசு வருகுது'

'பதினைஞ்சு நாளுக்குக் காணாத சம்பளம். அதையும் காசாகத் தந்தாத்தானே! கண்டறியாத ஒரு செக் தருகினம். அதை மாத்துகிறதுக்கு கொமிஷன் ஆயிரத்துக்கு நூறு......... நூற்றி இருபது......' மாஸ்ரருக்குப் பற்றிக் கொண்டு வருகிறது.

மாமா எந்தத் தருணத்திலும் மிக எச்சரிக்கையாகத்தான் இருப்பார். மாமாவின் கண்கள் அடுத்த கடையின் விறாந்தையைக் கள்ளமாக நோட்டமிடுகின்றன. அந்த விறாந்தையின் மேல் சம்மாணமிட்டுச் சௌகரியமாக அமர்ந்து இப்பொழுது ஐந்து ரூபாவிற்கும் சிகரெற்றை ஜாலியாகப் புகைத்த வண்ணம் இருவர் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாஸ்ரர் போன்றவர்களின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கொக்குகள். மாஸ்ரரைத் தொடர்ந்து பேசவிட்டால் அது அவர்கள் காதில் போய் விழுந்து...... வீணான சோலி... கதையை நீட்டக் கூடாது. வேலையை முடித்து மாஸ்ரரை உடனடியாக அனுப்பி வைத்து விட வேண்டும்.

'மாஸ்ரர் சயிக்கிளை மேலே தூக்கிவிடுங்கோ!

தெய்வன், மாஸ்ரற்றை சயிக்கிளை ஒருக்கால் பார்! இது நாளைக்கு வவுனியாவுக்குப் போற சயிக்கிள்...... வியாபாரத்துக்கு ... இண்டைக்கு முடிச்சுக் குடுத்துவிட வேணும்'

மாமா தெய்வனைத் துரிதப் படுத்துகின்றார்.

தெய்வன் மாமா எப்போது சொல்லப் போகிறாரென்று காத்திருந்தவன் போல, செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டு விட்டுச் சட்டென்று எழும்புகிறான். வழமைக்கு மாறாகத் தானே சயிக்கிளை மேலே தூக்கி உள்ளே கொண்டு வருகின்றான். விரித்த சாக்கின் மேலே ஆமை அறுப்பதுபோல மல்லாக்காக் கிடத்தி, முன் ரயரைக் கழற்ற ஆரம்பிக்கின்றான்.

மாஸ்ரர் தெய்வனை உன்னிப்பாகக் கவனிக்கிறார். பள்ளி மாணவன் ஒருவன் தவறுதலாக



அங்கு வந்து நிற்பது போலவே இப்பொழுதும் அவன் காணப்படுகிறான். அரைக்காற்சட்டையும் பெனியனுமாக வந்து நிற்கின்றான். துடினமான சின்னப் பையன். எத்தினை வயதிருக்கும்! பதின்மூன்று இருக்கலாம். வளர்த்தியைப் பார்த்து கூடத்தான் சொல்ல வேண்டும். நிச்சயம் பதினைந்துக்குக் குறைவுதான். நல்ல செந்தளிப்பான முகம். மிகக் கூர்மையான சிறுவன். அவன் கண்களில் தனியான ஒரு ஒளி இருக்கிறது..

அவனை முதன் முறை கண்ட தருணம் மாமாவிடம் மாஸ்ரர் விசாரித்தார்!

'படிக்கிற பிள்ளைபோலை இருக்கே.........?'

'ஓம் மாஸ்ரர். சகோதரியின்ரை மேன். இவன் உழைச்சுத்தான் வீட்டிலை அடுப்பெரியுமெண்ட நிலைமை. மூத்ததுகள் மூண்டு குமராக இருக்குதுகள். நானும் என்ன செய்ய ஏலும்!'

'பொடியன் படிக்கக் கூடியவன்'

'அதுக்கென்ன செய்கிறது'

மாமா மனதின் ஏக்கம் அப்போது வெளிப்பட்டது.

மாஸ்ரருக்கு இப்பொழுது சும்மா இருக்க இயலவில்லை. அவருக்கு அதுதான் இயல்பு. அவர் பார்வை கடைக்குள்ளே அலைய ஆரம்பிக்கிறது.

கடையின் பின்புறச் சுவரை அண்டி மூலையில் ஒரு மேசை. அதன் மீது சட்டம் போட்ட இலக்குமி, முருகன் வண்ணப் படங்கள். படங்களின்மேல் வாடிப்போன செவ்வரத்தம் பூக்கள். அதற்குச் சற்று முன்னே வெறுமையான பழைய அலுமாரி ஒன்று. அதற்குப் பின்னால் கடதாசி மட்டையினால் மூடிக் கிடக்கும் தண்ணீர்வாளி. அலுமாரிக்கு முன் பழைய உதிரிப் பாகங்கள் நிரம்பி வழியும் மூடி கழன்ற ஒரு தகரப் பெட்டி. அதன் அருகிலும் ஆணி அடித்த சுவரிலும் பழைய ரியூப்பும், ரயர்களும் சுவரிலும் சுவருடன் சார்த்தி இருக்கும் இரண்டு சயிக்கிள்கள். சுவர், நிலம் எங்கும் கருமையும், எண்ணெய்ப் பிசுபிசுப்பும்.

இவைகளெல்லாம் முன்னரே மாஸ்ரருக்குக் கண்டு சலித்துப் போனவைகள்தான். மாஸ்ரர் இப்பொழுது வீதியைப் பராக்குப் பார்க்கத் திரும்புகிறார்.

நகரத்தின் இருதயமான நாற்சந்தியை அண்மித்த பகுதி அது. சன நடமாட்டத்துக்கு எப்பொழுதும் குறைவிருக்காது. மக்கள் கூடும் இடங்களில்தானே ஹெலியும், பொம்பரும் இப்போது கண் வைக்கின்றன! அதனால் வீதிகள் எப்போதும் வரண்டுபோய்க் கிடக்கின்றன, இன்று சன நடமாட்டம் இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. சயிக்கிளும் நடையுமாக ஆண்களும் பெண்களும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது இருந்தாற்போல 'குடு... குடு...' என்றொரு சத்தம் எழுகின்றது. அது மாஸ்ரரின் கவனத்துக்குள் வந்து விழுகின்றது. வேறென்ன... ஹெலியாகத்தான் இருக்க வேண்டும்! மாஸ்ரர் முகத்தில் கலவரம் பரவுகிறது. மாமாவும் குழம்பிப் போகின்றார். கடந்த வாரம் இரண்டு பொம்பர்கள்— மூர்க்கமாகக் குண்டுகளை வீசியதில் ஒரு ஆணும் பெண்ணும் உடல் சிதறி வீதியிற் செத்துப்போனார்கள். அந்த இரத்த நெடி இன்னும் மாறவில்லை. இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடக்குமோ! சனிபிடிச்ச சயிக்கிள்...... காற்றுப் போகாமல் இருந்திருந்தால் இதுவரை மாஸ்ரர் வடுபோய்ச் சேர்ந்திருக்கலாம். வீட்டில் பதுங்கு குழிக்குள்ளே இறங்கி இருக்கலாம். இப்போது என்ன செய்வது?

சத்தம் வரவர அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

நெஞ்சுகள் படபடக்கின்றன.

'லான்ட்மாஸ்ரர் ஒன்று சந்தியில் வந்து திரும்பி வீதியில் ஊர்ந்து கொண்டு செல்கிறது.

'அட... இது நிலச் ஹெலி!'

மாஸ்ரருக்கு நிம்மதியாக மூச்சு வருகிறது.

,மாஸ்ரர் நல்லாப் பயந்து போனியள் போலை! போனதும் ஒரு மாஸ்ரர்தான்... பயப்பிட வேண்டிய ஆள்தான்'

தன்னை மற்றவருக்குள் வைத்துப் பார்ப்பது மனிதனின் குணம். மாமா, மனதில் உண்டான அச்சத்தை மாஸ்ரர்மேல் சுமத்திவிடுகின்றார்.

தெய்வன் மனதுக்கு இந்தப் பாதிப்பேதும் இல்லைப்போல... அவன் மாஸ்ரரின் சயிக்கிள் ரயரைக் கழற்றி, ரியூப்பை வெளியே இழுக்கின்றான்.

அவன் விழிகள் வியந்து விரிகின்றன. ஒரு ரியூப்பில் எத்தனை ஒட்டுகள்?

'ஸேர், இந்த ரியூப்பைக் கொஞ்சம் பாருங்கோ!'

மாஸ்ரர் எழுந்து கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக் கொண்டு தெய்வன் அருகே சென்று 'பூந்து' பார்க்கிறார்.

'ஓகோ.. இத்தனை ஒட்டுகள்! உடலெங்கும் இந்திரனுக்கு



ஆயிரங் கண்களாம். அவைகளை விட அதிகம். மாஸ்ரருக்குத் தெரியவராது, அவர் சயிக்கிளிலுள்ள ஓட்டைகள். காற்றுப் போனால் மகன் ஒட்டி வந்து கொடுப்பான். இப்பொழுது மாஸ்ரர் உவமை தேடுகிறார்... சோமசுந்தரப் புலவரின் 'இத்திரப் பழங்குடை' என்பதா! கவிஞர் செல்லையாவின் 'நெய்திடு நூலிலும் தைத்திடு நூல் அதிநீளமதே' என்று சொல்வதா!

'ஸேர். இப்ப ஒரு மாதிரி ஒட்டித்தாறன். இனிமேல் காத்துப் போனால் புதிசு போடுங்கோ!' தெய்வன் அக்கறையோடு அந்த ரியூப்பை ஒட்டுகின்றான்.

மாஸ்ரருக்கு அதிசயமாக இருக்கிறது. இவ்வளவு துரிதமாகவும் கச்சிதமாகவும் வேலையைச் செய்து முடிப்பான் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. இனிக் காற்றடிக்க வேண்டும். காற்றடிப்பது இப்போதெல்லாம் ஒட்டிக் கொடுக்கிறவரின் வேலையல்ல. ஆனால் மாஸ்ரர் அதைச் செய்ய வேண்டுமென்று தெய்வன் எதிர்பார்க்கவில்லை. அவனே காற்றடிக்கிறான். சயிக்கிளுக்கு உயிர் வந்து கொண்டிருக்கிறது. காற்று என்பது உயிரல்லவா! மனித உடல் என்பது 'காற்றடைத்த பை', என்று பட்டினத்தார் சும்மாவா சொல்லி வைத்தார். காற்று.. சயிக்கிளுக்கும் உயிர்தான். தெய்வன் உயிர்க் காற்றை உள்ளே ஏற்றி மூடிக்கிறான். பின்னர் சயிக்கிளை மெல்ல உருட்டி வெளியே கொண்டு வருகிறான்.

மாஸ்ரர் எழுந்து மாமாவிடம் காசைக் கொடுத்துவிட்டு வெளியே வருகின்றார். தெய்வனின் தோளில் தட்டிக் கொடுக்கிறார். சயிக்கிளை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு வீடு நோக்கிப் புறப்படுகின்றார்.

மாஸ்ரர் மனதுக்கு நம்பிக்கையில்லை. வீடுபோய்ச் சேரும் வரையாவது காற்று நிற்குமா! தெய்வன் செம்மையாகத்தான் ஒட்டினான். ஆனால் இன்னொரு ஒட்டு கழரத்தான் போகின்றது. புதிசு வாங்கிப் போடும்படி சொல்லுகிறான் தெய்வன். ரியூப் மாததுரம தர மாட்டார்கள். ரயரும் சேர்த்து சோடியாக வாங்க வேண்டுமாம். இரண்டும் இருநூறைம்பது ரூபா காசுக்கு எங்கே போவது? வெறும் பெயர்தான் மிச்சம்...... மாசச் சம்பளக்காரனாம்!

மாஸ்ரர் பயந்து கொண்டிருந்தது போல ஒன்றும் நடந்து விடவில்லை. ஒரு வார காலத்துக்குப் பிறகும் சயிக்கிள் ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால் மாஸ்ரர் காதில் ஒரு செய்தி வந்து விழுந்தது. தெய்வன் போய்விட்டானாம்... இயக்கத்துக்கு அப்போதும் மாஸ்ரர் சயிக்கிளையே நினைத்துக் கொள்ளுகின்றார். என்ன மாயம் செய்தானோ அந்தப் பிள்ளை? சயிக்கிளின் உயிர்க் காற்று வெளியேறிவிடாது அடைத்து வைத்திருக்கிறானே!

அந்தச் சயிக்கிள் உதவுவது போல மாஸ்ரருக்கு யார் இன்று உதவுகிறார்கள்? சந்தைக்குப் போய் மீன், மரக்கறி வாங்க வேண்டும், சவர்க்காரம் எங்காவது விற்கின்றார்களாவென்று அறிந்தால் ஓடிப்போக வேண்டும். மண்ணெண்ணெய், சீனி, தேங்காய், அரிசி எல்லாவற்றுக்கும் சயிக்கிள் சவாரிதான்.

இவைகளுக்கு மாத்திரமா? உயிரைக் காப்பதற்கும் சயிக்கிள் மாஸ்ரருக்கு உதவி இருக்கிறது. மாஸ்ரர் கையெழுத்துப் போடுவதற்கு மட்டுமே இப்போது பள்ளிக்கூடம் போய்வருகிறார. குண்டு வீச்சு விமானங்கள் பள்ளிக் கூடங்களைக் குறிவைத்து தாக்குவதற்குத் தொடங்கியதன் பிறகு பிள்ளைகள் படிக்க வருவார்களா? மாஸ்ரரும் அவர் மக்களை அனுப்புவதில்லை. அன்று கையெழுத்துப் போடுவதற்காக மாஸ்ரா பள்ளிக்குப் போயிருந்தார். அந்தச் சமயம் பார்த்து வானத்தில் பொம்பர் ஒன்று வட்டமிட ஆரம்பித்தது. மாஸ்ரர் சயிக்கிளில ஏறி 'தப்பினோம் பிழைச்சோம்' என்று கடுகதியில் வீடு வந்து சேர்ந்தார். அந்தச் சயிக்கிள் மாஸ்ரரிடம் அப்போது இல்லாது போயிருந்தால்......?

யாழ்ப்பாண நகரப் பகுதியில் இப்பொழுது சண்டை நடந்து கொண்டிருக்கின்றது. பொம்பர், ஹெலி, அவ்ரோ, சீனச் சகடை எல்லாம் அங்கேதான் குண்டு போட்டுக் கொண்டிருக்கின்றன. இங்கேயும் வந்து நினைவுபடுத்திக் கொண்டு போகின்றார்கள். அவ்வளவாகக் கெடுபிடி இல்லை. மாஸ்ரர் வீட்டுக்குள் பதுங்கிக் கொண்டிருக்காது சயிக்கிளில் ஓடியாடித் திரிவதற்கு முடிகிறது. மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது. தெய்வனின் காற்றில் மாஸ்ரரின் சயிக்கிள் இப்போதும் ஓடிக் கொண்டிருக்கிறது.

மாஸ்ரருக்கு ஒரு நண்பர் இருக்கிறார். அயல் வீட்டுக்காரர். அவர் மாஸ்ரரைத் தேடிக் கொண்டு வீட்டுக்கு வருவார்— மாஸ்ரர் வாங்கும் செய்தித்தாள் படிப்பதற்கு. மாஸ்ரரும் அவர் வருகையைத் தினமும் ஆவலுடன் எதிர்பார்ப்பார். செய்தித்தாளில் வெளிவராத செய்திகள் எல்லாம் அவர் எப்படியோ அறிந்து வைத்திருப்பார். மாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரருக்கு அவர்தான் முக்கியமான செய்தித் தாள். வழமைக்கு மாறாக இரவு ஒன்பது குண்டுகள் வெடித்துக்கொண்டிருந்தன. குண்டுகள் வெடித்து பூமி அதிரும் தாலாட்டில் மாஸ்ரரும் இப்போது உறங்கிப் பழகி விட்டார். பொழுது விடிந்ததும் இரவு என்ன நடந்தது என்பதை அறியும் ஆவலுடன் நண்பரை மாஸ்ரர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

நண்பர் மாஸ்ரரைத் தேடிக் கொண்டு வருகின்றார். அவர் சும்மா வரவில்லை — ஒரு செய்தியுடன்தான் வந்திருக்கின்றார்.

'கோட்டையைப் பிடிக்கிறதுக்காகப் பொடியள் போராடிக் கொண்டிருக்கினமாம்'

மாஸ்ரர் மனதுக்கு இனிப்பாக இருக்கிறது.

அடுத்து என்ன செய்தி சொல்லப் போகின்றார்?

மாஸ்ரர் மனம் ஆவலாதிப் படுகின்றது.

'உங்கடை சிநேகிதரின்ரை மருமேன்...... சயிக்கிள் கடையிலை நிண்ட பெடியன் ராத்திரிக் களத்திலை செத்துப் போச்சாம்'

ஆ... மாஸ்ரருக்கு நெஞ்சில் அடைக்கிறது...... காற்று........

நேற்று மாலை வெளியே போய்த் திரும்பி வந்து தாழ்வாரத்தில் விட்ட சயிக்கிளை அவதியோடு நோக்குகின்றார்.

அது...... தெய்வன் ஓட்டித் தந்த அது...... செத்துக் கிடக்கின்றது.

காற்று... போய்விட்டது.

அவன் காற்று........?

மக்கள் இன்று சுவாசித்துக் கொண்டிருக்கும் காற்றுடன் அவன் காற்றும் கலந்து கொண்டிருப்பதனால்தான் இந்த மண் உயிர்த்துக் கொண்டிருக்கின்றது

---

## பாராட்டுகின்றோம்

பிரபல எழுத்தாளர் 'சுதாராஜ்' அவர்கள் ஆனந்த விகடன் நடத்திய வைரவிழா விழிப்புணர்வுச் சிறுகதைப் போட்டியில் 'அடைக்கலம்' என்ற சிறுகதைக்கு 5000 ரூபா (இந்திய ரூபா) பரிசைப் பெற்றுக் கொண்டார். அக்கதை 16-6-91ல் ஆனந்த விகடனில் பிரசுரிக்கப்பட்டது.

இக் கதையைத் தமிழகத்தில் தொலைக் காட்சித் தொடராக ஒளி பரப்புவதற்கு சென்னையிலுள்ள கிருஷ்ணமூர்த்தி அசோசியேஸ்டஸ் ஸ்தாபனத்தினர் இச் சிறுகதை ஆசிரியரின் அனுமதியைப் பெற்றுள்ளனர்.

இவரது சிறுகதைத் தொகுதியில் ஒன்றான 'ஒரு நாளில் மறைந்த இரு மாலைப் பொழுதுகள்' தொகுதியை மல்லிகைப் பந்தல் கடந்த ஆண்டில் வெளியிட்டு வைத்ததும் இங்கே நினைவு கூரத்தக்கது.

நண்பர் சுதாராஜ் அவர்களை மல்லிகை பாராட்டுகின்றது.

— ஆசிரியர்



# இசையைச் சிலையாய் வடிக்கும் கலைஞன்

எம். கே. முருகானந்தன்

அழகிய இளம் பெண் அவள். இடுப்பில் குடம் சுமந்து வருகின்றாள்.

நீண்ட மூக்கும், போதையூட்டும் தடித்த இதழ்களும் கொண்ட கவர்ச்சிமுகம்; நாணம் நிழலாடக் குவியும் முகத்தைப் பின்னின்று நிமிர்த்த முனையும் கனத்த கொண்டை: வாளிப்பான தோள்கள்; நீண்ட மிருதுவான கரங்கள்: கனத்த மதர்த்த மார்புகளை அடக்க முடியாது சோரும் துணித்துண்டு; துவளும் சிறுத்த இடை; வளவளப்பான நீண்ட கால்கள்.

நிறந்தான் கருமை; ஆனாலும் கவர்ச்சிகரமான கருமைதான். மீண்டும் மீண்டும் பார்த்து ஏங்க வைக்கும் அங்க நேர்த்தி கொண்ட உடலமைப்பு.

ஆனால்......! அவளது உயரமோ மூன்று அடிக்கும் குறைவானதுதான்.

என்ன வியப்பாக இருக்கின்றதா?

வியப்பதற்கு ஒன்றுமில்லை; அது ஒரு சிலை.

மரத்தினாலான அந்த அற்புதச் சிற்பத்தை வடித்தவர், ஐயாத்துரை விஸ்வலிங்கம் என்ற சிற்பக் கலைஞர் ஆவார்.

மரத்தினால் செதுக்குவது என்பது ஒரு குலத் தொழில் சார்ந்த கலையாகவே எமது சமூக அமைப்பில் இருந்து வந்திருக்கிறது. ஐந்து, ஆறு தசாப்தங்களுக்கு முன் கட்டப்பட்ட வீடுகளின் ஜன்னல்களும், கதவுகளும் நல்ல சித்திர வேலைப்பாடுகள் அமைந்த கலைப் பொருட்களாக இருந்ததை நாம் இன்றும் காணலாம்.

இதைத் தவிர, பெட்டகம், தைலாப்பெட்டி, திருவலகைப் பெட்டி, இடியப்ப உரல், உட்காரும் பலகைக் கட்டை, அகப்பை போன்ற வீட்டுப் பாவனைப் பொருட்களிலும், கோயிற் தேர்களிலும் எமது முன்னோர்களான மரச் செதுக்கு கலைஞர்கள் தமது கை வண்ணத்தைக் காட்டத் தவறவில்லை.

ஆயினும் நாட்டியம், சித்திரம் இசை போன்று சிற்பம் ஒரு தனியான கலையாக வளரவோ, மக்களின் அபிமானத்தையும் ஆதரவையும் பெறவோ இல்லை என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. மிக அண்மைக் காலம் வரை சிற்பக் கண்காட்சி எதுவும் தமிழ்ப் பகுதிகளில் நடைபெறுகின்றன.

புகழ்பெற்ற ஓவியக் கலைஞரான திரு. ஆ. மார்க்கு அவர்கள் ஓவியக் கலையுடன் சிற்பக் கலையிலும் ஆர்வம் காட்டி வந்ததையும் அவரது சில சிற்பங்கள் கண்காட்சிகள் பலவற்றில் வைக்கப்பட்டிருந்ததையும் நாம் நினைவு கூரலாம்.

எனினும் தனது முழு வாழ்க்கையையுமே சிற்பக் கலைக்கு அர்ப்பணித்து முழுநேர சிற்பக் கலைஞனாக வாழ்பவர் திரு. ஐ. விஸ்வலிங்கம் அவர்கள்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் முன்பு கூறிய குடம் சுமக்கும் பெண், இவரது தத்வ ரூவப் பாணிப் படைப்புக்களில் ஒன்று. இத்தகைய தத்வரூபம் படைப்புகளின் உடலின் கவர்ச்சி மிகு நெளிவுகளுக்கும், அங்கங்கள் நேர்த்திக்கும் முக்கிய கவனம் செலுத்தியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

கீரியும், பாம்பும் என்ற சிலையிலும் கூட இத்தகைய குணாதிசயங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது.

ஆயினும், மனிதனது அக உணர்வுகளையும், உணர்வின் பரிமாணங்களையும் தெள்ளெனக் காட்டும் வீரியம் தத்ரூபப் பாணியில் கிடையாது என்பதை உணர்ந்த இவர் இப்பொழுது பெரும்பாலும் ஓரளவு அரூப பாணியில்தான் சிற்பங்களை உருவாக்குகின்றார்.

இதற்கு 'காவடியாட்டம்' நல்லதோர் உதாரணம். வளைந்து நெளிந்து தாள லயத்தோடு ஆடிக்கொண்டிருப்பது போன்ற பிரமையூட்டும் காவடிக்காரனும், அவனோடு ஒத்திசைவோடு அசைந்து கொண்டே, ஓசை நயத்தோடு இசையொலி எழுப்புவதுபோல் தோற்றமளிக்கும் மேளகாரனும் குழலூதபவனும் எவர் மனத்தையும் தன்னோடு ஒன்றிவிடச் செய்யும் ஆளுமை கொண்ட சிற்பமாகும்.

இதைப் போன்றேதான் 'பாம்பாட்டி' என்ற சிற்பமும் ஒரு நிகழ்வின் தோற்றத்தை மாத்திரமன்றி, அக்கணத்தில் கிளர்ந்தெழுகின்ற உணர்வலைகளையும் சித்திரிக்கின்ற ஒரு அற்புதமான கலைப் படைப்பாகும். பாம்பாட்டியின் நீண்ட வளைந்த உடலும், முறுக்கித் திருகி மடிக்கப்பட்ட கால்களும், வளைந்து நெளியும் கைகளும், இசையோடு இணைந்து மடியும் கண்களும் பாம்பாட்டியே பாம்புபோல் இசையில் மயங்கி ஆடுவது போன்ற உணர்வை எழுப்புகிறது.

'குருட்டுப் பிச்சைக்காரனும் நாயும்' இன்னுமொரு கலைநயம் நிறைந்த படைப்பாகும். நாயினால் தட்டிவிடப்பட்ட உணவுத் தட்டுக் கோப்பையும் சிதறிக் கிடப்பதும் நாயின் அவாவும், நீராசையும், வேதனையும், கோபமும் கலந்து சோர்ந்த பிச்சைக்காரனின் முகமும், கையில் ஓங்கிய கம்பும், பின்னணியில் பரந்த மரமும் தென்னைகளும் நிறைந்த கிராமியச் சூழ்நிலையும் எம்மை ஒரு தனி உலகிற்கே அழைத்துச் செல்கின்றன.

கண்டியைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டித்துறையைப் பெண் கொண்ட ஊடமாகவும் பெற்ற இவர் அண்மைக் காலங்களில் இங்கேயே நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றார்.

1950 களில் இலங்கையின் கலைத்துறையினருக்கு சிற்பக் கலைஞராக அறிமுகமாகிய இவர் 1960 களில் மாத்திரமன்றி சர்வதேச மட்டத்திலும் கலைப் போட்டிகளில் பங்குபற்றி பல விருதுகளைப் பெறுமளவிற்கு பெரு வளர்ச்சியடைந்துள்ளார்.

இலங்கையில் முன்னோடிக் கலைஞர் குழுவினராகிய 67 வர் குழுவினருடன் இவர் கொண்டிருந்த தொடர்பின் காரணமாக தென் இலங்கையின் பல பாகங்களிலும் இவரது சிற்பக் கண்காட்சிகளை நடாத்தக் கூடியதாக இருந்தது.

1984 ம் ஆண்டு இலங்கை கலைச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட கண்காட்சியில் இவரது பிக்கு, மீனவன் ஆகிய சிற்



பங்கள் முறையே முதலாம் இரண்டாம் பரிசுகளை தட்டிக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

வடபகுதியைப் பொறுத்தமட்டில் 1989 ம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில்தான் இவரது கண்காட்சி யாழ் பல்கலைக்கழக கலைவட்டத்தின் ஆதரவுடன், யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதுவே யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதலாவது தனிநபர் சிற்பக் கண்காட்சி எனக் கொள்ளலாம். இதைத் தொடர்ந்து இப்பகுதிகளில் நடைபெற்ற ஓவிய சிற்பக் கண்காட்சிகள் சிலவற்றிலும் இவரது படைப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இக் கண்காட்சிகளின் ஊடாகத்தான் சிற்பக் கலை பற்றிய ஓர் விழிப்புணர்வு யாழ்ப்பாணப் பகுதியில் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

அண்மையில் நடந்த விமானக் குண்டு வீச்சினால் வீடும் சிற்பத் தொழிற்கூடமும் மோசமாகச் சேதமடைந்தன. பல சிற்பங்கள் அழிந்துவிட்டன. சில சேதமடைந்துவிட்டன. ஆயினும் இவர் மனம் சோர்ந்து விடவோ விரக்தியடைந்து முடங்கி விடவோ இல்லை. சேதமடைந்த உபகரணங்களுடன் ஒரு சிறிய சிற்பத் தொழிற் கூடத்தை அமைத்ததின் மூலம், தனது கலை உணர்வு அடக்கப்படக் கூடிய ஒன்றல்ல என்பதை நிரூபித்து உள்ளார்.

61 வயதை எட்டும் இவரது உருவமே ஒரு பண்பட்ட கலைஞனை உருவகப்படுத்துகிறது.

உடலை ஊடுறுத்துச் சென்று உணர்வுகளைத் தேடும் கூர்மையான விழிகள், சதா தேடலில் உழன்று கொண்டிருக்கும் கலைஞனின் சிந்தனைக் கோடுகள் வளைந்தோடும் நெற்றி, மேவி வாரப்பட்டு தோள்களை எட்டத் துடிக்கும் தலைமுடி, தடித்த முறுகிய மீசை, குறுந்தாடி.

கருங்காலி உடல் நிறத்துடன் பேதப்பட்டு நிற்கும் பால் வண்ண தலைமுடியும் மீசை தாடியும்.

அந்தக் குட்டையான தடித்த விரல்கள்தானா இத்தனை நவீனமும், நுணுக்கமும் நிறைந்த கலைப் படைப்புக்களை உருவாக்குகின்றன என்ற பிரமிப்பை ஏற்படுத்துகிறது.

'திறமையாகச் செதுக்கப்படும் அழகிய உருவம் வாழ்வின் சின்னம்' என இவர் கருதுவதாக விமர்சகர் டி. பி. சுப்பாகொட ஒரு சமயம் கூறியபோதும், இவரது படைப்புகள் அழகான பாத்திரம் வடிப்பதுடன் நின்றுவிடவில்லை. அவலட்சணங்களையும் விகாரங்களையும் கூட கலை நயம் கொண்ட படைப்புக்களாக உருவாக்க முடியும் என்பதை 'முகம்' என்ற இவரது சிற்பம் காட்டுகிறது.

களிமண், உலோகம், கல் போன்றவற்றிலும் இவர் சிற்பங்களை வடித்திருந்தாலும் மரத்தினையே பெரும்பாலும் உபயோகிக்கிறார். விறகுகளாகவும், புறவெட்டுகளாகவும் கழிக்கப்படுகின்ற மரத்துண்டுகள்தான் இவரது முக்கிய ஊடகமாகின்றது.

அகப்படும் ஊடகத்தில் தனது முழுச் சிரத்தையையும் காட்டிச் செதுக்குகின்ற சீர்மையைக் கண்டு பிரமிக்காமல் இருக்க முடியாது. அத்துடன் உபயோகிக்கும் மரத்தின் வெறுமையாக இடங்களை விடுவதும் கிடையாது. மிஞ்சிக் கிடக்கும் இடங்களில் அந்தச் சிறபத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவான வேறு உருவங்களையோ, பொருத்தமான நெளிவுசுழிவாக கோடுகளையோ செதுக்கி சிற்பம் உணர்த்த வருகின்ற கருத்துக்கு மேலும் உரமூட்டுவது இவரது சிறப்பாகும்.

ஒய்யாரம், ஆண்டி, முதுமை, தளர்ச்சி, விவசாயி ஆகியவை இவரது வேறுசில உயிர்த்துடிப்பு மிக்க படைப்புக்களாகும்.

ஆயிரக் கணக்கான சிற்பங்களை இவர் வடித்திருந்தாலும் நாம் இப்பொழுது பார்க்கக் கிடைப்பவை ஒரு சிலதான். ஏனையவை பல தரமான சுவைஞர்களின் இல்லங்கட்கு அழகூட்டிக் கொண்டு இருக்கின்றன.

'உண்மையான கலைப் படைப்பு என்பது, தெரிந்த ஒன்றினைப் பிரதியெடுப்பதோ மீண்டும் புனைந்து காட்டுவதோ அல்ல' என்கிறார்.

உண்மைதான்.

மனதிற்குப் பிடிபட மறுத்து. புரிந்துகொள்ள முடியாது நிற்கும் ஒரு சிந்தனையையோ காட்சியையோ கருத்தையோ ஒரு படைப்பிற்குள் அடக்க முயலும் ஒரு கலைஞனின் தேடலிலும் முயற்சியிலும்தான் ஒரு உன்னதமான கலைப்படைப்பு உருவாக்க முடியும்.

அந்தத் தேடலும், சலிப்படையாத முயற்சியும் இந்தக் கலைஞனிடம் நிறைந்து கிடக்கின்றது. இதனால் தான் இவரது படைப்புக்கள் நித்தம் நித்தம் புதிய எண்ணங்களையும் உணர்வுகளையும் ரசிகர்களிடம் எழுப்பி விடுகின்றன.

தமிழ்ச் சமுதாயம் பல எதிர்பார்ப்புகளுடன் இவரை நாடி நிற்கின்றது. தலைசிறந்த கலைஞனாக இருந்து உன்னத சிற்பங்களைச் செதுக்குவதுடன் இவரது பணி ஓய்ந்துவிடக் கூடாது. ஓவியர் 'மார்க்கு' அவர்கள், ஓவியக் கலையின் நுணுக்கங்களையும், நெளிவு சுழிவுகளையும் கற்பித்து ஆளுமை நிறைந்த ஓர் ஓவியர் பரம்பரையையே உருவாக்கியுள்ளார்; இன்னமும் உருவாக்கிக் கொண்டே இருக்கிறார். அதேபோல திரு. விஸ்வலிங்கம் அவர்களும் நல்ல சிந்தனையும், கலைத்திறனும், உத்வேகமும் கொண்ட சிற்பக் கலைஞர் பரம்பரை ஒன்றை உருவாக்க வேண்டும். அப்பொழுதுதான் அவரது சிற்பக் கலைப் பணி பூரணத்தும் அடையும்.

●


மல்லிகை

**புதிய ஆண்டுச் சந்தா**

1991-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து புதிய சந்தா விபரம் பின் வருமாறு:

தனிப் பிரதி ரூபா 10 - 00

ஆண்டு சந்தா ரூபா 100 - 00

(ஆண்டுமலர் தவிர, தபாற் செலவு உட்பட)

தனிப்பிரதிகள் பெற விரும்புவோர் தகுந்த தபாற் தலைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

**மல்லிகை**

234 B, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்




# யாழ்ப்பாண ஓவியக்கலை வரலாற்றில்

**சோ. கிருஷ்ணராஜா**

**3. ஓவியத்தில் வரலாற்றுப் பதிவு அம்பலவாணர் இராசையா (196)1 — 1991**

ஈழத்தின் மூத்த ஓவியராகப் புகழ் பெற்று, அடுத்த தலைமுறை ஓவியர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும், குருவாக இருந்த எஸ். ஆர். கனகசபையால் ஓவியத்துறைக்கு ஈர்க்கப்பட்டவரே இராசையா. வின்சர் ஆட் கிளப்பின் ஆயுட் காலம் முழுவதும் அதனுடன் தொடர்பு கொண்டியங்கிய இராசையா, அவ்வோவியப் பயிற்சியகத்தின் முதல் மாணவர்களில் ஒருவர். எண்ணிக்கையில் அதிகமான நிலக்காட்சி ஓவியங்களை வரைந்துள்ளார்.

1945ல் உணவு உற்பத்தி போதனாசிரியராக ஏழாலை சீனியர் அரசாங்கப் பாடசாலையில் நியமனம் பெற்ற இவர் பின்னர் வெளிமடை அரசினர் பாடசாலையிலும், வேலணை மத்திய மகாவித்தியாலயத்திலும் கடமையாற்றி, 1969ல் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை ஓவிய விரிவுரையாளராய் நியமனம் பெற்று, 1972ல் ஓய்வு பெற்றார்.

இராசையாவின் கலைப் பெறுமானமுள்ள ஓவியப்படைப்புகள் வின்சர் ஆட் கிளப் காலத்திலிருந்து, அவர் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராய் இருந்த காலப் பகுதிக்குரியனவாகும். ஏறக்குறைய முப்பது ஓவியங்கள் வரை இன்று இவர் கைவசமுண்டு. ஓவிய ஆசான்களாகிய டாவின்சி, ரபேல், கொன்ஸ்டபில் லோ என்பவர்களைத் தன் முன்னோடிகளாகக் கருதும் இராசையாவில் எஸ். ஆர். கனகசபையின் செல்வாக்கும் பாதிப்பும் நிறைய உண்டு. யாழ்ப்பாணத்தவர்க்கு யாழ்ப்பாண கிராமியத்தின் வாழ்வையும் வளத்தும் மீள் கண்டுபிடிப்புச் செய்து கொடுப்பதாக இவரது ஓவியங்கள் காணப்படுகின்றன. இயற்பண்பு ஓவியரான இராசையா மிகக்குறைந்தளவிலான பிரதிமை ஓவியங்களையே வரைந்துள்ளார். பிரதிமை ஓவியங்களை Free hand ஆகவே வரையவேண்டும் எனக்கூறும் இவர் பிரதிமை வரைவதற்கு எஸ். ஆர். கேயின் அறிவுறுத்தல்கள் தனக்கு மிக்க பயனுள்ளனவாயிருந்தன என்கிறார். 'எவருடைய பிரதிமையை ஓவியமாக செய்ய இருக்கின்றோமோ அவருடன் குறைந்தது ஒரு கிழமையாவது நெருங்கிப் பழகுதல் வேண்டும். அசாதாரண நடத்தைக் கோலங்களை அவதானித்தல் பிரதிமை ஓவியத்திற்கு மிகவும் அவசியமானது'.

பிரதிமை ஓவியம், நிலைப் பொருள் ஓவியம், இயற்கைக் காட்சி என்ற முப்பிரிவிலும் தன் ஓவிய ஆளுமையை வெளிப்படுத்தியவர் இராசையா. இவரது பாட்டனாரின் ஓவியமும், மரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் ஓவியமும் பிரதிமை ஓவியங்களில் குறிப்பிடத்தக்கது.

நிலைப்பொருள் ஓவியங்களில் Psycho (தைல வர்ணம் 1946) குறிப்பிடத்தக்கது. அசாதாரண வெளிப்பாடாகத் தோன்றும் இவ்வோவியம் வர்ணத் தெரிவிற்கும், ஆக்க அமைவிற்கும் சிறப்பான உதாரணமாக விளங்குகிறது. 1952 லும், 1956 வரையப்பட்ட இரு பூங்கொத்து ஓவியங்கள் நிலைப்பொருள் ஓவியத்தில் பிரதேச, காலநிலை வேறுபாடுகளை வெளிப்படுத்தும்வகையில் குளிர், சூடான வர்ணப் பிரயோகத்தைப் பெற்றிருக்கிறது. இவை தவிர மஞ்சள் வர்ண ஆக்க அமைவு ஓவியமும் குறிப்பிடத்தக்கது.

இராசையாவின் ஓவிய ஆக்கங்களில் முதன்மை பெறுவது இயற்கைக் காட்சிகளாகும். கோயிலும் அதன் சூழலுமே பெரும்பான்மையாக வரையப்பட்டுள்ளது. இயற்கைக் காட்சி ஓவியங்களில் மிகைப்படுத்தப்பட்ட தன்மையினை பரக்கக் காணலாம். இராசையாவின் இயற்கைக் காட்சி ஓவியங்களில் பெரும்பாலும் பிரகாசமான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கதிரைமலை உச்சி (தைல வர்ணம் 1947) கதிர்காமத்தில் நிற்கும் உணர்ச்சியை பார்வையாளனுக்கு ஏற்படுத்துகிறது. மருதடி விநாயகர் கோயில் (தைல வர்ணம் 1939) இராமேஸ்வரம் (தைல வர்ணம் 1948), நல்லூர் கந்தசுவாமி கோயில் (தைல வர்ணம் 1940), வரணி தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் தைல வர்ணம் 1940), சுன்னாகம் ஐயனார் கோயில் (தைல வர்ணம் 1949), சட்டநாதர் சிவன் கோயில் (தைல வர்ணம் 1 90) என்பன குறிப்பிடத்தக்கவை.

நிலக் காட்சி ஓவியங்களில் வெளிமடை நகரம் (தைல வர்ணம் 1965), பண்டாரவளை நகரம் (தைல வர்ணம்) என்பன குறிப்பிடத்தக்கன. நிலக்காட்சி ஓவியங்களில் தனிச் சிறப்பான ஆளுமை பெற்ற இராசையாவின் ஓவியங்கள் கலைப்படைப்பு என்ற விழுமியத்தை மட்டும் கொண்டிருக்கவில்லை. அவை வரலாற்றுப் பதிவுகளாகவும், ஈழத்து சைவ, பண்பாட்டுப் பதிவுகளாகவும் விளங்குகின்றன. 1939 ம் ஆண்டில் மானிப்பாய் மருதடி விநாயகர் கோயிற் கட்டட அமைப்பு ஐரோப்பிய செல்வாக்கைப் பின்பற்றி எளிமையான முறையில் அமைந்திருந்ததை இராசையாவின் ஓவியம் எடுத்துக் காட்டுகிறது.

ஒரு காலத்தில் மாட்டுப் பட்டியில் நோய் கண்டால் மாட்டைக் கோயிலிற்கு நேர்ந்து விடும் வழக்கமிருந்தது. இக் காட்சியை வறணி தில்லையம்பலப் பிள்ளையார் கோயிற் காட்சி தருகிறது. இதேபோல 1940 ம் ஆண்டுகளில் நல்லூர்க் கோயில் கோபுரம் இல்லாத கட்டிடமாக இருந்ததையும் முன் வீதியில் நான்கு நெடிய பனை மரங்கள் திருவிழாக் காலங்களில் தட்டி போடுவதற்காக நடப்பட்டிருந்ததையும், சோனகர் ஒருவர் கோயிலின் வெளி வீதியின் இடது பக்கத்தில் கற்பூரம் விற்கும் உரிமை பெற்றிருந்தமையையும் வரலாற்றுப் பதிவாக நம் கண்முன் கொண்டு வருகிறார் இராசையா.

சட்டநாதர் ஆலயம், கதிரைமலை உச்சி என்பனவற்றில் இயற்கைச் சூழல், காட்சி அமைதியுடன் படமிட்டுக் காட்டப்படுகிறது. திருப்பரங்குன்றம் (தைல வர்ணம் 1948) இரு பரிணாமச் சட்டத்தினுள் முப்பரிமானத்தைக் கொண்டுவரும் இராசையாவின் முயற்சியைக் காட்டுகிறது.

ஞாபகத்திலிருந்தே ஓவியம் வரைதல் வேண்டும் என்பது இராசையாவின் அபிப்பிராயம். நேரிற் பார்த்து வரையும் பொழுது ஓவியம் மெக்கானிக்கலாக வந்து விடுகின்றதென்கிறார். அங்கு ஓவியனின் கற்பனைக்கு இடமில்லாது போய் விடுகிறது. ஞாபகம் ஓவிய ஆக்கத்திற்கு வசதியானது. ஓவியத்தை ஒழுங்குபடுத்திக் கீறவும், ஆக்க அமைவிற்கும் ஞாபகம் வசதியாதென்கின்றார் இராசையா. ஒருவகையில் இவரின் இயற்கைக் காட்சி ஓவியங்களின் இலட்சியவகைமாதிரிக்கு இதுவே காரணமெனலாம்.

## 4. மனப்பதி ஓவியர் முத்தையா கனகசபை (1925)

ஐரோப்பியக் கலை வரலாற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக ஓவியத்துறைக்குக் கவரப்பட்டவரே, கொழும்புத்துறையைச் சேர்ந்த முத்தையா கனகசபையாகும். ஏறக்குறைய பதினெட்டு ஓவியங்கள் இவர் கைவசமுண்டு. அவற்றுள் காலத்தால் முந்தியது காந்தியின் பிரதிமை ஓவியம் (தைல வர்ணம் 9 ). ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த பிரதிமை ஓவியங்களையே இவர் வரைந்துள்ளார். இவற்றுள் சுய பிரதிமை (தைல வர்ணம்), காந்தி (தைல வர்ணம் 1965), இவாது மனைவியரது இரு பிரதிமையோவியங்கள் (தைல வர்ணம் 1986), தாய் (தைல வர்ணம்) என்பன பார்வைக்குக் கிடைத்தன. ஆளுமை வெளிப்பாடே பிரதிமை ஓவியத்தின் இலட்சியம் எனக் கூறுகின்ற கனகசபையின் பிரதிமை ஓவியங்கள் இதற்குச் சிறப்பான எடுத்துக் காட்டாகும். குறிப்பாகப் 'பாடசாலைக்குச் செல்லும் பொழுது' என்ற இவரது மனைவியின் பிரதிமை சிறப்பான பண்பு வெளிப்பாட்டைத் தருகிறது.

கனகசபையின் ஆக்கங்களில் நிகழ்ச்சிச் சித்திரிப்பு ஓவியங்களே முதன்மையானவை. இயற்கைக் காட்சியில் நிகழ்ச்சிச் சித்திரிப்பை முதன்மைப்படுத்தும் கனகசபையின் ஓவியங்களில் வண்டிற சவாரி (தைல வர்ணம் 1977), நல்லூர்த் தேர்த்திருவிழா (தைல வர்ணம் 1972), சந்தைக்குச் செல்லும் மீன் விற்கும் பெண்கள் (தைல வர்ணம் 1973), பறையடித்தல் (தைல வர்ணம் 1986), சாமி காவுதல் (தைல வர்ணம் 1987), மழையில் ஆட்டை இழுத்துச் செல்லுதல் (தைல வர்ணம் 1988), தோணியில் பாய் இழக்குதல் (தைல வர்ணம் 1989) என்பன குறிப்பிடத்தக்கவை.

தொழில் முன்னிலைப் பாடவித்தியாதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற கனகசபையின் ஆக்கங்களில் மனப்பதிவுவாதச் செல்வாக்குக் காணப்படுகிறது. மனப்பதிவு வாத ஓவியர்கள் வெளியிடக் காட்சியின் விபரங்களில் அதிக அக்கறை கொள்வதில்லை. பொதுவான மனப்பதிவையே ஓவியமாக வரைகின்றனர். பறையடித்தல் சிறப்பான முறையில் ஓவியர் கனகசபையின் மனப்பதிவை வெளியிடுகிறது.

காட்சிச் சித்திரிப்பு இவரது ஓவியங்களில் முதன்மை பெறுவதில்லை. நிகழ்ச்சியின் மனப்பதிவே முதன்மை நோக்காகும். நிகழ்ச்சிகளின் குணாதிசய வெளிப்பாடு கனகசபையின் ஓவியத் திறனை நன்கு வெளிப்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துகிறது. பிரதிமை ஓவியங்கள் நபர்களின் சாத்வீக குணத்தை வெளிப்படுத்துகிறது. நிகழ்ச்சிச் சித்திரிப்பு ஓவியங்களில் சோகம், அமைதி, பற்றறுத்த தன்மை, இயலாமை, விரைவு என்பன ஓவியக் கருப்பொருளிற்கேற்பச் சிறப்பாக வெளிப்படுத்தப்படுகிறது. நிகழ்ச்சிச் சித்தரிப்போவியங்களில் காட்டுருக்கள் (Models) பயன்படுத்தப் படவில்லை. இதனால் மனித உருக்களின் முக வெளிப்பாடு முதன்மை பெறவில்லை, முக வெளிப்பாடு ஓவியத்திற்கு இன்றியமையாததொன்றல்ல என்பது கனகசபையின் கணிப்பு. மனப்பதிவு வெளிப்பாடே இவரது ஓவியங்களின் செய்தியாதலால், தனி மனிதர்கள் முதன்மை பெறுவதில்லை. உதாரணமாக பறையடித்தல் ஓவியத்தில் சோகமும், தோணிக்குப் பாய் இழுக்குதல் ஓவியத்தில் தோணிக்காரனது கஷ்டமுமே கனகசபையின் மனப்பதிவாக வெளிப்படுகிறது.

கனகசபை இவரது சமகாலத்தவரான பிற யாழ்ப்பாண ஓவியர்களின் இயற்பண்புவாத மரபிலிருந்து விலகியே நிற்கின்றார். நீலம், மஞ்சள் வர்ணங்களின் பயன்பாடு இவர்களது ஆக்கங்களில் கூடுதலாக இடம் பெறுகிறது. இதற்கு கனகசபை வரித்துக் கொண்ட மனப்பதிவுவாதப்பாணி காரணமெனலாம்.


## மல்லிகைப்பந்தல் வெளியீடுகள்

**அட்டைப் பட ஓவியங்கள்** ... 20 – 00
(35 ஈழத்து பேனு மன்னர்கள் பற்றிய நூல்)

**ஆகுதி** ... 25 – 00
(சிறுகதைத் தொகுதி — சோமகாந்தன்)

**என்னில் விழும் நான்** 9 – 00
(புதுக் கவிதைத் தொகுதி — வர்சுதேவன்)

**மல்லிகைக் கவிதைகள்** ... 15 – 00
(51 கவிஞர்களின் கவிதைத் தொகுதி)

**இரவின் ராகங்கள்** ... 20 – 00
(சிறுகதைத் தொகுதி — ப. ஆப்டீன்)

**தூண்டில்** கேள்வி—பதில் ... 20 – 00
— டொமினிக் ஜீவா

**ஒரு நாளில் மறைந்த இரு மாலைப் பொழுதுகள்**
(சிறுகதைத் தொகுதி — சுதாராஜ்) 30 – 00

வியாபாரிகளுக்குத் தகுந்த கழிவுண்டு.

மேலதிக விபரங்களுக்கு: 'மல்லிகைப் பந்தல்'
224 B, காங்கேசன்துறை வீ.
யாழ்ப்பாணம்.




# 'மனித' நிலையம்

— மேமன்கவி

எல்லா யுகத்தின் அலைவரிசையிலும்
ஒலித்தது மனுஷ இரைச்சல்:
சாதனைகளின் இலக்கங்களால்
நிறைந்து கிடந்தது சரித்திரப் பலகை;
'சா' அலையின் சமிக்ஞைக் குவியலில்
சமைந்தது சமாதிகளின் கூட்டணி.

சித்தாந்த கொள்கை முட்களின் வழியே—
குருதிப் புனலாய் வழிந்தது 'இரக்கம்'
சிற்றலை கலந்த காற்றில் அலைந்த
அனாதைக் காற்றாடியாய்
கிழிந்து போனது சமாதான சரீரம்.

எல்லா யுகத்தின் அலை வரிசையிலும்
விடை தெரியா இருட்டிலும்
நிலையங்களாய் மின்னின கேள்விக்குறிகள்;
கைப்பிடிக்குள் காலம் அடங்கிய சுருதியில்
சுருங்கிப் போனது உலகப் பந்து.

அறிவிப்புக்களின் ஓங்காரத்தில்
உரிந்தது செவியின் தோல்;
செவித்தலில் அறுந்து போனது
பொறுமையின் யாழ்!

எல்லா யுகத்தின் அலை வரிசையிலும்
மனுஷ இரைச்சலே!

மத்திய அலைவரிசையில்
மானுட இரத்த மழையில்
இடியாய் இடித்தது 'ஓலம்'

மனசின் ஆகாசத்தில் கரைந்து போனது
பகைமை உணர்ச்சிப் புகை;
போர்வெறி மேக மூட்டமோ — அதில்
தொடக்கியது மனுஷ மரண நிலையம்.

இன்னும் அகப்படாத
வெறிச் சோடிப்போன தனி நிலையமாய்
தனித்து — தவித்துப் போனது
மனிதம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லம்பலத்தில் தோற்றம்

**ஈழத்துச் சிவானந்தன்**

ஆள்பாதி ஆடைபாதி என்னும் வழக்கு அழகுத் தோற்றத் திற்குரிய ஆரம்ப சூத்திரம். பொது வாழ்க்கையில் மனிதர் தம்மைப் பிறர் கவனிக்கும்படி அழகுபடுத்தலை இது குறிக்கும். பொது மேடையான சொல்லம்பலத்தில் நிற்கும் சொற்பொழிவாளர் தமது தோற்றத்தைக் கணிப்புக்குள்ளாக்க ஆடை அலங்காரங்களில் கரிசனை செலுத்த வேண்டும்.

சரக்கு மிடுக்கு செட்டி மிடுக்கு என்று வியாபாரத் துறையில் இரு மிடுக்குகள் பற்றிப் பேசுவார்கள். சரக்கு நன்றாக இராது போனாலும் அதனை விற்கும் செட்டியார் மிடுக்குடையவராயிருத்தால் அச்சரக்கு விலைபோகும் சரக்கு நல்லதாய் மிடுக்கோடு இருக்கச் செட்டியாரும் மிடுககோடு வியாபாரம் செய்தால் சரக்கு அதிக விலை போகும். நல்ல சரக்கு வைத்திருக்கும் செட்டியார் மிடுக்கோடிருப்பார் என்னும் பொருளும் இதற்கு உண்டு. இது போன்றே நல்ல சுருத்துக்களை சேகரித்து வைத்திருக்கும் சொற்பெருக்காளர் மிடுக்குடையவராய் தோற்றத்தில் விளங்க வேண்டும். சொல்லம்பலத்தில் சோர்ந்திருக்கலாகாது.

சொல்லம்பலத்தில் கணிக்கப்படுவதற்குத் தோற்றம் தலையாய காரணமாகும். பொருத்தமும் அளவும் அழகு செய்யும் ஆடை அணிகளுடன் சொல்லம்பலத்தில் நிமிர்ந்த நிலையில் இருக்க வேண்டும். இருந்த இடத்திலிருந்து பேச அழைக்கும் வரை எழுந்திருக்கக் கூடாது. மேடையின் வேறொரு இடத்தில் இருக்கும் பிறரோடு கதைக்க எண்ணி அவருக்குப் பக்கத்தில் நாற்காலி கிடக்கிறதே என்று எழுந்துபோகக் கூடாது. பிறிதொருவர் பேசிக் கொண்டிருப்பது நன்றாயிருந்தால் சிறு தலையசைப்போடு அங்கீகாரம் செய்யலாமே தவிர சங்கீதக் கச்சேரியில் தலையை ஆட்டித் தாளம் போடுவது போல் சொற்பொழிவாளர் நடந்து கொள்ளக் கூடாது. அப்படி நடந்தால் அவரைப் பற்றிய கணிப்பில் கால்ப் பங்கு கழித்தலில் போய்விடும். மேடையிலிருந்தபடி சபையோர் பக்கத்தில் ஒரு திசையையே நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தால் அடுத்த கால்பங்கு கழிப்பில் போய்விடும். சண்டைக்கு வந்திருப்பவர்பேல் சபையை முறைத்துப் பார்த்தபடியோ அல்லது 'உம்' என்று என்று விரக்தி தோன்ற முகத்தை நீட்டிக் கொண்டோ இருப்பின் மற்றக் கால்பங்கும் கழிப்பில் போய்விடும். மேடையிலிருந்தபடி புத்தகம் படிப்பது, குறிப்பெழுதுவது போன்ற ஆயத்த வேலைகளில் இறங்கினால் கடைசிக் கால்பங்கும் கழித்தலில் போய் விடும். தமது தோற்றப் பொலிவுக்கு நலிவு தேடும் விடயங்களை விலக்குவதில் சொற்பொழிவாளர் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

தோற்றத்தினாலே சபையோரைக் கவரும் சொற்பொழிவாளர் தமது வெற்றியின் பங்குகளை படிப்படியாகப் பெற்றுக் கொள்ள



முடியும். புன்முறுவல் பூத்த முகத்துடன் வசீகரமாயிருந்து சொற்பெருக்க எழுந்ததும் மழை மாரியைப் போல் தமிழ் மாரியையும், மலை மணிகளைப் போல் கருத்து மணிகளையும் கொட்டுவதற்கு கருக்கொண்ட மேகமாய், உருக்கொண்ட மலையாய் தோற்றம் காட்டியபடி இருக்க வேண்டும். நேரம் போனாலும் அதோ கம்பீரமாயிருக்கும் சொற்பொழிவாளரின் பேச்சைக் கேட்டுவிட்டு பஸ்ஸை விட்டாலும் நடந்தாவது வீடு போகலாம் என்று கேட்போரைச் சபையை விட்டு விலகாமல் கட்டி வைத்திருக்கும் கயிறாய் தோற்றம் மிளிர வேண்டும்.

அறிஞர் அண்ணா. தவத்திரு குன்றக்குடி அடிகளார், சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத், கலைஞர் கருணாநிதி. நாவலர் நெடுஞ்செழியன், கே. பாலதண்டாயும், அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி, வசந்தா வைத்தியநாதன். வ. பொன்னம்பலம், க. சிவராமலிங்கம், கலைஞர் இ. ஜெயராஜ் ஆகியோர் சொல்லம்பலத்தில் தோற்றப் பொலிவால் சபையோரின் முதற் கணிப்பைப் பெற்றவர்களில் சிலராவர்.

சொற்பெருக்காற்ற எழுந்து நிற்கும்போது சட்டைப் பைக்குள் கையை விடுதல், மேசையை இறுக்கிப் பிடித்தபடியோ மைக்கைப் பிடித்தபடியோ நிற்றல் கழுத்தில் கிடக்கும் சால்வையை இரு கைகளாலும் பற்றியபடி நிமிரல், மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்தல். வியர்ப்பதாக நினைத்துக் கொண்டு கைக்குட்டையால் துடைத்தல், அடிக்கடி குடிக்கத் தண்ணீர் கேட்டல், மூக்குப்பொடி போடல் என்பனவெல்லாம் தோற்றப் பொலிவைக் குறைக்கும் அங்க சேட்டைகளாகும்.

மேற்குறித்த ஏதாவது ஒன்றினைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் சபையை, தம்மை மறந்த மயக்க நிலையில் வைத்துவிட்டுச் சாதுரியமாகச் செய்வது கெட்டித்தனமாகும். அறிஞர் அண்ணா மூக்குப்பொடி போடும் பழக்கம் உள்ளவர். சொல்லம்பலத்தில் நின்றபடியே போடுவார். ஒரு மணி நேரச் சொற்பொழிவில் நான்கு, ஐந்து முறை சபையோருக்குத் தெரியாமல் பொடிபோட்டு விடுவார். தமது பேச்சுச் சுவையால் கேட்போரை மகுடிப்பாம்பாய் மயக்கிவிட்டு சட்டைப்பைக்குள் மெல்லக் கையை விட்டு உள்ளேயிருக்கும் பொடி டப்பியை இரு விரல்களால் திறந்து ஒரு சிட்டிகை எடுத்துக் கொண்டு டப்பியை மூடிவிட்டு கையை வெளியில் இழுத்து சபையோரை நன்றாகக் கவனித்து பேச்சுக்குள் ஒரு பொடியை வைத்து, அவாகளை ஒரு கலகலப்பில் அமிழ்த்தி விட்டு ஒரு உறிஞ்சலில் தன் காரியத்தை யாருக்கும் தெரியாமல் முடித்துவிடுவார்.

ஒருமுறை இவர் தோற்றத்தை நோக்காமல் பேச்சைக் கேட்டு மயங்காமல் உசாராய் விழித்தபடி இருந்து எத்தனை முறை பொடி போடுகிறார் என்று கணக்கிட அண்ணாமலைப் பல்கலைக் கழக சாஸ்திரி மண்டபத்திலே நானும் டாக்டர் மே. து. ராசுகுமாரும் முயற்சி எடுத்து தோல்வி கண்டிருக்கிறோம். அவர் தோற்றமும், தோரணையும், சொல்மாரியும் எந்தக் கட்டுப்பாட்டையும் தகர்த்துவிடும்,

மேடைத் தோற்றத்திற்கு கவர்ச்சி தரும் என்று எண்ணிக் கொண்டு அணியலங்காரங்களை அதிகப்படுத்தக் கூடாது. நாடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையில் ராஜா ராணிப் பாத்திரங்கள் நிற்பதுபோல் மேல் அங்கிகளை அடுக்கி கழுத்துச் சங்கிலிகளை அதிகமாக்கி, கைவிரல்களை மோதிரங்களால் அலங்கரித்து உட்சட்டை மேல்சட்டைகளால் ஊதி மேடையில் நிற்றல் அழகாகாது.

அதிக் அலங்காரங்கள் கூடாது என்பதால் கோவணத்தோடு தோன்றலாம் என்றும் நினைக்கக் கூடாது. சபையை அறிந்து தகுந்த ஆடையணிகளைத் தேர்ந்து தரித்துத் தோன்றுதலே புகழொடு தோன்றுதலாகும்.

சொல்லம்பலத்தில் சொற்பொழிவாளர் தமது முழுத் தோற்றமும் சபையோருக்குத் தெரியும்படி காட்சி கொடுக்க வேண்டும். மேசைக்குள்ளோ, குத்துவிளக்கு. கும்பத்திற்குள்ளோ உருவத்தின் ஒரு பகுதி மறையும்படி நிற்கக்கூடாது. சபையோர் சொற்பொழிவாளரின் முழுத் தோற்றத்தையும் பார்க்க விரும்புவர். வதனப் பொலிவும், வசீகரத் தோற்றமும், புன்முறுவலும் ததும்பத் தோன்றும் பேச்சாளருக்கு ஆரவார வரவேற்பளிப்பர்.

சொல்லம்பலத்தில் நெட்டையாய் நிற்கிறேன் என்ற கவலையோ அல்லது கட்டையாய் இருக்கிறேன் என்ற ஏக்கமோ மனதில் எழ இடங்கொடுக்கக் கூடாது. நெட்டையாய் நின்ற அமெரிக்க நாட்டு ஆபிரகாம் லிங்கனும், தமிழ் நாட்டு நாவலர் நெடுஞ்செழியனும் சொல்லம்பலத்தில் சோபித்தனர். கட்டையாய் இருந்த அறிஞர் அண்ணா தென்தமிழ் நாட்டிலும். ஆசிரியர் சிவராமலிங்கம் ஈழத்துச் சொல்லம்பலத்திலும் ஏற்றுக் கொள்ளப் பட்ட சொற்பெருக்காளராவர்.

தோற்றத்தாலும் சபையை அடக்கலாம். அவையடக்கம் என்பது இரு பொருற்படும். ஒன்று அவையை அடக்குவது. மற்றையது அவைக்கு அடங்குவது. அவையைக் கவர்ந்து அடக்குவதற்கு தோற்றமும் துணை செய்யும். சொள்பொழிவாளரின் ஆளுமை விலாசத்திற்குத் தோற்றப் பொலிவு பக்கபலமானது. சொற்பொழிவுக் கலை நுட்பங்களில் தோற்றம் பற்றிய அக்கறையும் முக்கியமானதே. ●

---

## தகவம் பரிசு

தமிழ்க் கதைஞர் வட்டம் நடத்திவரும் சிறுகதைத் தேர்விலே, *1990 — முதலாம் காலாண்டுக்குரிய பரிசினைப் பின்வரும் கதைகள் பெறுகின்றன. (1) 'பிச்சைக்காரர் ஆக்கவேண்டாம்' செங்கை ஆழியான் எழுதியது. (2) 'அரைஞாண் தாலி' ராஜ ஸ்ரீகாந்தன் எழுதியது. இக்கதைகள் இரண்டும் மல்லிகை வெள்ளிவிழா மலரில் வெளிவந்துள்ளன். மதிப்பீட்டிலே இவை முதல் இடம் பெறுவனவாகக் கணிக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் ரூபா 150 பரிசாக வழங்கப்படுகிறது.*

*திசை பத்திரிகையில் திருமலை சுந்தா எழுதிய 'அவதிக்காரர்கள்' என்னும் சிறுகதை இரண்டாவது பரிசாகிய ரூபா 100 பெறுகின்றது.*

---





# தீ வாத்தியார்

— வரதர்

அப்போது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மிகப் பிரசித்தம்.

பொன்னாலைக்குச் சமீபமாக, சுழிபுரத்தில் விக்டோரியாக் கல்லூரி இருந்தது. இக் கல்லூரி உள்ளூர் தமிழ் மக்களாலேயே தாபிக்கப்பட்டது. ஆயினும் தங்களுடைய அரச விசுவாசத்தை வெளிப்படுத்துமுகமாக 'விக்டோரியா மகாராணியின் பெயரை அக்கல்லூரிக்குச் சூட்டினார்கள் போலும்!' அந்தக் காலத்தில் அரச விசுவாசம் மிக அதிகமாகவே இருந்தது. நான் படித்த நாலாம் வகுப்புப் புத்தகத்தில்

'வாழ்க வாழ்கவே
ஜர்தாம் ஜார்ஜ
மன்னர் வாழ்கவே!'

என்று ஒரு பாட்டு (பாடம்) இருந்தது!

பொன்னாலையின் இன்னொரு பக்கமாக சற்றுத் தொலைவில், வட்டுக்கோட்டையில் இருந்தது யாழ்ப்பாணக் கல்லூரி.

இந்த யாழ்ப்பாணக் கல்லூரி மிகப் பெரியது. அமெரிக்கன் மிஷனரியாரால் நூற்றாண்டுக்கு முன்பு தாபிக்கப்பட்டது. இலங்கை முழுவதும் கல்விமான்களிடையே மிகவும் பிரபலமானது. ஒரு பல்கலைக் கழகத்துக்கு உள்ள மதிப்பு இந்தக் கல்லூரிக்கும் இருந்தது.

அப்போதெல்லாம் இலவசக் கல்வி கிடையாது. வசதியுள்ள பணக்காரவீட்டுப் பிள்ளைகள் மட்டுமே அங்கே படித்தார்கள். வசதி குறைந்த பிள்ளைகள், ஊர்தோறும் இருந்த தமிழ்ப் பள்ளிகளில் படித்தார்கள். தமிழ்ப் பள்ளிகளை அமெரிக்கன் மிஷன் தாபனத்தாரும், அந்தந்த ஊரிலுள்ள சைவப் பெரியார்களும் நடத்தி வந்தார்கள். பின்னால் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் (இந்துப் போட்) தோன்றி ஊர் தோறும் பாடசாலைகளைத் தாபித்து அமெரிக்கன் மிஷனறிக்குச் சரியான போட்டியாக வளர்ந்தது!

யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி மட்டுமல்ல, மாணவரின் உடை, ஒழுக்குமுறை எல்லாவற்றிலுமே மிகுந்த கண்டிப்பு உண்டு.

உயர் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் 'கோட்' போட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக் கொண்டுதான் வகுப்புக்கு வரவேண்டும் என்று கூடச் சட்டம் இருந்ததாம்!

மாணவர்களை ஆங்கில நாகரிகத்தில் வழிப்படுத்துவதிலும் இப்படியான கல்லூரிகள் அந்த நாளில் கண்ணாக இருந்தன.

இந்த யாழ்ப்பாணக் கல்லூரியில் நளவ இனத்தைச் சேர்ந்த ஒரு 'பீயோன்' இருந்தார். கிறிஸ்தவர். கிறிஸ்தவதாபனங்களில் உத்தியோகம் வழங்கும் போது தமது மதத்தவர்களுக்கே முன்வரிசை வழங்குவது அன்றைய வழக்கம்.

உத்தியோகத்துக்காக மதம் மாறியவர்கள் அக்காலத்தில் அநேகர்.

கிறிஸ்தவராக இருந்த படியால்தான் அந்த நளவ இன வாலிபருக்கு யாழ்ப்பாணக் கல்லூரியில் 'பீயோன்' வேலை கிடைத்திருக்குமென்று நம்புகின்றேன்.

இந்துக் கல்லூரிகளில் நளப் பிள்ளையைக் கிட்டவும் அடுத்திருக்க மாட்டார்கள்!

அந்தப் பீயோனுக்கு என்ன பெயர் என்று தெரியவில்லை. 'நாச்சாண்டியன்' என்று ஊரில் சொல்வார்கள். 'நாச்சாண்டியன்' என்பது இயற் பெயரா இருகுறிப் பெயரா என்பதும் இன்றுவரை எனக்குத்தெரியாது.

இந்த நாச்சாண்டியன் பொன்னாலையிலிருந்த ஒரே ஒரு கிறிஸ்தவ நளவ குடும்பத்தில் திருமணம் செய்திருந்தார். (பொன்னாலையில் இன்னும் ஒரு கிறிஸ்தவக் குடும்பம் இருந்தது. அது வேளாளக் குடும்பம். இரண்டு குடும்பங்கள் மதத்தால் ஒன்றுபட்ட போதிலும் அவை இரண்டும் இரண்டு துருவங்களாகவே இருந்தன. கிறிஸ்தவரானாலும் மேல் சாதிக்காரர் மேல் சாதிதான். கீழ் சாதிக்காரர் அவர்களுக்குக் கிட்டவும் போக முடியாது!)

நாச்சாண்டியன் எங்களூர் நளவர்களைவிட வித்தியாசமானவராக இருந்தார். சுத்தமாக உடை அணிந்திருப்பார். வட்டுக்கோட்டையிலிருந்து பொன்னாலைக்கு சைக்கிளில் வந்து போவார்! (ஒரு நளப்பிள்ளை சைக்கிளில் போவதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்!)

இப்படி ஒரு கீழ்சாதிக்காரன் தலைதூக்குவதைப் பெரியசாதிக்காரர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

ஒரு நளப் பயல் இப்படிப் பெரிய சாதிமான்களைப் போல நடந்து தங்களை அவமதிப்பதாக அவர்கள் உண்மையிலேயே நம்பினார்கள்.

ஒருநாள் நாச்சாண்டியன் வட்டுக்கோட்டையிலிருந்து சைக்கிளில் வருகிறார். இவர் மீது சில நாட்களாகவே கண் வைத்திருந்த பெரிய சாதிக்கார வாலிபர் இருவர் அவரை வழிமறித்தார்கள். ஒரு 'வீரன்' உதைத்த உதையில் நாச்சாண்டியன் ஒரு பக்கமும் சைக்கிள் ஒருபக்கமுமாக விழுந்தார்கள்.

அதற்குப் பிறகு நாச்சாண்டியனைத் தூக்கி நிமிர்த்தி நிறையச் 'சாத்துப்படி' சாத்தினார்கள். அதன் பிறகு 'தூக்கடா சைக்கிளை! நளவன் சைக்கில் ஓடக் கூடாது. தூக்கிக் கொண்டு போடா' என்று சைக்கிளைத் தூக்கிக் கொண்டு போகும்படி செய்தார்கள்.

இந்த வீர வாலிபர்களைப் பற்றி அப்போது ஊரிலே பலர் பெருமையாகப் பேசிக் கொண்டது எனக்கு நினைவிருக்கிறது.

அந்தப் பீயோன் சற்றே படித்தவர், கொஞ்சம் உலகம் தெரிந்தவர். 'அவர் அரசாங்கத்திடம் முறைப்பாடு செய்திருக்கலாமே' என்று நினைக்கிறீர்களா?

அரசாங்கம் என்றால் யார்?

கிராம மக்களைப் பொறுந்த மட்டில் விதானையார், அவருக்கு மேல் உடையார், அவருக்குமேலே மணியகாரன். அவருக்கும் மேலே அரசாங்க ஏஜன்டர் — இவர்கள்தான் அரசாங்கம்.

என்ன பிரச்சினையென்றாலும் கிராம மக்கள் விதானையாரிடந்தான் போகவேண்டும். மேற்கொண்டு பொலிசுக்குப் போவது, கோர்ட்டுக்குப் போவது எல்லாம் விதானையார் தீர்மானிக்க வேண்டிய விஷயம் — முக்கியமாக ஏழை மக்களைப் பொறுத்தமட்டில்.........

இந்த விதானை, உடையார், மணியகாரர் — இவர்கள் எல்லாருமே அரசாங்கத்தால் நியமிக்கப்பெற்ற உத்தியோகத்தர்கள். இவர்களை நியமிக்கும் போது, இவர்களுடைய படிப்பு அறிவுக்கு மேலாக இவர்களுடைய உயர்குலத் தன்மையும், ஊரில் இவர்களுக்குள்ள செல்வாக்குமே முக்கிய தகுதிகளாகக் கவனிக்கப்படும்.

கிராமத்தைப் பொறுத்த மட்டில் விதானையார் ஒரு 'சர்வாதிகாரி' மாதிரி. விதானை என்றால் சாதாரண கிராம சேவகரல்லர். அவர் 'பொலீஸ் விதானை! அப்போதெல்லாம் பொலீஸ் நிலையங்கள் பட்டணங்களில் மட்டுமே இருக்கும். கிராமங்களில் பொலீசின் கடமையும் அதிகாரமும் விதானையாருக்குத்தான்!

பெரிய சாதிமான்களாகிய இந்த விதானைமார், தங்களையொத்த சாதிமான்களுக்கு எதிராகக் கீழ் சாதிக்காரர்கள் முறைப்பாடு கொண்டுபோனால் பெரும்பாலும் அதைக் 'கவனிக்க' மாட்டார்கள். சில சமயங்களில் முறைப்பாடு செய்யப் போனவனுக்கே தண்டனை பெற வேண்டிய சந்தர்ப்பமும் நேரிடலாம்!

விதானையாரையும் குற்றம் சொல்ல முடியாது. அவர் தமது சமூகத்தைப் பகைத்துக்கொண்டு வாழ விரும்புவாரா?

மேலும் ஒரு கீழ் சாதிக்காரன், தனக்கு ஏற்படும் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தனது அயலிலுள்ள நாட்டாண்மைக்கார வேளாளரிடம் தான் போவானே தவிர, விதானையாரிடம் போகமாட்டான். அவன் விதானையாரிடம் முறைப்பாடு செய்யப் போனால் அதுவே பெரிய குற்றமாகிவிடலாம்.

ஓ! எவ்வளவு மோசமான நிலையில் அந்தக் காலத்தில் சில மக்கள் வாழ்ந்தார்கள்! — இன்னும் பொற்காலம் வரவில்லைத்தான். ஆனால் நிச்சயமாக அந்தக் கற்காலம் போயே போய் விட்டது!

இதற்கு ஒரு சம்பவத்தை உதாரணமாகச் சொல்கிறேன்.

ஒரு பஸ் வண்டியில் நடந்த சம்பவம்.

பஸ் வண்டியென்றால் நீங்கள் இப்போது பார்க்கின்ற இ. போ. ச. பஸ் மாதிரியல்ல.

ஓரளவுக்கு இப்போதைய மினி பஸ் வண்டியின் அளவு இருக்குமாயினும், அமைப்பு முறையில் மிகவும் பின்தங்கிய மொடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் நெல்சன் பஸ் வந்தபிறகு இவற்றைத் 'தட்டி பஸ்' என்ற பெயரால் பொதுமக்கள் வழங்குவார்கள். (இப்படியான பெயர்கள் சூட்டுவதில் பொதுமக்களுக்கு ஒரு தனி வல்லமை உண்டு. சமீப காலத்தில் ஒரு வகை விமானத்துக்குச் 'சகடை' என்ற பெயர் சூட்டினார்களே[)

இந்தத் தட்டி பஸ்களில் உள் கூடாரத்தின் சட்டத்தில் 'பிரயாணிகள் 21) என்று எழுதியிருக்கும். முன்பக்கத்தில் ஓட்டுநருக்குப் பக்கத்தில் (லொறிகளில் இருப்பது போல) இரண்டு பேருக்கு இருக்கை உண்டு.

உள்ளே (உள்ளே போவதற்குப் பின்பக்கத்தால் ஏற வேண்டும்) நீளப் பக்கமாக இரண்டு பக்கத்திலும் இரண்டு பலகை ஆசனங்கள் உண்டு. இவை ஒவ்வொன்றிலும் தலா 9 பயணிகள் வீதம் 18 பயணிகள். நடுவில் ஓட்டுநருக்குப் பின்பக்கமாக ஒரு பயணிக்கு இருக்கை எல்லாமாக 21 பயணிகள்.

பொதுவாகப் பத்துப் பன்னிரண்டு பயணிகளோடுதான் பஸ் ஓடிக் கொண்டிருக்கும். இப்போதையைப் போல அந்த பஸ்ஸில் நெருக்கடி கிடையாது. ஆடி அமாவாசைத் தீர்த்தம், நயினாதீவு தேர் போன்ற சில நாட்களில்மட்டுமே 'ஓவலோட்' அமலி துமளியாக இருக்கும்!

பொன்னாலைல் இருருந்து யாழ்ப்பாணத்துக்கு பத்து மைல் பயணம் செய்ய 25 சதம் கட்டணமென் நினைக்கிறேன். டிக்கட் என்று ஒன்றும் கிடையாது. நடத்துனரே பஸ் முதலாளியாகவும் இருப்பார். அல்லது முதலாளிக்கு மிக நம்பிக்கையான ஆளாக இருப்பார். அவர் பணத்தை வாங்கிக் கொள்வார். டிக்கட் வழக்கமே இல்லை.

பஸ் சேவையில் லாபமும் நட்டமும் நடத்துனரின் திறமையிலேயே தங்கியிருந்தது. என்ன சிரமப்பட்டும் பயணிகளைச் சேர்ப்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருப்பார். காரைநகர்ப் பாலத்தில் — சுமார் அரை மைல் தூரத்தில் ட பஸ் வருவதைப் பொன்னாலை றோட்டிலிருந்து கண்டதும், தோளிலிருந்த சால்வையை எடுத்து தலைக்கு மேலே உயர்த்தி விசுக்கிக் காட்டினால், பொன்னாலைச் சந்தியில் வந்து பஸ் நின்றுவிடும். சைகை காட்டிய அந்தப் பயணி வந்து பஸ்ஸில் ஏறும் வரை காத்து நிற்கும். (சால்வையைத் தெரியாதவர்களும் இந்தக் காலத்தில் இருக்கக் கூடும். அந்தக் காவத்தில் எல்லாரும் சால்வை அணிந்திருப்பார்கள். வெயில் நேரத்தில் அது தலைப்பாகையாகி தலையில் ஏறிவிடும். எங்காவது நிலத்தில் உட்கார நேரும்போது சால்வையை மடித்து நிலத்தில் போட்டு அதன் மேல் உட்காருவார்கள். கைகள் முகம் கழுவினால் ஈரம் துடைக்க உதவும். வியர்வைக் காலத்தில் அதை ஒத்தித் துடைக்கவும், விசிறியாக விசுக்கவும் உதவும். சிலரைப் பிடித்துக் கட்டுவதற்குக் கயிறாகவும் மாறும். இப்படிச் சால்வையின் உபயோகம் பலவிதம்.)

ஒருவர் அடுத்த நாள் காலையில் யாழ்ப்பாணம் வருவதாக பஸ் நடத்துனரிடம் சொல்லி வைத்தால், அடுத்தநாள் காலையில் அவர் வீட்டுப் படலையருகே பஸ் வந்து நின்று 'பாம், பாம்' என்று 'கோண்' அடிக்கும் (அந்தக் கோணைக் கூட இப்போது காணோம்!) பஸ் கோண் சத்தம் கேட்டதும் வீட்டுக்குள்ளிருந்து ஒரு சிறுவன் ஓடிவந்து 'ஐயா சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார், நிக்கட்டாம்' என்றான். 'கெதியாய் வரச்சொல்லு தம்பி' என்று சொல்லிவிட்டு நடத்துனர் பஸ்ஸை நிறுத்தி வைத்திருப்பர்! அப்படிப் பயணம் செய்த காலம் அது.



இந்தத் தட்டி பஸ் வண்டிகளில் சாதி வித்தியாசம் பாராமல் கீழ்சாதி மக்களையும் ஏற்றுவார்கள். ஆனால் அந்த மக்கள் பஸ் வண்டியில் ஆசனங்களில் இருக்கக் கூடாது. ஆசனங்கள் ஆட்களின்றி காலியாக இருந்தாலும், இந்த கீழ்சாதிக்காரர்கள் இரண்டு ஆசனங்களுக்கும் நடுவேயுள்ள 'வக்' கில்தான்—கீழே — இருக்க வேண்டும். எங்கேயிருந்தாலும் பயணக் கட்டணம் ஒன்றுதான்!

இந்த நடைமுறையைப் பல காலம் நான் பஸ் பயணத்தின் போது கவனித்திருக்கிறேன்.

கொஞ்சக் காலத்துக்குப் பிறகு 'நெல்சன்' பஸ் பயணச் சேவை தனிப்பட்ட முதலாளிகளிடமிருந்து பஸ் கம்பனிகளுக்கு மாறிவிட்டது. கம்பனிகளின் மீது அரசு பல விதிமுறைகளை விதித்திருந்தது.

காலமும் மாறி வந்தது.

நெல்சன் பஸ்ஸில் இன்றைய பஸ்கள் மாதிரியே குறுக்கு வாட்டில் இருக்கைகள். ஒவ்வொரு இருக்கையில் 2 அல்லது 3 பேர் இருக்கலாம். இந்த இருக்கைகளில் முன்பக்கமாக இரண்டு வரிசைகள் 'பெண்களுக்கு' என்று ஒதுக்கப்பட்டிருக்கும். அவற்றிலும் ஆண்கள் உட்காரலாம். ஆனால் பெண்கள் வந்தால் எழுந்து இடம் கொடுக்க வேண்டும்.

ஒருநாள் நான் இந்த நெல்சன் பஸ்வண்டியில் ஏறி யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தேன். மூளாயில் ஒரு பெரிய வேளாளர் ஏறினார். அவர் ஏறும் போதே பஸ் இருக்கைகளில் இடமில்லை. பெண்களின் இருக்கைகள் மட்டும் வெறுமையாக இருந்தன. அந்த வேளாளர் வெறுமையாக இருந்த பெண்களின் இருக்கை ஒன்றில் இருந்து கொண்டார்.

பஸ் சுமார் அரை மைல் தூரம் ஓடிவந்து சுழிபுரம் சந்தியில் நின்றது. பஸ்ஸை மறித்துச் சிலர் ஏறினார்கள். ஏறியவர்களில் இருவர் பெண்கள். ஏறிய பெண்கள் இருக்க இடமின்றி நிற்கிறார்கள். பெண்களின் இருக்கையில் பெரிய வேளாளர் உட்கார்ந்திருக்கிறாரே!

நடத்துநருக்கு ஆட்களை விளங்கவில்லையோ, அல்லது விளங்கியிருந்தும் நியாயத்தை—சட்டத்தை அமுல் செய்தாரோ தெரியாது.

'ஆரங்கை, பொம்பிளையளின்ரை சீற்றிலை இருக்கிறது? பொம்பிளையள் வந்துவிட்டினம். இடத்தைக் கொடுங்கோ'

நடத்துநரின் குரல் கம்பீரமாகப் பளிச்சென்று கேட்டது.

பெரிய வேளாளர் இரண்டாம் பேச்சின்றி எழுந்து நின்றார். அந்த கீழ்சாதிப் பெண்களுக்கு இருக்க இடம் கொடுத்துவிட்டுத்தான் எழும்பி நின்றார்!

ஆம், அந்தக் 'கற்காலம்' போயே விட்டது!

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடு அகதி முகாம் சென்ற எமது அனுபவம்

**யோ. ஜெயகாந்தன்**

**யா**ழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் மாணவரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட மடு அகதி முகாமிற்கு உதவி செய்வதற்கான பயணத்தில் சென்ற 40 பேரில் நானும் ஒருவன். பல்கலைக் கழகத்திலிருந்து சங்குப்பிட்டி வரையான எமது பயணத்தை செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றிருந்தது. சங்குப்பிட்டிக் கடலைக் கடந்து சென்ற நாம் மறுகரையில் எமக்காகக் காத்து நின்ற கிளிநொச்சி விவசாய பீடத்திகுச் சொந்தமான வானில் ஏறி, மன்னார் மடு அகதிகள் முகாம் நோக்கிப் பயணமானோம். எம்முடன் அகதிகளுக்கு விநியோகிக்கவென பால்மா வகைகளையும் மற்றும் சரீர உதவிகளைச் செய்யத் தேவையான மண்வெட்டி, பிக்கான் போன்ற ஆயுதங்களையும் எடுத்துச் சென்றோம்.

இவ்வருடம் மே மாத முற்பகுதியில் நாம் மன்னார் மடு அகதிகள் முகாம் நோக்கிச் சென்ற போது பல புது அனுபவங்களைப் பெறக் கூடியதாக இருந்தது. சக நண்பர்கள் கலகலப்பாக இருந்தார்கள். எம்மை வழிநடத்திச் சென்ற மாணவ தலைவன் மிக நிதானமாக இருந்தார். நாம் இரவு பத்து மணியளவிற்தான் பல்கலைக் கழக வளாகத்திலிருந்து புறப்பட்டதால், மன்னார் அகதிகள் முகாமை அடைய மறு நாட் காலை ஏழு மணியாகி விட்டது. முதலில் நாம் தச்சனா மருத மடுக்குளத்தில் குளித்தோம். அந்தக் குளம் மிக ஆழமானது. நீண்ட அக் குளக்கரையிலே பல பெண்களும், பிள்ளைகளும் குளித்துக் கொண்டிருந்தார்கள். நாமும் ஒரு கரையில் இறங்கிக் குளித்தோம். இரவு பூராவும் கண் விழித்த எமக்கு அந்தக் குளத்தில் குளிப்பது இதமாக இருந்தது. குளத்திலிருந்து வெளியேறுகின்ற நேரம் சூரியன் உதிக்கத் தொடங்கியிருந்தது. சொற்ப நேரத்தில் எமது வானில் பாணும், வாழைப்பழமும் கொணர்ந்தார்கள். காலைச் சாப்பாட்டைச் சாப்பிட்டோம்.

பின்னர் எல்லோரும் அந்த வானில் ஏறி மடு அகதி முகாமை நோக்கிச் சென்றோம். செல்லும் வழியில் நான் மடு அகதி முகாமைக் கற்பனை பண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு பதினைந்து நிமிட ஓட்டத்தின் பின் எமது வான் மடு அகதிகள் முகாம் அமைந்துள்ள வளவிற்குள் புகுந்து ஓடியது. வானிற்கு வெளியே தலையை நீட்டிப் பார்த்தேன். கண்ணுக்கெட்டாத தூரமெங்கும் கரைகாண முடியாமல் சிறு கொட்டில்கள் பரந்து கிடந்தன. திருவிழாக் காலங்களில் மக்கள் கூடுவது போன்ற ஆரவாரமாக இருந்தது. இதுதான் சிறீலங்கா அரச படைகளின் கொடூரத்தின் எதிரொலி என்று எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

வான் ஒரு மர நிழலில் நின்றது. இறங்கினோம். எங்குமே தெருக்கள் தான். நான் நின்ற இடத்திலிருந்து கிழக்குத் திசையில் பார்த்த போது அங்கே மடுத் தேவாலயம் தெரிந்தது. தேவாலயத்தைச் சுற்றி பல கட்டடங்கள் காணப்பட்டன.

எங்கும் ஒரே பாலைமரமாக இருந்தது. சூரிய ஒளியைத் தடுத்து அகதி முகாம் மக்களுக்கு நிழலைக் கொடுக்கும் பணியை இந்தப் பாரிய மரங்களே பொறுப்பேற்றிருந்தன. பாலை மரங்களில் பழங்கள் சிலிர்த்துக் காய்த்திருந்தது. நான் சில நண்பர்களுடன் தேவாலயத்தை நோக்கிச் சென்றேன். அப்போது ஒரு நண்பன் என்னிடம். 'இன்று ஓய்வெடுக்கும் நாளாம் நாளைக்குத்தான் வேலை தொடங்குவதாம்' என்று கூறினான். அவன் நின்று கூறியது மடுத் தேவாலயத்திற்குச் சொந்தமான நீண்ட அழகிய மண்டபமொன்றினுள். அதற்குள் நாம் படுப்பதற்கு பல விரிப்புக்களை தேவாலய நிர்வாகம் வழங்கியிருந்தது. நானும் அதிலொன்றை எடுத்து விரித்துப் படுத்துக் கொண்டேன். அப்போது நேரம் 10 மணி.

மடுத் தேவாலயம் எமக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்தது. மதிய உணவு அன்று பார்சலாகவே தரப்பட்டது. மான் இறைச்சி என்றார்கள், சாப்பிட்டோம். பின்னர் எம்மை 9 பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவுக்கு மூன்று பேராக எமக்கான பகுதியை ஒதுக்கினார்கள். ஒவ்வொரு பிரிவிற்கும் ஒருவராக அருட் சகோதரியும் வந்தார்கள். நான்கு பேர் கொண்ட எமது பிரிவில் என்னுடன் ஒரு அருட் சகோதரியும், ஒரு அருட் சகோதரரும் வந்தனர். நாம் நால்வரும் சுமார் 500க்கு மேற்பட்ட குடும்பங்களைக் கண்டு கதைத்தோம்.

மேலோட்ட அகதிக முகாம் அசைவைப் பார்த்தால் ஏதோ பெரும் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று தோன்றும். ஆனால் ஒவ்வொரு குடும்பத்துடனும் கதைக்கும் போதுதான் அகதிகள் முகாமின் சில அவல நிலைகள் வெளித் தெரியும். மடு அகதிகள் முகாமிலே எவ்வளவுக்கெவ்வளவு மிக வறுமையான மக்கள் இருக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு கொழுத்த பணக்காரர்களையும் காணக்கூடியதாக இருந்தது. எல்லோரும் எம்மை இன்முகத்துடன் வரவேற்றனர். அகதி ஏழை மக்களிற்குக் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய அறிவு போதாததால் பொருளாதார இயல்விற்கு மிஞ்சிய பிள்ளைகளைப் பெற்று வைத்திருந்தார்கள். பிள்ளைகள் பெரும்பாலும் இடைவெளியில்லாமல் வருஷத்துக்கொன்று என்ற வயதிலேயே காணப்பட்டார்கள், கணவனில்லாத விதவைகளைக் கண்டோம். மனைவியை இழந்த ஆண்களைக் கண்டோம். எத்தனையாயிரம் மனித மனங்களின் விருப்பு — வெறுப்புக்களை இனம் பிரித்துத் தெரிந்து கொண்டோம்.

குழாய் மூலம் வரும் தண்ணீருக்கு நீண்ட வரிசையில் குடத்துடன் நிற்கும் பெண்கள் அடிக்கடி அயல் குடிசைக்காரியுடன் வீண் வம்புப் பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருக்கும் பெண்கள் என்று பல இயல்புடன் நாம் அவர்களைப் பார்த்தோம். கிணற்றடியில் பல ஆண்களும் பெண்களும் சேர்ந்துதான் குளிப்பார்கள். பெண்கள் ஆண்களுடன் சரிசமமாக எதுவித வெட்கமுமின்றி சாதாரணமாகக் குளித்துக் கொண்டும் — மறைவின்றியே உடைகளை மாற்றிக் கொண்டிருந்ததும் பாரதியின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம்’ என்பதை எனக்கு ஞாபகமூட்டியது. 10 — 12 வயது சிறுவர்களும், சிறுமியர்களும் அம்மணமாகவே குளித்துக் கொண்டிருப்பார்கள். இதைப் பார்க்கும் போது பெரும் வேதனையாக இருக்கும்.

நாம் குடும்பங்களைச் சந்தித்துக் கொண்டு செல்லும் போது ஒரு நாளைக்கு இரண்டிற்கு மேற்பட்ட சா வீடுகளையும் சந்திக்க வேண்டி வரும். பிரேதத்தைச் சுற்றி நான்கு அல்லது ஐந்து பேர் அழுது கொண்டிருப்பார்கள். பல வீடுகளில் சின்னமுத்து, கொப்பிளிப்பான், கூகைக்கட்டு போன்ற வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களாகக் கண்டோம். பரவலாக கண் நோயினால் பீடிக்கப்பட்டிருந்தனர். இவை எல்லாம் தொற்று நோய்கள் என்பதால் மிகவும் அவதானமாக இருக்கச் சொன்னோம். பெரும்பாண்மையான அகதிக் குடும்பங்கள் இயன்றவரை சுகாதாரத்தைப் பேணிக் கொண்டிருந்தார்கள்.

நாம் சென்ற மூன்றாம் நாள் சரீர வேலைகளைத் தொடங்கினோம். வாய்க்கால் துப்பரவு, வடிகால் துப்பரவு, மல சல குழி வெட்டுதல். கிணறு துப்பரவு செய்தல் போன்ற வேலைகளைச் செய்தோம். இதில் நாம் வாய்க்கால் ஒன்றைத் துப்பரவு செய்ய முனைந்து மிகவும் கஷ்டப்பட்டு விட்டோம். ஆனால் சில நண்பர்கள் களைக்காமல், அருவெருப்படையாமல் மிகவும் உற்சாகமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

அகதி முகாமிற்குள் பாடசாலை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். பெருந் தொகையான மாணவர்கள் மரத்தின் கீழ் தரையில் இருந்து கல்வி பயின்று கொண்டிருந்தார்கள். கல்வி கற்பிப்பவர்களில் பலரை யாழ். பல்கலைக் கழகத்தில் கண்ட முகமாக இருந்தது. சில மாணவர்களுக்கு கொப்பி, பேனைப் பிரச்சினை இருந்தது. என்னையும் ஒரு தடவை உயர் வகுப்பு மாணவர்களுக்கு அரசியலைப் போதிக்கும்படி கேட்டார்கள், போதித்தேன். அந்த வகுப்பில் 30 க்கும் மேற்பட்ட பெண்கள் இருந்தார்கள். ஆண்கள் நான்கே நான்கு பேர் தான். அவர்கள் மிகவும் நன்றியுணர்வுள்ள மாணவர்களாக இருந்தார்கள்.

இறுதி நாள் நாம் மிகவும் கலகலப்பாகவும், உற்சாகத்துடனும் இருந்தோம். வழியனுப்புவதற்கான கூட்டமொன்று மடு தேவாலய நிர்வாகம் ஏற்பாடு செய்து எம்மையெல்லாம் பாராட்டி மீண்டும் எங்களை மடு அகதிகள் முகாமிற்கு விஜயம் செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் இறுதி நாளான ஆறாம் நாள் இரவு பத்து முப்பதளவில் எத்தனையோ துன்பங்களில் துவழும் மனித மனங்களில் இருந்து விடுபட்டுக் கொண்டோம். மாணவர்கள் புரட்சிப் பாடல்களை உரத்த குரலில் பாடினார்கள். சொற்ப வேளை அகதி முகாம் குடில்கள் அமைந்த தெருவினால் ஓடிய எமது வான் பின்னர் காட்டுப் பக்கமாக ஓடியது. நாம் மறுநாள் காலை பல்கலைக்சழகம் வந்து சேர்ந்தோம். மிகவும் அன்பாக வழியனுப்பி வைத்த எமது துணைவேந்தர் திரு. அ. துரைராசா அவர்கள் எமது அனுபவங்களைக் கேட்கத் தொடங்கினார். இந்தப்பயணம் எமக்கு பெரு ஆறுதலையும் கொடுத்திருக்கிறது. ●





**எந்தக் கேள்வியாக இருந்தாலும் தயங்காமல் கேளுங்கள். பலராலும் விரும்பிப் படிக்கப்படுவது இந்தத் தூண்டில் பகுதியாகும். ஆகவே சுவையான இலக்கியத் தரமான, ஆர்வமான கேள்விகள் வரவேற்கப்படுகின்றன. சுவைஞர்கள் என்ன நினைக்கின்றனர், அவர்களுடைய மனக் கருத்து என்னென்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கும் மனந்திறந்து கதைப்பதற்கும் ஏற்ற ஒரு களம் இது. இளந் தலைமுறையினரின் மன விருப்பங்களை, அவர்களது இலக்கிய அபிலாஷைகளை, சிந்தனை ஓட்டங்களை உணர்ந்து. அறிந்து கொள்வதற்கும் அவர்களது இதயங்களைச் சமீபிப்பதற்கும் ஒரு தளமே இத்தூண்டில். தூண்டில் கேள்வி — பதிலில் நீங்கள் கலந்து கொள்வதின் மூலம் உங்களுடைய அறிவை விருத்தி செய்வதுடன் நமது தேடல் முயற்சிக்கும் ஆதரவு நல்குகின்றீர்கள்.**

# தூண்டில்

● வளர்ந்து வரும் எழுத்தாளன் ஒருவன் சில வேளைகளில் சிறு தவறுகள் விட்டால் அதனைச் சுட்டிக் காட்டி கண்டனக் கணைகளைத் தொடுப்பவர்களைப் ப்ற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**எஸ். குணசேகரன்**
தொண்டைமானாறு.

ஒன்றை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தவறுகள் குற்றங்களல்ல. அவை திருத்தப்பட வேண்டியவை. அப்படியாக இளந் தலைமுறையினரின் சிறு தவறுகளைக் கண்டனம் பண்ணி அவர்களது மெல்லிய உணர்வுகளைப் புண்படுத்துபவர்கள் தான் கண்டிக்கப்படத் தக்கவர்கள். இதில் இன்னொரு பக்கத்தையும் நான் அடிக்கடி பார்த்து வருபவன். இப்படியான இள நெஞ்சுப் படைப்பாளிகளை ஊக்கப்படுத்த நான் அவர்களை எனக்குச் சமமானவர்களாகக் கருதி, கீழிறங்கிப் பழகுவதுண்டு. அவர்களது படைப்புக்களை பிரசுரிப்பதுண்டு. அப்படியான சில இளம் படைப்பாளிகள் திடீரென முதிர்ந்து விட்டவர்களைப் போல, எனக்கே பந்தா காட்டி பாவலாப் பண்ணுவதை நான் யாரிடம் போய்ச் சொல்லி அழுவது? கண்டனஞ் செய்து முளையிலேயே கருகச் செய்வது தவறு. அதே சமயம் தலை கொழுத்துப் பந்தா காட்டுவது அதை விடப் பெருந்தவறு.

● இந்த நெருக்கடியான கால கட்டத்தில் எப்படி உங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளால் மல்லிகையை வெளியிட முடிகிறது?

கைதடி, **ச. பூரணலிங்கம்**

உண்மையைச் சொல்லுகின்றேனே. மன ஓர்மம்தான் அடிப்படைக் காரணம். சொல்லொணாக் கஷ்டம் ஏற்பட்டதுண்டு. நினைந்துப் பார்க்கவே முடியாத சிரமங்கள் வழி மறித்ததுண்டு. இருந்தும் மல்லிகையை விரும்பி வாசிக்கும் தரமான சுவைஞர்களை மனசில் எண்ணிப் பார்க்கும் போது இந்த நெருக்கடிகள் ஒன்றும் எம்மைத் தடுக்கவில்லை. அர்ப்பணிப்பு உணர்வும் செய்யும் தொழிலை ஆத்மார்த்திகமாக நேசிக்கும் மனப் பாங்கும் இருந்தால் நெருக்கடிகளே படிக்கட்டுகளாய் அமைந்து விடுகின்றன.

● அமைச்சர்களில் சிலர் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா காலில் விழுந்து வணங்குகின்றனரே, இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

கொழும்பு – 11, **எம். கணேசன்**

பெருந் தலைவர்கள் ராஜாஜி, காமராஜர், அண்ணா, கருணாநிதி போன்றவர்கள் அலங்கரித்த முதலமைச்சர் பதவி இன்று பூசை செய்யும் அம்மனுக்குச் சமானமாகி விட்டது என்பதுதான் எனது கருத்தாகும்.

● மல்லிகைக்குச் சொந்தமாக அச்சு இயந்திரம் வாங்கி விட்டதாகச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தீர்கள். கையிலுள்ள மணிவிழாப் பணத்தை முற்பணமாகச் செலுத்தி வாங்கியதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள், உண்மையாகவே மகிழ்ச்சியான செய்திதான் அது. மிச்சக் கடனுக்கு என்ன செய்தீர்கள்?

மூளாய். **ஆர். காந்தன்**

சொன்னால் நம்பமாட்டீர்கள். அந்தக் குறிப்பைப் படித்த பலர் எனக்கு மனப்பூர்வமாக உதவுகின்றனர். 'பொருளாதாரக் கஷ்டங்களை எண்ணி மனங்குலையவேண்டாம், தொடர்ந்து முயலுங்கள்' என உற்சாகப்படுத்தி கணிசமான தொகை தந்து உதவுகின்றனர். என் மீதும் மல்லிகை மீதும் இந்த மண்ணின் நெஞ்சங்கள் வைத்திருக்கும் பாரிய விசுவாசத்தை எண்ணிப் பிரமித்துப்போய் விடுகின்றேன்.

● மனதைச் சிலிர்க்கப் பண்ணிய சம்பவம் ஏதாவது ஒன்றைச் சொல்ல முடியுமா? சமீபத்தில் நடந்ததாக அது இருக்க வேண்டும்.

அச்சுவெலி, **க. நிரஞ்சன்**

திருநெல்வேலிப் பக்கம் போய்விட்டு பலாலி வீதியால் யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தேன். வழியில் மல்லிகைச் சுவைஞர் ஒருவர் இடை மறித்தார். பக்கத்தே உள்ள வீட்டிற்கு அழைத்துச் சென்று இரண்டு கிலோ செத்தல் மிளகாயும் ஒரு சீப்பு வாழைப் பழமும் பொலிதீன் பையில் போட்டு பின் கரியலில் தானே கட்டி விட்டார். நாவலர் வீதியில் ஒரு நாள் சைக்கிளில் வந்து கொண்டிருந்தேன். ஒரு நண்பர் இளைஞர், திருமணமாகாதவர். ஒரு டின் 'அல்பா' பாமோயிலைத் தந்தார். நான் வீட்டு விவகாரங்களையும் பொது வாழ்க்கையையும், எழுத்துத் துறையையும் போட்டுக் குழப்பாதவன். இருந்தும் எனக்கென ஒரு வீடு வாழ்வு, சில வயிறுகள் உண்டு, என மனசார உணர்ந்து இந்தக் கஷ்ட காலத்தில் நான் எதிர்பார்க்காமலே என்னை எனக்கு உணர்த்திய அந்த இரு நெஞ்சங்களை இன்று நினைக்கும்



போது கூட என் நெஞ்சில் ஈரம் சுரக்கின்றது.

● உங்களைக் கொழும்புப் பக்கம் சில காலமாகக் காண முடியவில்லையே? நீங்கள் கொழும்பு வந்தால் ஏதாவது ஒரு இலக்கியக் கூட்டத்தில் கலந்து கொள்வீர்களே' என்ன காரணம் வராததற்கு?

வெள்ளவத்தை, **த. ரவீந்திரன்**

முன்னர் மாசம் ஒரு தடவை எப்படியும் எனது கொழும்புப் பயணம் அமையும். கடந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் ஒரேயொரு தடவைதான் கொழும்பு வரும் தேவை ஏற்பட்டது. கொழும்பு வந்து திரும்ப எக்கச்சக்கமான செலவு. அத்துடன் பிரயாணச் சங்கடம், மல்லிகை அதற்குத் தாக்குப்பிடிக்க முடியாது. இடையிடையே வரத்தான் ஆசை. விளம்பரப் பணம், சந்தாக்காசு, விற்பனைப் பணம் இப்படியாக ஏராளமான அலுவல்கள் உண்டு.

● எழுத்தாளர் பேரனுடைய சடுதி மரணம் உங்களுக்குப் பேரதிர்ச்சியாக இருந்திருக்குமே. மல்லிகைக்கு வலது கை இழப்பாகுமே.

உடுவில், **யோ. சண்முகன்**

சோகத்தையும் மீறிய பெருங் கோபத்தை ஏற்படுத்தியது. அரச பயங்கரவாதத்தினால் தனித் தனியாகப் பலர் பலியாகியுள்ளனர். ஒரு குடும்பமே பூண்டற அழிக்கப்பட்டது இதுவாகத்தான் இருக்கும். இது சோகத்திலும் பெரிய சோகம். ஓர் அரசாங்க ஊழியர் பேரன். அத்துடன் மிக அமைதியாக இருந்து இலக்கிய சேவை செய்து வந்தவர். இப்படியானவர் அழிக்கப்பட்டது மல்லிகைக்கு மாத்திரம் இழப்பல்ல; நமது இலக்கியத்திற்குமே பெரிய நஷ்டமாகும். கடைசியாக அவர் எழுதிய விவரணக் கட்டுரை கூட கடந்த மல்லிகையில் பிரசுரமாகிய கட்டுரைதான்?

● இந்தப் பயங்கரமான கடதாசித் தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலையில் பக்கங்களைக் குறைக்காமல் எப்படி உங்களால் மல்லிகையை வெளிக் கொண்டு வர முடிகிறது?

சித்தங்கேணி, **ஆர். தேவராசன்**

விடாப்பிடியான மன ஓர்மம்தான் காரணம். கடதாசித் தட்டுப்பாட்டால் தினசரிகளே திணறும் பொழுதும் மல்லிகையை நான் வழமை போல, வெளியிடுவதற்குக் காரணம் மல்லிகையை உளமார நேசிக்கும் சுவைஞர்களின் ஒத்துழைப்புத்தான்.

● 'மல்லிகைப் பந்தல்' வெளியீடுகள் சமீப காலத்தில் ஒன்றும் வெளிவரவில்லையே! தொடர்ந்து புத்தகங்கள் வெளிவரவுள்ளதா?

உரும்பிராய், **எம். ராம்குமார்**

கடதாசித் தட்டுப்பாடுதான் புதிய வெளியீடுகள் வெளிவராமைக்கு அடிப்படைக் காரணம். ஐந்து புதிய நூல்களை வெளியிடச் சகல ஆயத்தங்களும் செய்து விட்டுக் காவலிருக்கின்றேன். மின்சாரம், பேப்பர் கிடைத்தவுடன் சுடச் சுடப் புத்தகங்களை உங்கள் கரங்களில் தவழும்படி செய்வேன்.

● மார்க்ஸிஸம் தோல்வி கண்டு விட்டதாகப் பேசிக் கொள்ளுகிறார்களே, உண்மைதானா, அது?

நீர்வேலி, **பா. சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்ஸிஸம் ஒரு சமூக விஞ்ஞானம். விஞ்ஞான தத்துவம். விஞ்ஞானம் நாளடைவில் தன்னைத் தானே புதுப்பித்துச் செழுமையடையுமே தவிர, தோற்றுப்போய் விடாது. இது வரட்டு நம்பிக்கையல்ல; மெய்யான அறிவு சார்ந்த முடிவு, ஒரு விஞ்ஞான பூர்வமான சர்வதேசத் தத்துவம் என்கிற முறையிலும் மனுக் குலம் கற்பனையில் கண்ட நடைமுறை இலட்சியம் என்ற வகையிலும் அது செத்து மடிந்து விடவில்லை. அது தனது சர்வ தேசக் கவர்ச்சியை மீண்டும் பெற்றுப் புத்துயிர் பெற்றுத் திகளும் என்பது சர்வ நிச்சயம்.

● மல்லிகை சமீப காலங்கலாக மாதா மாதம் ஒழுங்காக வரவில்லையே ஏன்?

பசறை, ஏ. மொகமட்

எம்து பிரச்சினைகளைத் தூரந் தொலைவிலுள்ள உங்களால் சரிவரப் புரிந்து கொள்ள மூடியாது. அச்சகங்களே நடத்த முடியாத அவல நிலை. மூலப் பொருட்கள் கிடைக்க வழி இல்லை. மின்சாரத்தைப் பெற முடியாத கஷ்டம். இவைகளை மீறி மல்லிகை போன்ற சிற்றிலக்கிய ஏடுகள் உயிருடன் வாழ்வதே பெரிய அதிசயமாகும்.

● பேராசிரியர் கைலாசபதி இப்பொழுது இருந்திருந்தால் ஈழத்து இலக்கியத்திற்குப் பேருதவியாக அமையுமல்லவா?

கொழும்பு - 6, தா. பெனடிக்ற்

உண்மை. கைலாசபதி போன்றவர்களின் விமரிசன வீச்சும், இலக்கிய ஆளுமையும் முகிழ்ந்து வரக் கூடிய கால கட்டத்தில், பலரும் அவரது அறிவு சார்ந்த இலக்கியப் பார்வையைப் புரிந்து கொள்ளக் கூடிய சூழ்நிலையில் அவர் மறைந்தது மிகப் பெரிய துரதிர்ஷ்டமே.

● மல்லிகை இலட்சங்களைத் தாண்டுவது எப்போது? நமது நாட்டில் இலட்சக் கணக்காக விற்கும் சஞ்சிகைகள் தோன்றுமா?

மானிப்பாய், க. கனகவேல்

எனது இலட்சியம் இலட்சங்களல்ல; இலட்சங்களுக்கு ஆசைப்படுவதும் நல்லதல்ல. அப்படி வியாபார மயப்படுத்தப் படுவது மல்லிகையின் நோக்கமுமல்ல. ஒன்றை உணர்ந்து கொள்ளுங்கள். மணிக்கொடி ... மணிக்கொடி என இன்று தமிழகத்தில் பேசப்படும் சஞ்சிகை ஆயிரம் பிரதிகள் கூட அச்சடிக்கப்பட்டதில்லை. இந்த மண்ணில் இலட்சக் கணக்காக விற்பனையாகக் கூடிய வணிக சஞ்கிகைகள் தோன்றக் கூடிய வாய்ப்பு வசதிகள் இப்போதைக்கு இல்லை. ●

---

இச் சஞ்சிகை 234 பி, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் வசிப்பவரும், ஆசிரியரும், வெளியிடுபவருமான டொமினிக் ஜீவா அவர்களினால் 'மல்லிகைப் பந்தல்' அச்சகத்தில் அச்சிடப் பெற்றது. அட்டை: யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகம்



ESTATE SUPPLIERS
COMMISSION AGENTS

VARIETIES OF
CONSUMER GOODS
OILMAN GOODS
TIN FOODS
GRAINS

THE EARLIEST SUPPLIERS
FOR ALL YOUR

NEEDS

Wholesale & Retail

Dial 26587

TO

E. SITTAMPALAM & SONS.

223, FIFTH CROSS STREET,
COLOMBO-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Mallikai** Registered as a News Paper at G. P. O. Sri Lanka

Q. D. 88 / NEWS / 91

Dealers in:

Timber Plywood & Kempas



Phone:

With Best Compliments of:

# STAT LANKA

COLOMBO-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org